# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 02 அதிர்வு 22 ஏப்ரல் 2019 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162



SHIPPING SCHEDULE

| CUT OFF | SL ARRIVAL |
|---|---|
| APR 06 | MAY 14 |
| APR 13* | MAY 21 |
| APR 27 | JUN 04 |
| MAY 04 | JUN 11 |
| MAY 11* | JUN 18 |
| MAY 18 | JUN 25 |
| MAY 25* | JUL 02 |
| JUN 01 | JUL 09 |

Transco CARGO APP

SHIPMENT DATES
PICK/DROP LOCATIONS
QUICK QUOTE
AND MORE...

DOWNLOAD TODAY!

*Only Available at Transco Offices

1300 187 267 | TranscoCargo.com.au






UNBEATABLE RATES

FIRST HOME BUYER & REFINANCE SPECIALS

Lowest Rates From 3.50%# p.a.



OPULENT FINANCE

GEARING YOUR FUTURE

Dayan

Charted Tax Advisor (CTA), FIPA, FFA, AMC
B.Sc.M.Com M.IntBus DipFinServ
Owner / Senior Mortgage Consultant

"Limited time offer"

$ 2000 refinance rebate#

M: 0423 272 600 | T: (03) 8838 8726

# Subject to Lender Credit Policy, LVR, LMI and other special conditions related to individual Banks' offers.

Waverley Toyota - You'll LOVE us!

TOYOTA



Buy with Confidence

Proud to be Melbourne's longest serving automotive group

Finance Available!

- Self Employed & ABN Holders
- Student Visa's
- Overseas Licence
- Low Deposit
- New Employment
- New Arrivals

SPRINGVALE ROAD WAVERLEY ROAD NEW & USED

DL11333

All enquires contact Jason Wijeratne on (03) 8544 2288 or 0422 974 499

We speak your language




ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

OPULENT FINANCE | GEARING YOUR FUTURE



Lowest Rates From 3.50% p.a. #

"Limited time offer"

$1,000 special purchase rebate with your next house

# UNBEATABLE RATES

## FIRST HOME BUYER & REFINANCE SPECIALS

**FIRST HOME BUYERS**
Buy your dream home with just 5% deposit.#

Please call Dayan for friendly service

- **INVESTMENTS PROPERTY LOANS**
  Free TAX advice to maximise your TAX REFUNDS
- **DOCTORS, DENTISTS, VETS, ACCOUNTANTS, LAWYERS**
  Don't pay mortgage insurance up to 90% LVR #
- **AUSTRALIA WIDE SERVICE**
  VIC, NSW, QLD, WA, SA, NT, ACT, TAS

**$ 2000 refinance rebate #**

- Take CASH OUT to pay the deposit on your next house.
- No Savings? No worries, buy with family guarantee.
- Consolidate your personal loans & credit cards.



**Dayan**
Charted Tax Advisor (CTA), FIPA, FFA, AMC
B.Sc.M.Com M.IntBus DipFinServ
Owner / Senior Mortgage Consultant

**Suite 4, 251 Blackburn Road**
**Mount Waverley VIC 3149**
**(Near the Syndal Station)**


Email: dayan@opulentfinance.com.au | Web: www.opulentfinance.com.au

Visit Us Online

**M: 0423 272 600 | T: (03) 8838 8726**

# Subject to Lender Credit Policy, LVR, LMI and other special conditions related to individual Banks' offers.

Australian Credit Licence Number 389087




Daily non-stop flights from Melbourne to Colombo with Srilankan Airlines

Enjoy the comforts of flying our latest A330-300 aircraft from Melbourne to visit your friends and relatives this Avurudu season.

1300 853 081
info@srilankanau.com.au
srilankan.com

*Fares are inclusive of Taxes & subject to change without prior notice.
*Terms and Conditions apply.

# ஆஸ்திரேலிய வரவு-செலவுத்திட்டம் 2019-2020




2019 - 2020 ஆண்டுக்குரிய வரவு - செலவுத்திட்டம் அண்மையில் ஆஸ்திரேலிய நிதி அமைச்சரால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கபட்டது. கட்சியில் ஏற்பட்டுள்ள பல பிளவுகள், முன்னாள் பிரதமரின் வெளியேற்றம், அரசியல் கொள்கைளில் தடுமாற்றம் என்று பல்வேறு காரணங்களினால் தளம்பிக்கொண்டிருக்கும் லிபரல் கட்சி தலைமையிலான கூட்டணி அரசு, வரப்போகும் தேர்தலை எவ்வாறு சந்திக்கப்போகிறது என்பதை தீர்மானிக்கும் சக்திகளில் ஒன்றாக இந்த வரவு - செலவுத்திட்டம் பார்க்கப்பட்டது.

முன்வைக்கப்பட்ட இந்த வரவு - செலவுத்திட்டம் ஓரளவுக்கு பொது மக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்துகொண்டதாகவே அதற்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பில் தெரியவருகிறது.

அந்தவகையில் இந்த வரவு - செலவுத்திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் யார், பயனடைந்தவர்கள் யார் என்பது குறித்த முக்கிய விடயங்களை முன்வைத்து எஸ்.பி.எஸ். தமிழ் ஊடகம் சிறு குறிப்பை வரைந்திருந்தது.

அந்த விவரங்கள் வருமாறு :

## பாதிக்கப்பட்டவர்கள்

### அகதிகள்

ஆஸ்திரேலியாவில் புதிதாக குடியேறிய அகதிகள், துழடியஉவளைந உள்ளிட்ட வேலையற்றோருக்கான சேவைகளைப் பெறுவதற்கு 12 மாதங்கள் வரை காத்திருக்க வேண்டும். இதற்கு முன்னர் இக்காலப்பகுதி 6 மாதங்களாக காணப்பட்டது. புதிதாக வரும் அகதிகள் குறித்த 12 மாத காலப்பகுதியில் நாட்டில் குடியேறுவதிலும் ஆங்கிலத்தைக் கற்பதிலும் அதிக கவனம் செலுத்தலாம் என குறிப்பிடப்படுகிறது. இதன்மூலம் அரசு நான்கு ஆண்டுகளில் 77 மில்லியன் டொலர்களை சேமிக்கலாம் என கருதுகின்றது.

### புதிய குடியேறிகள்

ஆஸ்திரேலியாவுக்குள் ஆண்டுதோறும் உள்வாங்கப்படுவோரின் எண்ணிக்கை ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி 190000 இடங்களிலிருந்து 160000 இடங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

### Welfare கொடுப்பனவு பெறுவோர்

நலன்புரி கொடுப்பனவு பெறுவோரின் தொழில்வருமானம் குறித்த தரவுகள் மற்றும் அறிக்கையிடல் ஸயவய-அயவஉாஸைப தானியங்கி இயந்திரங்கள் மூலம் கணக்கிடப்படவுள்ளது. இதன்மூலம் 2.1 பில்லியன் டொலர்களை சேமிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வங்கிகள்

ரோயல் கமிஷன் விசாரணையைத் தொடர்ந்து வங்கிகள் மீதான கட்டுப்பாடுகளை இறுக்கமாக்கியுள்ள அரசு தொடர்ந்தும் அவற்றைக் கண்காணிப்பதற்கென நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### NDIS திட்டம்

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய காப்புறுதித் திட்டத்தை முழுவதுமாக செயற்படுத்துவதில் காணப்படும் தாமதநிலையையடுத்து, இதற்கென ஒதுக்கப்பட்ட நிதியில், பயன்படுத்தப்படாத 1.6 பில்லியன் நிதி, வேறு திட்டங்களில் செலவிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### வெளிநாட்டு மருத்துவர்கள்

ஆஸ்திரேலியாவிற்கு வந்து பணிபுரியும் வெளிநாட்டு மருத்துவர்களுக்கான இடங்களைக் குறைப்பதென ஆஸ்திரேலிய அரசு முடிவுசெய்துள்ளது. கடந்த ஆண்டும் வெளிநாட்டு மருத்துவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் குறைக்கப்பட்டிருந்த நிலையில், இவ்வாண்டு இது மேலும் 155 இடங்களால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அடுத்த 4 ஆண்டுகளில் 300 மில்லியன் டொலர்களை சேமிக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பயனடைந்தவர்கள்

### குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் ஈட்டுபவர்கள்

48 ஆயிரம் டொலர்கள் முதல் 90 ஆயிரம் டொலர்கள் வரை ஆண்டு வருமானம் ஈட்டுபவர்கள் 2018-19 ஆம் ஆண்டுக்குரிய வருமான வரியை தாக்கல் செய்யும்போது, அவர்கள் கட்ட வேண்டிய வரியிலிருந்து சுமார் 1080 டொலர்கள் வரிக்குறைப்பு செய்யப்படும்.

### புதிதாக தொழிற்பயிற்சி பெறுவோர்

புதிதாக தொழிற்பயிற்சிபெறும் சுமார் 80 ஆயிரம் பேருக்கு தலா இரண்டாயிரம் டொலர்கள் வரை கொடுப்பனவு வழங்கும் வகையில் 525 மில்லியன் டொலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சிறுவணிகர்கள்

50 மில்லியன்வரை வருமானமீட்டும் சிறுவணிகர்களுக்கான instant asset write-off தொகை 25 ஆயிரம் டொலர்களிலிருந்து 30 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

### பொதுப்போக்குவரத்து பயணிகள்

பயணிகளுக்கான வாகனத்தரிப்பிடங்கள் அமைப்பதற்கென 500 மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ள அதேநேரம் பல வீதி அபிவிருத்திப் பணிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

### உளவளத்துறை

உளவள மேம்பாடு குறித்த உதவிகளை வழங்குவதற்கென ஒதுக்கப்பட்ட 461 மில்லியன் டொலர்களின் ஒரு பகுதியாக, புதிதாக 30 Head space மையங்கள் உருவாக்கப்படும் அதேநேரம் பூர்வகுடி இளைஞர்களுக்கான மனவள உதவிகள் வழங்கப்படவுள்ளன.

### முதியோர்

வயதுமுதிர்ந்த ஆஸ்திரேலியர்களுக்கான புதிய பத்தாயிரம் home care packages-களுக்கெனவும் residential care-க்கெனவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பராமரிப்பாளர்கள்

பராமரிப்பாளர்கள் விடுமுறை எடுத்துக்கொள்வதற்கு வழியேற்படுத்தும் வகையில் சுமார் 84 மில்லியன் டொலர்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

# மனந்திருத்தும் மருந்துடனே வந்துவிடு!



புத்தாடை வாங்கிடுவோம்
புத்துணர்வு பெற்றிடுவோம்
முத்தான முறுவலுடன்
சித்திரையை காத்திருப்போம்
எத்தனையோ சித்திரைகள்
எம்வாழ்வில் வந்தாலும்
அத்தனையும் அடிமனதில்
ஆழமாய் பதிந்திருக்கும்

சொத்துள்ளார் சுகங்காண்பர்
சொத்தில்லார் சுகங்காணார்
எத்தனையோ துயரங்கள்
இருந்தேங்க வைக்கிறது
அத்தனையும் பறந்தோட
சித்திரைதான் உதவுமென
நம்பிடுவார் வாழ்வினிலே
நலம்விளைப்பாய் சித்திரையே

அரசியலில் அறமிப்போ
அருகியே போகிறது
ஆண்டவனின் சன்னிதியில்
அநியாயம் நிகழ்கிறது
அறமுரைப்போர் அனைவருமே
அடக்கமாய் ஆகிவிட்டார்
அடங்கிநிற்பார் தனையெழுப்பி
அழைத்துவா சித்திரையே

வாழ்வளிக்கும் நாடதனில்
வழிமுறைகள் மாற்றுகிறார்
ஈனமுடை செயலனைத்தும்
எண்ணெயெண்ணி ஆற்றுகிறார்
பிறந்தமண்ணின் துயரங்களை
பிய்த்தெறிந்து நிற்குமவர்
மனந்திருத்தும் மருந்துடனே
வந்திடுவாய் சித்திரையே

சன்மார்க்கச் சாலையெல்லாம்
சரிவையொட்டிப் போகிறது
பொல்லாத கூட்டமொன்று
பொறுப்பேற்று நிற்கிறது
நல்லவல்ல நாட்டினிலே
நாளும்வாழ்க்கை போராட்டம்
அல்லலெல்லாம் அகற்றிவிட
அமைந்திடுவாய் சித்திரையே

எத்தனைதான் இடர்வரினும்
இறைவனே துணையென்னும்
எண்ணமதை மனங்களிலே
இருத்திவிடு சித்திரையே
இன்பமொடு சுகவாழ்வு
எல்லோர்க்கும் கிடைக்கவென்று
எண்ணமுடன் எழுச்சிபெற்று
எழுந்தாவா சித்திரையே....



மகாதேவ ஐயர்
ஜெயராமசர்மா
(மெல்பேர்ண்)


MKS
MKS Spices'n Things
Finest Quality Guaranteed
We bring the authentic taste of spices and cooking ingredients to you, find out more...
GROCERIES
BOLLYWOOD ENTERTAINMENT
DINE IN
ASHWOOD
382 Warrigal Road
9885 9932
DANDENONG
23 Pultney Street
9701 3165
EPPING
1/88 Cooper St
9424 9162
PRESTON
258 High Street
9416 9011
St ALBANS
276 Main Road East
9366 4141
www.mks.net.au

எதிரொலி
மெல்பேர்ண்
ETHIROLI
குரல்:02 அதிர்வு:22 ஏப்ரல், 2019 தொ.பே:1800 960 162

## கன்பரா ரி20 ஆரம்பம்!

தேர்தல் திருவிழா ஆரம்பமாகிவிட்டது. பண்டிகைக் கால வியாபாரிகள் போல அரசியல்வாதிகள் மக்களிடையே ஓடிவந்து கடைவிரிக்கத்தொடங்கிவிட்டார்கள். உட்கட்சி பூசல்களால் கடுங்காயமடைந்த லிபரல்கள் எந்த வலியும் இல்லாதது போல கண்களை துடைத்துக்கொண்டு மக்களைப்பார்த்து வாக்கு கேட்டு சிரிக்கிறார்கள். லேபர் கட்சியினரோ இதேபோன்ற உட்கட்சி காயங்கள் நிறைந்த அனுபவங்கள் எல்லாம் கற்றுத்தேர்ந்து ஓரளவுக்கு நேர் சீரான மனத்திடத்துடன் உறுதியாக அரசியல் தரப்பாக மக்களுடன் மனம் விட்டுப்பேசுகிறார்கள்.

வழக்கம்போல இம்முறையும் அகதிகள் பிரச்சினை, குடியேற்றவாசிகள் விவகாரம் போன்றவற்றை இரண்டு கட்சியினரும் ஆழமாகவும் நீளமாகவும் பேசுகிறார்கள். இவர்களில் லிபரல் கட்சியினர் போடுகின்ற அலப்பறைகள் தாங்கமுடியாத ஒப்பாரிகளாக காணப்படுகின்றன. மானஸ் – நவுறு தீவுகளிலுள்ள அகதிகளை மருத்துவ காரணங்களுக்காக ஆஸ்திரேலியாவுக்கு கொண்டுவந்தால், ஆழிப்பேரலையே நாட்டுக்குள் வந்துவிடும் என்று அலறுவதைப்போல ஓடிப்போய் கிறிஸ்மஸ் தீவுகளிலுள்ள அகதிகள் முகாமை மீண்டும் திறக்கிறார்கள். அநேகமாக நாளை காலை இந்த நாட்டுக்கு அகதிப்பேரலை வந்துவிடலாம் என்று தொலைக்காட்சிகளில் குந்தியிருந்து கால நிலை அறிவிப்புக்களை கூறிக்கொண்டிருக்கிறார்கள். எதிரிகளைவிட அகதிகளே இந்நாட்டுக்கு பிரச்சினைக்குரியவர்கள் என்ற தொனியில் லிபரல் கூட்டணி செய்கின்ற பிரச்சாரம் ஆஸ்திரேலிய அரசியலை பின்பற்றுகின்ற பாமர வாக்காளனுக்கு மிகுந்த அயர்ச்சியை தருகிறது.

மறுபுறத்தில், லேபர் கட்சி மிகப்பெரிய சாகசங்களை மக்களின் முன்பாக நிகழ்த்தி வாக்கு கேட்காவிட்டாலும்கூட, இறுக்கமான தலைமை, ஒற்றுமையான கட்சி, யதார்த்தமான கொள்கைகள் என்று மக்கள் மத்தியில் மனப்பூர்வமான உரையாடல்களை நிகழ்த்திக்கொண்டிருக்கிறது. முக்கியமாக, அகதிகள் விவகாரம் மற்றும் குடியேற்றவாசிகள் விடயத்தில் லிபரல்கள்போல போலிவேடம் போடாமல் யதார்த்த பூர்வமாக தங்களது கருத்துக்களை முன்வைத்து வருகிறது.

அகதிகள் விவகாரம் என்பது ஆஸ்திரேலியாவைப் பொறுத்தவரை அரசியல்தான். இருந்தாலும், அதுவொரு மனிதாபிமான விவகாரம் என்பது லேபரில் வெளித்தெரியாத கொள்ளைக்கீற்றாக உணரக்கூடியதாக உள்ளது.

ஈழத்தமிழர் ஒருவர் ஆஸ்திரேலியாவுக்கு வந்து பத்து ஆண்டுகளாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். தற்போது அவருக்கு இரத்தப்புற்றுநோய் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இன்னமும்கூட, அவரை தடுப்பிலிருந்து வெளியே விடுவதற்கு ஆளும் லிபரல் கட்சி அனுமதிக்கவில்லை. கடந்த பத்து ஆண்டு தடுப்பு அவரது வாழ்வின் பெரும்பகுதியை தின்றுவிட்டது. இப்போது புற்றுநோய் அவரின் மீதியை தின்றுகொண்டிருக்கிறது.

இவற்றைக்கூட உணரமுடியாத அரசும், அதன் அரசியல் – குடியேற்றவாதக்கொள்கையும் எவ்வகையான சிறந்த ஆட்சியை எதிர்காலத்தில் தந்துவிடப் போகிறது என்பது லிபரலை நோக்கி வெளிப்படையாகவே கேட்கவேண்டிய கேள்வி. மறுபுறத்தில், லேபர் இது விடயத்தில் என்ன செய்துவிடப்போகிறது என்பதையும் என்ற கேள்வியும்கூட எழுந்துவிடாமல் இல்லை.

உட்கட்சி பூசல்களினால் வீழ்ந்துவிட்ட லிபரல் வரவு – செலவுத்திட்டத்தோடு மூச்சுவிடத்தொடங்கியிருக்கிறது. மக்களுக்கு சாதுவான மதிப்பு மீண்டும் வந்திருக்கிறது. இதிலிருந்து லேபர் எவ்வாறு மீண்டெழுப்போகிறது என்பது இப்போது பெருங்கேள்வியாகியுள்ளது. பிந்திய கருத்துக்கணிப்பில், பில் ஷேர்ட்டனைவிட மொறிஸனை மக்கள் விருப்பத்துக்குரிய ஆளுமையாகவும் பிரதமராகவும் கூறியுள்ளார்கள்.

ஒரு காலத்தில் டெஸ்ட் ஆட்டங்கள் போலிருந்த ஆஸி தேர்தல் இம்முறை மீண்டும் ரி20 போட்டியாக மாறியிருக்கிறது.


# ஈழத்தின் கவிமணி அம்பிக்கு அகவை தொண்ணூறு

முருகபூபதி

**ஈழத்தமிழர்களின் பெருமகனாகவும் புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் வற்றாத தமிழ் ஊற்றாகவும் பணி செய்த கவிஞர் அம்பி அவர்களின் 90 ஆவது அகவையை முன்னிட்டு இம்மாதம் - ஏப்ரல் - 28 ஆம் திகதி சிட்னி தமிழர்களால் பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கவிஞர் அம்பியை தமிழுலகம் கொண்டாடவேண்டியதன் தேவை குறித்தும் அவரது பெருமைகள் குறித்து எழுத்தாளர் முருகபூபதி எழுதியிருக்கும் ஆக்கம்.**

இராமலிங்கம் அம்பிகைபாகர் என்ற இயற்பெயரைக்கொண்ட கவிஞர் அம்பி அவர்கள் இலங்கையில் வடபுலத்தில் நாவற்குழியில் 17-02-1929 ஆம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை நாவற்குழி சி.எம்.எஸ் பாடசாலையிலும் பின்னர் உயர் கல்வியை யாழ். பரியோவான் கல்லூரியிலும் தொடர்ந்த அவர், விஞ்ஞான மற்றும் கணித ஆசிரியராக 1950 ஆம் ஆண்டு முதல் 1968 ஆம் ஆண்டு வரையில் யாழ் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் பணியாற்றினார். இக்கல்லூரி தனது மகத்தான சேவையில் இருநூறு ஆண்டுகளை நிறைவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதன்பின்னர் அம்பி அவர்களுக்கு, அச்சமயம் தமிழக அரசில் அங்கம் வகித்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் வழங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரசிகமணி கனகசெந்திநாதன் "ஈழத்து பேனா மன்னர்கள்" என்ற தலைப்பில் தொடர் எழுதியபோது அம்பியின் எழுத்துலகம் பற்றியும் விரிவாக குறிப்பிட்டுள்ளார். இயல்பிலேயே இனிய பண்புகளை தன்னகத்தே கொண்டுள்ள அம்பி அங்கதம் தொனிக்கப் பேசவல்லவர்.



இதுவரையில் 15 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கும் அம்பி, இலங்கையின் தமிழ் மருத்துவத்துறை முன்னோடியான அமெரிக்க பாதிரியார் மருத்துவ கலாநிதி சாமுவேல் கிறீன் அவர்களைப்பற்றி விரிவான ஆய்வு நூலை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார் குறிப்பிட்ட மருத்துவ முன்னோடிக்கு இலங்கையில் தபால் தலை வெளியிடுவதற்கும் முயற்சித்த அம்பி அதிலும் சாதனை புரிந்தார். அம்பியின் பரிந்துரையை ஏற்றுக்கொண்ட இலங்கை அரசு, குறிப்பிட்ட தபால் தலையை வெளியிட்டது.

இந்த மதிப்பிற்குரிய செயலைப் புரிந்தமைக்காக இலங்கையில் அமெரிக்க தூதுவராலயம் அம்பியை அழைத்து கௌரவித்து பாராட்டியது.

சாமுவேல் கிறீன் அவர்களின் கல்லறை அமெரிக்காவில் மசாசூசெட் மாநிலத்தில் கிறீன் அவர்கள் பிறந்த ஊரான வூட்சரில் அமைந்துள்ளது. அவ்விடத்துக்கு இரண்டு தடவைகள் நேரில்சென்று மலரஞ்சலி செலுத்தியவர் அம்பி என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இவரிடம் கற்ற பல மாணவர்கள் பிற்காலத்தில் இவரது தூண்டுதலாலும் ஊக்குவிப்பினாலும் எழுத்தாளர்களாக அறிஞர்களாக, கவிஞர்களாக உருவாகியிருக்கிறார்கள். கவிதைத்துறையில் இவரது ஆற்றலை வியந்து தமிழக இலக்கிய இதழான "சுபமங்களா" இவரை "ஈழத்தின் கவிமணி" என்று புகழாரம் சூட்டியுள்ளது.

பாப்புவா நியூகினியிலும் அவுஸ்திரேலியாவிலும் குழந்தை இலக்கியத்தின் வளர்ச்சிக்காக ஆங்கிலத்திலும் தமிழிலும் சில கவிதை நூல்களையும் எழுதியிருக்கிறார். அத்துடன் அவுஸ்திரேலியா சிட்னியில் தமிழ்மொழியை ஒரு பாடமாகப் பயில தமிழ் மாணவர்கள் முன்வந்தபோது அவர்களின் தேவைகருதி உருவாக்கப்பட்ட தமிழ்ப்பாட நூலாக்கக்குழுவில் பிரதம ஆலோசகராக பணியாற்றி இங்கு வாழும் தமிழ்க் குழந்தைகளின் தமிழ் அறிவுத் தேவையை பூர்த்தி செய்வதற்கு தொடர்ச்சியாகத் தொண்டாற்றினார்.

தமிழ்சார்ந்த மாநாடுகள், கருத்தரங்குகள், விழாக்கள் உட்பட பல கவியரங்குகளிலும் அம்பி அவர்கள் புகலிட நாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழை மறந்துவிடக்கூடாது என்ற தொனிப்பொருளிலேயே தொடர்ச்சியாக குரல் எழுப்பிவந்துள்ளார். அத்துடன் இது தொடர்பாக பல கட்டுரைகளும் எழுதியுள்ளார். தேமதுர தமிழ் ஓசை உலகமெலாம் பரவச்செய்யவேண்டும் என்ற மகாகவி பாரதியின் கனவை நனவாக்க தமிழின் சிறப்பை ஏனைய மொழிகள் அறிந்தவர்களுக்காக ஆங்கிலத்திலும் எழுதி தமிழுக்கு தொண்டாற்றியுள்ளார்.

எழுத்துலகில் தினகரன் வாரமஞ்சரியில் வெளிவந்த "இலட்சியச் சோடி" என்ற சிறுகதையின் மூலம் இலக்கிய உலகில் அறிமுகமான அம்பியின் அவர்கள் கிழக்கிற்கு இடமாற்றம் பெற்றார். அங்கு முதலில் ஒட்டமாவடி முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் அதன் பிறகு, மட்டக்களப்பு அரச கல்லூரியிலும் சேவையாற்றினார்.

கொழும்பு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் 1969 இல் கணித பாடநூல் எழுத்தாளராகவும் பணியாற்றிய அம்பி, பின்னர் புலமைப் பரிசில் பெற்று அமெரிக்கா சென்றார். அங்கு University of Connecticut (Institute of public service) இல் பயிற்சியை முடித்துக்கொண்டு, தாயகம் திரும்பி, மீண்டும் கொழும்பில் பாடத்திட்ட அதிகாரியாக பணியாற்றினார். அதன் பின்னர், 1981 இல் பாப்புவா நியூகினி நாட்டுக்கு பணி நிமித்தம் சென்று அங்கு தொலைக் கல்விகல்லூரியில் கணிதத்துறை தலைவராக பணியாற்றினார். அங்கிருந்து, 1992 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தார்.

இளம் பராயத்திலிருந்தே கவிதை, கவிதை நாடகம், சிறுகதை, கட்டுரை, விமர்சனம், ஆய்வு முதலான துறைகளில் அவர் அளப்பரிய பணிகளை மேற்கொண்டிருந்தபோதிலும் தமிழ் கூறும் நல்லுலகில் கவிஞர் என்றே அம்பி அறியப்பட்டவர்.

அறிஞர் அண்ணா தமிழகத்தின் முதல்வராகப்பதவி ஏற்றதையடுத்து தமிழ்நாட்டில் 1968 இல் நடந்த இரண்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டுக்காக நடைபெற்ற அகில உலக கவிதைப்போட்டியில் பங்கேற்ற கவிஞர் அம்பி, அதில் வெற்றியீட்டி தங்கப்பதக்கம் பெற்றவர். இதனை அம்பி

படைப்புகள் -

- கிறீனின் அடிச்சுவடு
- அம்பி பாடல் (சிறுவர் பாடல்கள்)
- வேதாளம் சொன்ன கதை (மேடை நாடகம்)
- கொஞ்சும் தமிழ் (சிறுவர் பாடல்கள்)
- அந்தச் சிரிப்பு
- யாதும் ஊரே ஒரு யாத்திரை
- அம்பி கவிதைகள்
- மருத்துவத் தமிழ் முன்னோடி
- Ambi's Lingering Memories (Poetry, பப்புவா நியூ கினி)
- Scientific Tamil Pioneer Dr Samuel Fisk Green
- உலகளாவிய தமிழர்
- A String of Pearls
- பாலர் பைந்தமிழ்

### அம்பியின் நாடகங்கள்

அம்பியின் வேதாளம் சொன்ன கதை கவிதை நாடகம், இலங்கையில் பிரபல நாடக இயக்குநர் சஹேர் ஹமீட் நெறியாள்கையிலும், "யாழ் பாடி" என்ற கவிதை நாடகம் அவுஸ்திரேலியாவில் அண்ணாவியார் இளைய பத்மநாதனின் அண்ணாவியத்திலும் அரங்கேறியுள்ளன.

அம்பியின் பவளவிழாவை முன்னிட்டு அவரது வாழ்வையும் பணிகளையும் பதிவுசெய்யும் விரிவான ஆய்வு நூலை எழுத்தாளர் லெ. முருகபூபதி எழுதியுள்ளார். இந்நூல் 2003 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் வெளியாகியுள்ளது.


OPULENT
ACCOUNTANTS
GEARING
YOUR
FUTURE
Why Do You Need a
good Tax Agent?
As an individual tax payer or a sole trader, you'll need professional advice to get your tax affairs right from the start and build up a long lasting relationship which will give you benefits not only when you are in the Uni, but when you are out and working in the industry too. Our Finance team can help you with your FIRST HOME when you are ready to buy.
We can ;
Help you to claim maximum expenses you are eligible
Advice and help getting your NEW ABN to start your own business
Help you to apply for a Tax file number if you still haven't got one
Help you with log books and information on vehicle expenses
Help you if you started UBER as part time and,
Help you with any other taxation or accounting advice you need on going.
Visit
Us
Online
GET READY FOR
TAX TIME
2019
Please call Dayan
for friendly service
0423 272 600
03 88388726
Dayan
CTA FIPA FFA AMC
Principal Accountant & Chartered Tax Adviser
BSc MCom MIntBus DipApp Tax DipFinSer(F/MBM)
Suite 4, 251, Blackburn Road, (Ent. via Doynton Parade)
Mount Waverley VIC 3149
PO Box 3090 Syndal VIC 3149
E dayan@opulentaccountants.com.au
W www.opulentaccountants.com.au
THE TAX INSTITUTE
CHARTERED TAX ADVISER
TAX PRACTITIONERS BOARD REGISTERED
Tax agent
xero
CERTIFIED ADVISOR

# நாடும் நாட்டு மக்களும் 05



தமிழகத்திலிருந்து
டான் அசோக்

"மிகவும் கனம் மிகுந்த சவப்பெட்டிகள் சிறிய சவப்பெட்டிகளே" - என்று ஆங்கிலத்தில் பழமொழி கூட உண்டு. இதை நினைவூட்டும் வகையில் கடந்த வாரம் கோவையில் ஒரு சம்பவம் நடந்து முடிந்திருக்கிறது.

கடந்த வாரம் கோவையில் ஆறு வயதுச் சிறுமி ஒருத்தி வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறாள். அவள் வீட்டருகில் வசித்த ஒரு நபர் இதைச் செய்திருக்கிறார். அதுவும் பலநாள் திட்டமிட்டுச் செய்திருக்கிறார். இதுபோல் நிறைய நடந்திருந்தாலும்கூட நாம் இதுவரை சமூகத்தின் மீது நம்பிக்கை இழக்கவில்லை. ஆனால் சமீபகாலமாக அந்த நம்பிக்கை சிதைந்து கொண்டிருக்கிறது. வானிலை அறிக்கைகளைப் போல வன்புணர்வுகளை, குழந்தைக் கொலைகளையும் அன்றாடம் படிக்கும்போது அவை நமக்குப் பழக்கப்பட்டுப் போய்விடுகின்றன.

பலவருடங்களுக்கு முன்பு 'கிபி 2098' என ஒரு குறுங்கதை எழுதினேன். அதில் மக்கள், சக மனிதர்களின் அகால மரணத்துக்கு பழக்கப்பட்டுவிடுவார்கள். நெடுஞ்சாலைகளில் இன்று நாய்கள், பன்றிகள் அடிபட்டுச் சாவதைப் போல மனிதர்கள் அடிபட்டுக் கிடப்பார்கள். காரில் அந்தப் பக்கம் வருகின்றவர்கள் எந்த சலனமும் இல்லாமல் உச்சுக் கொட்டிவிட்டு ஸ்டீயரிங்கைத் திருப்பியபடி போய்விடுவார்கள். பொள்ளாச்சி பயங்கரம், கோவை சிறுமி கொலை என அடுத்தடுத்துப் படித்தபோது இதுதான் நினைவில் வந்துபோனது. வருங்காலத்தில் ஒருநாள், ஒரு குழந்தையின் வன்புணர்வு - கொலை என்பது ஒரு பெட்டிச் செய்தியாக கடைசிப் பக்கத்தில் இடம்பெறும் சூழல் வந்துவிடுமோ என நிஜமாகவே பயமாக இருக்கிறது.

சிறுமிகளையும், சிறுவர்களையும் பீடோஃபைல்கள் கொல்வதென்பது புதிது அல்ல. இதற்கு முன்னரும் நாம் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறோம், படித்திருக்கிறோம். ஆனால், இப்போது ஏன் இப்படியெல்லாம் தோன்றுகிறது. எப்போதுமே இழக்காத நம்பிக்கை இப்போது ஏன் நம்மை விட்டு நழுவுகிறது என யோசித்தால், அப்போதெல்லாம் இந்தக் குற்றங்களுக்கு உடனே எதிர்வினையாற்றிய அரசுகள் இருந்தன. அரசியல்வாதிகள் இருந்தார்கள். ஆனால் இப்போது?

பொள்ளாச்சி வீடியோக்களில் கதறியபடி உடைகளைக் கழற்றிய தங்கை என்ன ஆனாள்? அவளைப் பற்றி நாமெல்லாம் பதைத்துக் கொண்டிருந்தபோது, அந்தக் குரல் நம் தூக்கத்தைத் தின்றபோது மனசாட்சியே இல்லாமல் அவள் பெயரை ஒரு காவல்துறை உயரதிகாரி பிரஸ் மீட்டில் சொல்கிறார். சரி அந்த ஆள்தான் ஒரு திருடன், ஒரு அயோக்கியன் என நாம் கோபப் பெருமூச்சு விட்டுத் திரும்பினால் அடுத்தநாள் அரசின் அறிக்கையில் அந்தப் பெண்ணின் பெயரை தலைமைச் செயலாளர் (அவரும் பெண்) வெளியிட்டிருகிறார். இப்படி அரசு இயந்திரம் பாதிக்கப்பட்டப் பெண்களை, இதற்கு மேல் ஏதாவது செய்தி வெளிவந்தால் இப்படி உங்கள் பெயரை வெளியிட்டு அம்பலப்படுத்துவோம் - என மறைமுகமாக மிரட்டுகிறது. அதாவது அந்தக் குற்றவாளிகள் வீடியோவை வெளியிட்டுவிடுவோம் என மிரட்டிக் கற்பழித்தார்கள். அரசு இயந்திரம் பெயரை வெளியிட்டுவிடுவோம் என மிரட்டி வாயை அடைக்கிறது.

இது தமிழ்நாட்டில் என்றால், வடநாட்டில் கேட்கவே வேண்டாம். யாராவது எங்காவது வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டால் உடனே எவனாவது பாஜக மந்திரி பெண்களுக்கு பாடம் எடுக்க ஆரம்பித்துவிடுவான். பெண்கள் என்ன உடை அணிய வேண்டும், எப்போது வெளியே செல்ல வேண்டும், வன்புணர்வுக்கு உள்ளாக்கப்படும்போது எப்படிக் கத்த வேண்டும் என்றெல்லாம் இந்தப் பாடங்கள் நீளும். காஷ்மீரில் வன்புணர்வு பொறுக்கிகளுக்கு ஆதரவாக பாஜக அமைச்சர்கள் ஊர்வலம் போன அசிங்கம்கூட நடந்தது. அதிகபட்சமாக, "வன்புணர்ச்சியில் இருந்து தப்பிக்க முடியவில்லை என்றால் அதை அனுபவியுங்கள்" - எனச் சொல்லும் சாமியார்ப்பயல்கள்கூட இந்தியாவில் உண்டு. இவர்கள் எல்லாம் சேர்ந்து குற்றவாளிகளுக்கு வெண்சாமரம் வீசும் அயோக்கியத்தனத்தை செய்துகொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் ஒன்றை யோசித்துப் பார்த்தால் தெரியும். நிர்பயா கொலையின்போது காங்கிரஸ் அரசு அந்தக் குற்றத்தை தன்மேல் ஏற்றுக்கொண்டு பொறுப்பேற்றது. இந்தியா முழுமைக்கும் அந்த அதிர்வலை இருந்தது. உடனே நடவடிக்கையும் எடுத்தது. ஆனால் இந்த ஐந்தாண்டுகளில் வன்புணர்வுச் செய்தி நமக்கெல்லாம் பழக்கப்பட்டுவிட்டது. அதுதான் பாஜகவின் சாதனை.

நீங்கள் எல்லாம் 'ஈவ் டீசிங் கேஸ்' என்ற வார்த்தையை சினிமாக்களில் அடிக்கடி கேள்விப்பட்டிருப்பீர்கள். அதற்கு ஒரு பின்னணி உண்டு. நாங்கள் பள்ளி படித்த காலத்தில் சரிகாஷா என்கிற சென்னை கல்லூரிப் பெண்ணை நான்கைந்து பொறுக்கிகள் விரட்டிச் சென்று, கேலி செய்து விபத்துக்குள்ளாக்கி சாகடித்தார்கள். அது தமிழகத்தைப் பொறுத்தவரை மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

அடுத்தநாளே அன்றைய ஆளுங்கட்சியான திமுக சட்டமன்றத்தைக் கூட்டி 'ஈவ் டீசிங்கிற்கு' என்றே தனி சட்டத்தை இயற்றியது. 2006-2011ல் திமுக ஆட்சியில் இருந்தபோது கோவையில் ஒரு அக்காவும் தம்பியும் அவர்கள் வீட்டின் டிரைவரால் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டார்கள். அப்போது ஸ்டாலின் துணை முதல்வர். தமிழ்நாட்டின் பெற்றோர் மனதில் எல்லாம் நெருப்பையும் பதற்றத்தையும் மூட்டியது அந்நிகழ்ச்சி. கொலை செய்தவன் பிடிக்கப்பட்டு குற்றம் உறுதியான அடுத்தநாள் போலீஸால் சுட்டுக் கொல்லப்பட்டான். தமிழ்நாட்டின் பெற்றோர் அத்தனைபேரும் அந்தச் செய்தியைப் படித்து நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

இப்படித்தான் மக்களின் வாழ்க்கை மீதான நம்பிக்கை என்பது குற்றங்களுக்கு எதிரான அரசின் எதிர்வினைகளை வைத்து அவ்வப்போது மீள்நிரப்பு செய்யப்பட்டுக்கொண்டே இருக்கிறது. நான் மேலே சொன்ன இரண்டு சம்பவங்களும் பொள்ளாச்சி சம்பவத்தோடு ஒப்பிடுகையில் மிகவும் சிறியவை. ஆனால் அதிமுக அரசின் எதிர்வினை என்ன?

மக்களைச் சந்தித்து ஓட்டுக் கேட்டுக்கொண்டிருக்கிறார். எங்கிருந்து எங்கே வந்திருக்கிறது பார்த்தீர்களா தமிழகம்!!

எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. 2ஜி வழக்கு திமுக மீது சுமத்தப்பட்டுப் பல நாட்களுக்குப் பின் காங்கிரஸுடனான கூட்டணியை திமுக உடைத்தது. அப்போது உடன்பிறப்புகள் எல்லாம் தெருக்களில் மக்களுக்கு ஸ்வீட் கொடுத்து கொண்டாடினார்கள். காங்கிரஸ் மீதும் ராகுல் மீதும் திமுகவினருக்கு அவ்வளவு கோபம். அப்போது ராகுல் நிஜமாகவே பப்புவாகத்தான் இருந்தார். தொடர்ந்து பத்தாண்டுகள் ஆட்சியில் இருக்கிறது காங்கிரஸ், இனி காங்கிரசுக்கு எதிரியே இல்லை, அதற்கு மாநிலக் கட்சிகள் மட்டும்தான் எதிரி என்கிற தப்புக்கணக்கப் போட்டு மாநிலக் கட்சிகளை தீர்த்துக்கட்டப் பார்த்தார். அது காலம்காலமாக காங்கிரஸ் முயலும் ஒன்றுதான். ஆனால் மோடி என்கிற விஷ ஆலமரம் காங்கிரசுக்கு எதிராக வளர்க்கப்படுகிறது என்பதை ராகுல் அப்போது உணரவில்லை.

ஆனால் இன்று காலம் அவருக்கு எவ்வளவு கற்றுக் கொடுத்திருக்கிறது! ராகுல் திருந்தியிருக்கிறார். உடன்பிறப்புகள் சூழல் உணர்ந்து அவரை மன்னித்து ஏற்றிருக்கிறார்கள். இந்திராவில் இருந்து ராகுல் வரை அந்தப் பரம்பரையைச் சேர்ந்த எல்லோருமே மாநில உரிமைகளைப் பொறுத்தவரை பாடம் படித்துக்கொண்டேதான் இருக்கிறார்கள்.

இதோ இன்று காங்கிரஸ் தேர்தல் அறிக்கை வந்திருக்கிறது. அது தேசியக் கட்சியின் அறிக்கை போல இல்லை. மாநில உரிமைகளைப் பேசும் திமுகவின் தேர்தல் அறிக்கை போல இருக்கிறது. நீட் ரத்து, கல்வி மாநிலப்பட்டியல் என அதிர்ச்சியும் ஆச்சரியமும் கலந்த இடதுசாரி நிலைப்பாட்டை எடுத்துள்ளது. நாம் என்ன ஆயுதம் எடுக்கிறோம் என்பதை எதிரிகளே தீர்மானிப்பார்கள் என்கிற வாசகத்திற்கு ஏற்ப காங்கிரசை ஜனநாயக ஆயுதம் எடுக்க வைத்திருக்கிறார் சர்வாதிகாரி மோடி. இந்தியாவின் திமுக ஆகிறதா காங்கிரஸ் என ஊடகங்கள் பேசிக்கொண்டிருக்கின்றன.

உண்மையில் சொல்லபோனால் வெள்ளைக்காரன் போன பின் காங்கிரசுக்கென்று கொள்கை ஏதுமில்லை. அது தீவிர வலதுசாரிக் கட்சி இல்லையே தவிர, வலதுக்கும் நடுநிலைக்கும் நடுவில் தத்தளித்துக் கொண்டிருந்தது. இன்று தீர்க்கமாக இடதுசாரி நிலைப்பாடு எடுத்திருப்பதை நாம் வரவேற்கத்தான் வேண்டும். இதுதான் நாட்டுக்கும் சரி அதற்கு சரி, நல்லது. இப்படி வாய்ப்பெல்லாம் மக்களுக்கு வராது. எப்படிப் பயன்படுத்துகிறார்கள் எனப் பொறுத்திருந்து பார்ப்போம்.

இன்று நண்பன் ஒருவன் சோனியா காந்தி பற்றி பேசிக்கொண்டிருந்தான். அப்போது அந்த அம்மாவைப் பற்றி ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. கல்லூரி படிக்கும்போது இரண்டு முழு நாட்கள் அதைப் பற்றி நான் சிந்தித்திருக்கிறேன்.

இத்தாலி நாட்டில் மிகச் சராசரியான குடும்பத்தில் பிறந்தவர் சோனியா. ஓட்டலில் சர்வர் வேலை பார்க்கும்போது ராஜீவ்காந்தியைப் பார்க்கிறார். காதலித்து திருமணம் செய்துகொள்கிறார்கள். குழந்தைகள் பிறந்து நடுத்தர வயது வாழ்க்கையை நெருங்கும்போது கணவர் பீஸ் பீஸாகச் சிதறி இறந்துபோகிறார். பின்னர் அரசியல் பக்கம் எல்லாம் அந்த அம்மா வரவில்லை. அவர் முகம்கூட அவ்வளவாக அப்போது யாருக்கும் தெரியாது. பின்னர் காங்கிரஸ்காரர்கள் வழக்கம்போல தங்களுக்குள் சண்டை போட்டுக்கொண்டு, "உனக்கும் வேண்டாம் எனக்கும் வேண்டாம். அவங்களுக்கே கொடுத்துருவோம்" எனத் தேடிப்போய் அந்த அம்மாவிடம் கொடுத்ததுதான் காங்கிரஸ் தலைவர் பதவி.

வாஜ்பாயி ஆட்சி முடியும் காலத்தில் நடக்கும் தேர்தலில் நாடெங்கும், "ஒரு வெள்ளைக்காரி பிரதமர் ஆகலாமா" என்கிற குரல் ஒலிக்கிறது. பாஜக வெறியர்கள் கூக்குரலிட்டு அலறுகிறார்கள். சுஷ்மா ஸ்வராஜ் எல்லாம் மிகவும் மோசமாகப் பேசுகிறார். இங்கே ஜெயலலிதா, நளினிக்கு தண்டனையைக் குறைத்த காரணத்தால் சோனியாவை பதிபக்தி இல்லாதவர் என்கிறார். இப்படி ஏதேதோ விமர்சனங்களுக்கு மத்தியில் காங்கிரஸ் அபாரமாக ஜெயிக்கிறது. ஆட்சி அமைக்க சோனியாவும் அழைக்கப்படுகிறார். கலைஞர் உள்ளிட்ட இந்தியாவின் முக்கியமான தலைவர்கள் சோனியா பிரதமர் ஆக முழுமனதுடன் சம்மதிக்கிறார்கள். ஆனாலும் கடைசி நேரத்தில் அப்துல் கலாமைச் சந்தித்து, தார்மீகக் காரணங்களுக்காக தான் பிரதமர் ஆகப்போவதில்லை, இன்னொரு பிரதமராக கட்சி தேர்வு செய்யும் எனச் சொல்லிவிட்டு வருகிறார். மன்மோகன் பிரதமர் ஆகிறார். இதுதான் எனக்கு கல்லூரி காலத்தில் இரண்டு முழு நாட்கள் மனதில் ஓடிய நிகழ்வு.

ஒரு வார்டு கவுன்சிலர் பதவிக்காகக்கூட நாயாகப் பேயாக அடித்துக்கொள்ளும் காலத்தில், சோனியாவுக்கு பிரதமர் பதவி தேடி வருகிறது. இந்தியாவின் பிரதமர் ஆன முதல் இந்தியக் குடியுரிமை பெற்ற வெளிநாட்டுக்காரர் என அவருக்கு இந்திய வரலாற்றில் சிறப்பான இடம் கிடைத்திருக்கும். ஆனால் அதை மறுத்துவிட்டார்.

வரலாற்றில் இந்த நிகழ்ச்சி காணாமலோ அல்லது சரியாகப் பதியப்படாமலோ இருப்பது நிச்சயம் ஒரு இருட்டடிப்புதான்.

நான் கடந்தவாரம் முகநூல் லைவ் வந்தபோது முதல்முறையாக வாக்களிக்கப்போகும் சங்கிப் பையன் ஒருவன் "நான் மோடிக்குத்தான் வாக்களிக்கப் போறேன்" என நக்கலாகப் பின்னூட்டமிட்டான். நான் சொன்னேன், "தாராளமாகப் மோடிக்கு ஓட்டுப் போடு. கப்பல் மூழ்குகிறது. கப்பலுக்குள் தண்ணீர் புகுகிறது என நாங்கள் எல்லாம் கதறுகிறோம். படகுகளில் ஏறித் தப்பிக்கலாம் என்கிறோம். நீயோ கப்பலுக்குள் புகும் நீரை வாட்டர்ஃபால்ஸ் என நினைத்து ஜாலியாகக் குளித்துக் கொண்டிருக்கிறாய். மூக்கு வரைக்கும் நீர் வரும்போது முங்குகிறோம் என்பதை உணர்வாய். ஆனால் அப்போது உன்னைக் காப்பாற்றப் படகு இருக்காது, மூழ்கிச் செத்துப் போவாய்," என்றேன்.



# Geelong தமிழ் கடை

# VS GREEN STAR GROCERY



## WELCOME



Srilanka | India | Malaysia | Pakistan | Nepal

www.vsgreenstar.com.au

2/153 Shannon Avenue
Manifold Heights, Geelong, Vic 3218
0470301911, 0450451911



# ஊர்போன மனைவி கழுத்து நெரித்துக்கொலை!!

# ஊபர் ஓடும் கணவருக்கு பொலீஸார் வலைவீச்சு!



## Gold Coast to பஞ்சாப் ஒரு கொலைப்பயணம்

அநேக குடியேற்றவாசிகளுக்கு வெளிநாடென்பது ஆரம்பத்தில்பாதுகாப்பான புகலிடம் என்பதாகவே உணரப்படுகிறது. அந்தவெளிநாட்டு வாழ்வு கொஞ்சம் கொஞ்சமாக கைவரப்பெறுகின்றபோது - தாங்கள் அனுபவிக்கமுடியாத சுதந்திரத்தை வெளிநாடு தருகின்றது என்று உணர்கின்றபோது - அநேகர் சர்வ சாதாரணமாக சட்டங்களை மீறவும் அவற்றை முறிக்கவும் வளைக்கவும் ஆரம்பித்துவிடுகிறார்கள்.

இவ்வாறு அண்மைக்காலமாகவே குடும்ப வன்முறையினால் உயிர்ப்பலியெடுக்கும் நிகழ்வுகள் அதிகரித்திருக்கும் இடமாக ஆஸ்திரேலியா மாறியிருக்கிறது. மிக அண்மையில், மெல்பேர்னில் தனதுகள்ளக்காதலனுடன்சேர்ந்து கணவனுக்கு நஞ்சு வைத்துக் கொலை செய்தார் ஒரு கேரளப் பெண்மணி. அதற்கு பிறகு, மிகப் பிரபலமாக பேசப்பட்ட சிட்னி கொலைச்சம்பவம் இடம்பெற்றது. முன்னாள் காதலியை படு-கொலை செய்து சூட்கேஸில் போட்டுவிட்டு, தானும் போய் தற்கொலை செய்துகொண்டார் பெங்களூர் பல்வைத்தியர்.

இப்போது இடம்பெற்றிருக்கும் பிந்திய சம்பவம் குவீன்ஸ்லாந்து பெண்ணுக்கு எதிரானது. அதுவும்நான்குமாதக்கர்ப்பிணிப் பெண்ணுக்கு எதிராக இடம்பெற்றிருக்கும் கொடூரக்கொலை.

வெளிநாட்டில்தான் குற்றங்களுக்கு காரணமானவர்களை எப்படியாவது பிடித்துவிடுகிறார்கள் என்றுசொந்தஊரிலேயேவைத்து இந்த சம்பவத்தை நிகழ்த்தி முடித்திருக்கிறார்கள் மா பாதகர்கள்.

குவீன்ஸ்லாந்தை சேர்ந்த ரஸ்பீத் சிங் ஒரு வர்த்தகர். ஊபரும் ஓடுவதாக தகவல். **2013** ஆம் ஆண்டு ரவ்னீட் கௌரை திருமணம் செய்துகொண்டார். இருவருக்கும்இரண்டு வருடங்களில் அழகான பெண் குழந்தையொன்றும் கிடைத்தது. ஆனால், ரஸ்பீத்திற்கும் குவீன்ஸ்லாந்தை சேர்ந்த இன்னொரு இந்தியப்பெண்ணான கிரணுக்கும் காதல் வெடித்திருக்கிறது. இந்தக்காதல் ரஸ்பீத் திருமணம் செய்வதற்கு முன்னரே வெடித்ததா பிறகுதான் வெடித்ததா என்பதெல்லாம் இருவருக்கும் தான் வெளிச்சம். ஆனால், தனது மனைவியை மீறி காதல் கொள்வதற்கு ரஸ்பீத் முடிவு செய்திருந்தார் என்பது மாத்திரமல்லாமல், இந்தக்காதலுக்கு தனது மனைவி இடைஞ்சலாக இருக்கிறார் என்பதையும் கொடூரமான வகையில் உணரத்தொடங்கியிருக்கிறார். அதுவேளை, ரஸ்பீத் திருமணமானவர் என்று தெரிந்தும் அவரை காதலித்துவந்தகிரண்என்றபெண்ணும்கூட ரவ்னீத்தின் இடைஞ்சலை உணர்ந்திருக்கிறார்.

விளைவாக, தங்களின் காதலுக்கு இடைஞ்சலாக இருந்த ரவ்னீத்தை போட்டுத்தள்ளுவதற்க இவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். அதுவும், ரஸ்பீத்தின் குழந்தையை கருக்கொண்டிருக்கும் போதே ரவ்னீத்தை போட்டுத்தள்ளிவிடவேண்டும் என்ற அவசரத்துடன் இந்த திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.

இந்த வருட ஆரம்பத்தில் - பெப்ரவரி மாதம் **27** ஆம் திகதி - ரவ்னீத் தனது சொந்த ஊரான - இந்திய-பாகிஸ்தான்எல்லையோரக்கிராமமான - பஞ்சாப் மாநிலத்தின் - Ferozepur மாவட்டத்துக்கு தனது நான்கு வயத மகளோடு போயிருந்தார். வயிற்றில் கருவை சுமந்த நான்கு மாத கர்ப்பிணியான ரவ்னீத் சொந்த ஊருக்கு வந்திருக்கிறார் என்று குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் என்று அனைவரும் மகிழ்ச்சியில் திளைத்திருந்தார்கள். ஊரே கொண்டாட்டமாக இருந்தது.

ஆனால், அங்கிருந்து பதினொராயிரம் கிலோ மீற்றர் தொலைவிலுள்ள குவீன்ஸ்லாந்து மாநிலத்தின் கோல்கோஸ்ட் பகுதியில் ரவ்னீத்தில் ஊரில் வைத்தே படுகொலை செய்வதற்கு அகோரமான திட்டமொன்று தயாராகிக் கொண்டிருந்தது. அதுவும், கூலிப் படையினரை அமர்த்தி காரியத்தை சந்தேகத்துடன் முடிப்பதற்கு விருப்பமில்லாமல், தானே களத்தில் இறங்கி கொலையை நடத்தி முடிப்பது என்று ரஸ்பீத்தின் காதலி கிரண் இந்தியா சென்றிருக்கிறார். அங்கு தனது சகோதரியுடன் இன்னும் சிலரையும் அழைத்து வைத்துக்கொண்டு திட்டத்தை விளக்கியிருக்கிறார். அதை குவீன்ஸ்லாந்திலிருந்த ரஸ்பீத்திற்கும் விளக்கியிருக்கிறார்.

கொலைக்கான ஆயத்தங்கள் எல்லாம்சரியென்றுமுடிவெடுத்துவிட்ட மார்ச் **14** ஆம் திகதி, இந்திய நேரப்படி முற்பகல் **11.30** மணியளவில், பஞ்சாப்பிலிருந்து ரவ்நீத்திற்கு குவீன்ஸ்லாந்திருந்து அவரது கணவர் ரஸ்பீத் அழைப்பெடுத்திருக்கிறார். வீடியோ அழைப்பின் மூலம் இணைப்புக்கு வருமாறு கூறிய ரஸ்பீத், வீட்டுக்கு வெளியில் சென்று அங்கு காத்துக்கொண்டிருக்கும் வாகனத்தில் ஏறச்சொல்லியிருக்கிறார். கணவரின்சொல்கேட்டு, வீடியோ அழைப்பில் பேசியபடியே வீட்டுக்கு வெளியே சென்று வீதியில் நின்றுகொண்டிருந்த வாகனத்தில் ரவ்னீத் ஏறிக்கொண்டார்.

அந்தவாகனம்தான்தான் ஏறப்போகும் கடைசி வாகனம் என்று ரவ்னீத்திருக்கு தெரிந்திருக்க அப்போது வாய்ப்பே இல்லை. வாகனத்தின் உள்ளே அவரைப்போட்டுத்தள்ளுவதற்கு தயாராகவிருந்தவர்கள், ரவ்னீத் வாகனத்தில் ஏறிய மாத்திரத்திலேயே தொலைபேசியை அவரிடமிருந்து பிடுங்கிவிட்டு, மயக்கமருந்து கொடுத்து மயக்கிவிட்டார்கள் என்று தற்போது கைதாகியுள்ள கொலைச் சந்தேக நபர்களில் ஒருவர் கூறியிருக்கிறார். அதன்பின்னர், ரன்வீத் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று கூறப்பட்டுள்ளது.

எது எப்படியோ இந்தக் கொலை அவர்கள் நினைத்தது போல இடம்பெறவில்லை அல்லது ஏதோ பிசகிவிட்டதுபோலத்தான் தெரிகிறது. ஏனெனில், கொலையை செய்தவர்கள் சடலத்தை என்ன செய்வது என்று தெரியாமல் ஓடித்திருந்திருக்கிறார்கள்.

பட்டப்பகலில் கொலை இடம்பெற்ற காரணத்தினால் உடனடியாக சடலத்தை எங்கே எறிவது என்பது தொடர்பில் கொலைகார கும்பல் குழம்பிவிட்டது. இருளும்வரைக்கும் ரன்வீத்தின் சடலத்துடன் வாகனத்தில் ஓடிக்கொண்டேயிருந்திருக்கிறார்கள். மாலையான பின்னர்தான், இருநூறு கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஆற்றில்சடலத்தைகிரணின் சகோதரி கொண்டுபோய் எறிந்துவிட்டு வந்திருக்கிறார்.

அடுத்தநாளே, ரஸ்பீத்தின் காதலி கிரண் இந்தியாவிலிருந்து புறப்பட்டு குவீன்ஸ்லாந்துக்கு வந்துவிட்டார்.

வீதிக்கு சென்ற ரவ்நீத்தை காணவில்லை என்று உறவினர்கள், நண்பர்கள், ஊரார் என்று அனைவரும் தேடத்தொடங்கியிருக்கிறார்கள். பொலீஸிலும் முறைப்பாடு செய்தாயிற்று. எந்தப்பலனும் இல்லை. குவீன்ஸ்லாந்திலுள்ள ரஸ்பீத்திற்கு அழைத்து தகவலைக் கூறிய ரஸ்வீத்தின் பெற்றோர், உடனடியாக புறப்பட்டு இந்தியாவுக்கு வருமாறு கெஞ்சி மன்றாடியிருக்கிறார்கள். மனைவியை மாத்திரமன்றி தனது மகளைக் கூட நினைத்துபார்க்க விரும்பாத ரஸ்பீத் இந்தியாவுக்கு போகவில்லை.

ஆஸ்திரேலிய ஊடகமென்று தகவலையறிந்து ரஸ்பீத்தை தேடிச் சென்று பேட்டியெடுத்தபோது - தனது மனைவியை எப்படியாவது தேடிப்பிடித்து தருமாறு கமராவின் முன்னால் அழுதேவிட்டார்.

பஞ்சாப்பொலிஸார்தொடர்ந்து தேடுதலை மேற்கொண்டு, கடைசியில் **11** நாட்களுக்கு பிறகு ஆற்றுக்குள்ளிருந்து ரவ்னீத்தின் சடலத்தை மீட்டார்கள். கொலைக் குற்றத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டவரிடம் விசாரணை மேற்கொண்டபோதுதான் ஏனைய தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆஸ்திரேலியப் பிரஜை என்ற வகையில்உடனடியாகபுதுடில்லியிலுள்ள ஆஸ்திரேலிய தூதரகம் இதுகுறித்த விசாரணைகளை ஆரம்பித்தது. தூதரகத்துக்கு பஞ்சாப் பொலிஸார் அனைத்து தகவல்களை வழங்கியிருக்கிறார்கள். ரவ்னீத் படுகொலை செய்யப்பட்ட விதம், படுகொலை செய்யப்பட்ட காரணம், படு-கொலை செய்த கும்பல் என்று சகல தகவல்களையும் பொலிஸார் வழங்கியிருக்கிறார்கள்.

இதேவேளை, குறிப்பிட்ட கொலையில் ரவ்னீத்தின் கணவர் ரஸ்பீத் உட்பட நான்கு பேருக்கு எதிராக பஞ்சாப் பொலிஸார் கொலைக்குற்றச்சாட்டை பதிவு செய்துமுள்ளார்கள்.

தற்போது ரஸ்பீத் ஆஸ்திரேலிய பொலீஸாரால் கைது செய்யப்படுவாரா, இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவாரா என்பதுதான் பெரிய கேள்விகளாகியுள்ளன. ஆனால், ஆஸ்திரேலிய பொலிஸாரோ சட்டமா அதிபர் திணைக்களமோ இந்த விவகாரம் குறித்து பதிலளிக்க மறுத்துவிட்டது. ரஸ்பீத் இன்னமும் குவீன்ஸ்லாந்தில் ஊபர் ஓடிக்கொண்டு திரிவதாக அவரது நண்பர்கள் கூறுகிறார்கள்.

ஆஸ்திரேலிய சட்ட வழக்கப்படி, யாராவது ஒரு நபரை நாடு கடத்துமாறு வேறு நாடொன்று கோரிக்கை முன்வைத்தாலும்கூட, அது குறித்து செய்திகள் எதனையும் ஆளி நீதித்துறை வெளியிடுவதில்லை. நீதிமன்றில் குறிப்பிட்ட நபர் முன்னிலைப்படுத்தும் போதுதான் இது குறித்த தகவல்கள் வெளிவருவது வழக்கம்.

ஆக, தற்போது இந்த விவகாரம் மர்மத்திலும் பெரும் மர்மமாகவேகாணப்படுகிறது. இந்தியாவில் கொலை செய்துவிட்டு, அடுத்த நாளே ஆஸ்திரேலியாவுக்கு வந்து ரஸ்பீத்துடன்சேர்ந்து கனடாவுக்குப் போய் வாழலாம் என்ற திட்டத்துடனுள்ள "காரியக்காரி" கிரண் தொடர்பாகவும் எந்தத் தகவலும் இல்லை.

இந்த வருடம் மாத்திரம், ரவ்னீத்துடன் சேர்த்து ஆஸ்திரேலியாவில் இடம்பெற்றிருக்கும் இந்தியாவை பூர்வீகமாக கொண்ட பெண்களின்மரணங்கள்இரண்டு. வன்முறை மூலம் உயிரிழந்த ஆஸ்திரேலிய பெண்களின் எண்ணிக்கை **16** என்று தரவுகள் கூறுகின்றன.


Book your Prosperity
in Advance for this
Akshaya Tritiya
லக்கி
நகைத் தொழிலக
அதிர்ஷ்டக் குலுக்கல்
தங்கத்தை
வாங்குங்கள்
அதிர்ஷ்டத்தை
வெல்லுங்கள்
Shop 14/38 (HUB), Mccrae st Dandenong, vic 3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284
எதிர்வரும் அட்சய திருதியை முன்னிட்டு
லக்கி நகைத் தொழிலகத்தின் அதிர்ஷ்டக் குலுக்கல்
01.04.2019 தொடக்கம் 10.05.2019 வரை
$ 500 மேல் பெறுமதியான நகை வாங்கும்
மூன்று பேருக்குக் குலுக்கல் மூலம் தங்க நாணயம்
பரிசாக வழங்கப்படும்.

## விக்டோரிய தமிழ் கலாசார மண்டபம்

# காயங்களிலிருந்து எழுந்து காலம் எழுதிய கவிதை!

ஆஸ்திரேலிய தேர்தல் நெருங்கிவருகின்ற வேளையில் பிரதான கட்சிக்காரர் எப்பாடுபட்டாவது தங்களின் வெற்றியை உறுதி செய்துகொள்ளவேண்டும் என்ற பகீரதப் பிரயத்தனங்களோடு மக்களை நோக்கி ஓடிவந்து வாய் நிறைய புன்னகையை உதிர்க்கிறார்கள். மாத்திரமல்லாமல், உறுதிமொழிகளையும் உச்சாடனம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

குறிப்பாக, ஆசிய நாட்டவர்களை நோக்கிய கவனம் இம்முறை அதிகம் திரும்பியுள்ளதை பல்வேறு சந்தர்ப்பங்களில் காணக்கூடியதாக உள்ளது. முன்பொரு காலகட்டத்தில், ஐரோப்பிய குடியேற்றவாசிகளின் தேவைகள் இந்த நாட்டில் அதிகமிருந்தபோது, அவர்களை நோக்கி தங்களது தேர்தல் காய்களை நகர்த்திய ஆஸ்திரேலிய அரசியல் இயந்திரம், இப்போது கொஞ்சம் கொஞ்சமாக ஆசிய நாட்டவர்களை நோக்கி தனது தந்திரோபாய தேர்தல் நகர்வுகளை தொடங்கியிருப்பதை காணலாம்.

மெல்பேர்ணில் தென்கிழக்கு பகுதியில் இயங்கிவரும் சீக்கிய ஆலயம் ஒன்றில் மொழிவழிக்கல்வி நிலையம் மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டிடம், தோட்டம் ஆகியவற்றை கட்டுவதற்கு லிபரல் கட்சி மூன்று லட்சத்து 40 ஆயிரம் டொலர்களை அண்மையில் வழங்கியிருக்கிறது. இந்த சீக்கிய ஆலயம் முன்பிருந்தே அங்கு இயங்கிவந்தாலும், இப்போது முன்னெடுத்திருக்கும் புனருத்தாரண வேலைகளுக்கு அப்பகுதிய சீக்கிய சமூகத்தவர் ஒருவர் ஒரு லட்சத்து 70 ஆயிரம் டொலர்களை வழங்கியிருக்கிறார். அதன்பின்னர், தங்களது தேவைகளை பட்டியல்படுத்திய அப்பகுதி மக்கள் கையெழுத்துக்கள் மூலம் அவற்றை உறுதி செய்து ஆளும் கட்சி உறுப்பினரிடம் கொண்டுபோய் கொடுத்தபோது, அதனை ஏற்றுக்கொண்டு மேற்படி நிதி உதவியை அவர் செய்திருக்கிறார்.

அதுபோல, ஈழத்தமிழ் சங்கத்தின் நெறிப்படுத்தலுடன் மெல்பேர்ணின் கிழக்கு பகுதியில் வாங்கப்பட்டுள்ள கலாசார மண்டபத்துக்கு ஏற்கனவே கொடுத்து உதவிய அரை மில்லியன் டொலர்களுக்கு மேலதிகமாக, வரும் தேர்தலில் லேபர் கட்சி ஆட்சிக்கு வந்தால் 350 ஆயிரம் டொலர்களை தருவதாக மத்திய அரசின் லேபர் உறுப்பினர் வந்து அண்மையில் உறுதியளித்துவிட்டுப்போயிருக்கிறார்.

இந்த உத்தியோகபூர்வ அறிவிப்பு அண்மையில் டண்டிநொங் பகுதியில் தமிழ் கலாசார மண்டபத்தை அமைப்பதற்காக வாங்கப்பட்டுள்ள இடத்தில்வைத்து லேபர் கட்சியின் மத்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஜூலியன் ஹில்லினால் வெளியிடப்பட்டது.

இது விக்டோரியா வாழ் தமிழ் மக்களைப்பொறுத்தவரை மிகப்பெரிய நற்செய்தி. தமிழ் அமைப்புக்கள் என்ற வகையில் வெறும் களியாட்ட நிகழ்வுகளை நடத்தி கொத்துரொட்டியை பரிமாறுவதோடு நின்றுகொள்ளாமல் வருங்காலத்தின் தேவை-கருதி மிகவும் நேர்த்தியாக முன்னெடுக்கப்பட்டுவரும் காரியத்தின் மிகப்பெரிய வெற்றியென்றே இதனை காணவேண்டியிருக்கிறது.

ஆனால், இதிலுள்ள ஒரு முக்கியமான விடயத்தை புரிந்துகொள்வது நல்லது.

அதாவது, மேற்குறிப்பிட்ட சீக்கிய ஆலயம் தொடர்பிலான அரசாங்கத்தின் நிதி உதவியையும் ஈழத்தமிழ்சங்கத்தின்கலாசாரமண்டபத்துக்கான நிதி உதவி மற்றும் நிதி உதவிக்கான உறுதிமொழி-களையும் பார்க்கும்போது ஒரு ஒற்றுமையை காணலாம்.

ஒரு தனி இனக்குழுமமாக இந்த நாட்டில் சில விடயங்களை கலாசார - பண்பாட்டு ரீதியாக முன்னெடுப்பதற்கானசுதந்திரவெளிகளை மக்கள் அமைத்துக்கொள்ளும்போது, அதற்கான நிதி ரீதியான உதவியை வழங்குவதற்கு அரசாங்கம் எப்போதும் தயாராக இருக்கிறது. ஆனால், இது குறித்து தங்களிடம் உதவிக்காக வருகின்ற விடயங்களில் குறிப்பிட்ட இனக்குழுமம் எவ்வளவுதூரம் பொறுப்போடும் ஆர்வத்தோடும் உள்ளது என்பதை உன்னிப்பாக அவதானித்து அதன் அடிப்படையில்தான் அரசாங்கத்தின் பதில் நடவடிக்கையும் அமைகிறது.

இந்த இரண்டு சம்பவங்களிலும் காணக்கூடிய உண்மை, குறிப்பிட்ட சமூகங்கள் தங்களது தேவைக்காக பணத்தை தமது சமூகத்திலேயே சேர்த்திருக்கிறார்கள். தங்களது இலக்கு குறித்த உச்ச கரிசனையை அரசுக்கு காண்பித்திருக்கிறார்கள். இந்த நிலையில், மிகுதியை அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் என்ற கடப்பாடு அவர்களுக்கு ஏற்படுகிறது. அரசாங்கமும் உதவியை செய்துவிடுகிறது.

கடந்த காலங்களில் இப்படியான இணக்க ரீதியான நடவடிக்கைகளை ஈழத்தமிழ் சமூகத்தின் மத்தியில் நாங்கள் காணவில்லை.

ஆஸ்திரேலிய அரசாங்கம் தமிழர்களை இங்கே குடியேறுவதற்கு அனுமதித்த காரணத்தினால் தமிழர்களுக்கு அரசாங்கம் கடனாளியாகிவிட்டது என்பது போலவும்-

அந்த அடிப்படையில் ஆஸ்திரேலிய அரசாங்கம் எங்களுக்கு உதவிகளை செய்து தரவேண்டியது கட்டாயம் என்பது போலவும் அணுகுமுறைகளை கடைப்பிடித்த காரணத்தினால் இழந்தது அதிகம் பெற்றுக்கொண்டது மிகக் குறைவு.

ஈழத்தமிழ் சங்கத்தின் நெறிப்படுத்தலின் வழியாக இப்போதாவது எமது சிந்தனை முறைகளில் - பல்கலாசார நாட்டின் ஆதார விழுமியங்களை நோக்கிய அணுகுமுறைகளில்-பொதுப்புத்திசார்ந்து ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியும் அனுபவமும் மெச்சுதற்குரியது.

விக்டோரியாவில்தமிழர்களின் பெயரால் ஒரு கலாசார மண்டபம் உருவாகுவதென்பது ஆஸ்திரேலிய தமிழர்களுக்கே பெருமை.

புலம்பெயர்தல் ஆரம்பித்த கடந்த நான்கு தசாப்த காலங்களில் ஆலயங்களுக்கு கிடைத்த முக்கியத்துவங்கள் எமது அடுத்த தலைமுறை குறித்த தேவைகளுக்கு கொடுக்கப்படவில்லை என்பது மிகத்துயரமானதொரு விடயம்.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேல் தாயகத்தில் இடம் பெற்ற போரின்போது புலம் பெயர்ந்தவர்களின் தேவைகள் குவியப்படுத்தப்பட்ட களம் வேறு என்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய நியாயம்தான். ஆனால், அதே காலப்பகுதியில்தான் ஆஸ்திரேலியாவின் எல்லா பகுதிகளிலும் புதிது புதிதாக எத்தனையோ ஆலயங்கள் முளைத்தன. கடவுளை காண்பித்து அப்போதும் கடமைகளை தவறி இப்போதும் கடமைகளை தவறவிடாமல், விழித்துக்கொண்டதே பெரிய விடயம்தான்.

கடந்த இரண்டு வருட காலத்துக்குள் இந்த மண்டபத்துக்குரிய சிந்தனை உருவாகி அதனை செயற்படுத்தி, மக்களிடம் கொண்டு சென்று, ஆரம்ப நிதிப்பங்களிப்பின் மூலம் ஒரு மண்டபத்தினை வாங்கி, சமாந்தரமாக அரச உதவியையும் பெற்றுக்கொண்டது போன்ற விடயங்கள் ஈழத்தமிழ் சங்கத்தின் நெறிப்படுத்தலில் நடந்து முடிந்திருக்கின்ற மிகப்பெரிய சாவல் நிறைந்த சாதனைகள்.

இன்று கிட்டத்தட்ட ஐந்து மில்லியன் டொலர்களுக்கும் மேலதிகமான செலவுடன் தயாராகப் போகின்ற மிகப்பெரிய மண்டபத்தில் பெருமளவிலான மக்களும் பங்குதாரர்களாக இணைந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட நானூறுக்கும் மேற்பட்ட 5000 டொலர் பங்குகளை பொதுமக்கள் வாங்கியிருக்கிறார்கள் என்பது கணிசமானதொரு வெற்றி.

ஈழத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளிடமிருந்து கடன் வாங்கி சிங்களதேசம் நடத்திய போருக்கு எதிர்ப்புறத்தில் ஒரு மிகப்பெரிய போரை நடத்துவதற்கு தாங்குதளமாக நின்ற புலம்பெயர் சமூகம், இன்று ஒரு மண்டபத்தை கட்டுவதற்கே இவ்வளவு கடினமான பாதையில் முன்னேறவேண்டியிருக்கிறது என்றால், இங்கு தவறுவது பணமல்ல. முன்னமிருந்த பணத்தை பல மடங்கு பணம் புலம்பெயர் சமூகத்திடம் புரண்டுகொண்டுதானிருக்கிறது. பெரியதொரு கனபரிமாணத்தில் காணமால் போயுள்ள விடயம் "ஒற்றுமை" என்பதே.

ஆக, வியாபித்து எழுந்துவருகின்ற விக்டோரிய கலாசார மண்டபம் எனப்படுவது இன்று ஒன்றிணைத்துக்கொள்வது தனியே பணத்தையும் பொருட்களையும் அல்ல. அதற்கு மேலாக தமிழ் மக்களிடையே குலைந்துபோயுள்ள ஒற்றுமையையும்தான்.

அத்துடன், போரும் அதன் அழிவும் கொடுத்து மிகப்பெரிய வேதனை - குழப்பம் - விரக்தி என்பவற்றிலிருந்தும் எழுந்துவருவதற்கான மிகப்பெரிய நம்பிக்கையின் அடையாளமாகவும் இந்த புதிய மண்டபம் விக்டோரியாவில் எழுந்துவரப்போகிறது. இந்த மண்டபத்துக்கு இருக்கப்போகின்ற பெறுமதி தனியே ஒரு கலாச்சார அரங்கு என்பதற்கு அப்பால் இன்னும் அதிகமாகும்.

அந்தவகையிலும் ஈழத்தமிழ் சங்கத்தின் பணி காலத்தில் ஞாலப் பெரிது! ■



# Melbourne Ayyappa Seva Sangam (MASS)






அன்புடையீர்,

அவுஸ்திரேலியா நாட்டில் மெல்போன் மாநகரில் கலியுக வரதனாம் ஸ்ரீ ஐயன் ஐயப்பனுக்கு இந்து சனதன தர்மத்தின் தாந்தீரிக சாஸ்திர முறைப்படி ஆலயம் அமைப்பதற்கு ஐயனின் திருவருள் தேவபிரசன்னம் முறையில் கூடியுள்ளது. ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் ஆலயம் யோககலாச்சாரம், ஆன்மீகம், கல்வி மற்றும் இந்துவேத சாஸ்திரங்களை பறைசாற்றும் வகையிலும் மற்றும் இச் சிறப்புக்களை அடுத்ததலைமுறைக்கு எடுத்துச்செல்லும் வகையிலும் அமைப்பதற்காக அனைவரினதும் நல் ஆதரவினையும் தர வேண்டுகின்றோம்.

## What is Temple Project

## Mission

The mission of Melbourne Ayyappa Seva Sangam Inc (MASS) is to build a traditional Lord Shree Ayyappa Swamy Temple in Melbourne with unique architectural design and values. The Lord Shree Ayyappa Swamy temple will serve the purpose of providing a place of worship for all devotees who believe and follow devotional values of Lord Shree Ayyappa Swamy. The temple is anticipated to support our community activities for all age groups as deemed fit by MASS Organsational values and rules.

**Temple project has a minimum of four stages as set out below in the order of priority.**

- Stage 1 – Land acquisition
- Stage 2 – Temporary Shelter/Shed for Shree Lord Ayyappa Swamy
- Stage 3 - Permanent Temple structure for Shree Lord Ayyappa Swamy
- Stage 4- Cultural Centre

## Temple Project – Other Details

Melbourne Ayyappa Seva Sangam web site

www.massayyappa.org.au

### Bank Details (Donations)

Bank Name: Commonwealth Bank
BSB: 063121
Account Number : 11145731
Account Name: MASS Ayyappan Temple Fund

### Contact details for Temple Project

| | |
|---|---|
| Mr. Rajendran Kailasam (Raja) | : 0401713369 |
| Mrs. Malathy Balaraj | : 0408325236 |
| Dr. Vijay Anand Senguttuvan | : 0422533355 |
| Mr. Sundararaj N Varadaraj | : 0413561622 |

விளம்பர அனுசரணை :
கண்ணைப் சுவாமிகள் அடியார் திருக்கூட்டம்



# பயங்கரவாதத்தை பலியெடுப்பது எப்படி?

## உலகுக்கு காண்பித்த இரும்புப்பெண்மணி!

● ஆறிலன்

நல்லாட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு நாட்டில் நல்ல தலைவனின் பண்புகளை அறிந்து கொள்வது மிகக்கடினம். நாடு இக்கட்டான சூழலை எதிர் கொள்ளும்போதுதான் ஒரு ஆளுமை மிக்க தலைவனின் திறமையை மதிப்பீடு செய்துகொள்ளமுடியும். அவனது முடிவெடுக்கும் திறன் முதல் "இவனை நம்பி இந்த நாட்டை ஒப்படைக்கலாமா" என்ற அடிப்படை கேள்விவரை பல விடயங்களை ஒரு சராசரி வாக்காளன் மௌனமாக அவதானிக்கிறான்.

அந்தவகையில், பேரிடர்கள்வந்தபோதெல்லாம் எந்தவிதமான அரசியல் தெளிவுமில்லாமல் நிலைமைகளை போட்டுடைத்த பல தலைவர்களை நாங்கள் கண்டிருக்கிறோம். அதுவும் தெற்காசிய அரசியலில் இப்படிப்பட்ட அரசியல் தலைவர்களை காண்பதற்கு பற்றாக்குறையே இராது.

ஆனால், இவற்றுக்குள்ளிருந்து விலத்திப் பார்க்கவேண்டிய ஒரு ஒளிக்கீற்றாக அண்மையில் வெளிப்பட்டவர் நியூஸிலாந்து பிரதமர் ஜஸின்டா ஆர்டன்.

ஏனென்றால், நியூஸிலாந்தில் இடம் பெற்ற படுகொலைப்படலத்தை இலகுவாக கடந்துசென்றுவிட முடியாது. வெள்ளையின வெறிபிடித்த - தீவிர வலதுசாரி அரசியல் கொள்கையில் ஊறித்திளைத்த - முஸ்லிம் இனத்தின் மீது தீராத வன்மம் கொண்ட - கொடூர மனம் படைத்தவன் ஒருவன் திட்டமிட்டு அரங்கேற்றிய படுகொலைப்படலம் அது. அதுவும் தான் செய்கின்ற இந்தக்கொடுங்காரியத்தை உலகமே பார்க்கவேண்டும் என்றும் அதன் மூலம் தனது கொலையின் பின்னணியில் தான் முன்வைக்கின்ற காரணத்தை உலகுக்கு கூறவேண்டும் என்றும் மிகத்துல்லியமாக திட்டமிட்டே அந்தப் படுகொலை படலத்தை அவன் செய்துமுடித்திருந்தான்.

இப்படியான படுகொலைகளை புரிகிறவர்கள் அநேகமாக தங்களது இலக்கை அடைந்தவுடன் தற்கொலை செய்துகொள்வார்கள். இல்லாவிடின், யாராவது தம்மை கொலைசெய்யும் வரையாவது தாக்குதலை நடத்திக்கொண்டிருப்பர். ஆனால், இந்தக் கொலையாளிக்கு தனது படுகொலை படலத்தின் பின்னரும் உயிரோடிருக்க வேண்டும் என்ற திமிர் இருந்திருக்கிறது.

இது ஒருபுறமிருக்க -

இப்படிப்பட்ட ஒரு சம்பவம் இடம் பெற்ற நாட்டில் இந்த சம்பவத்தினால் ஏற்பட்ட பதற்றத்தை தணிப்பதென்பது மிக மிகக்கடினமானது. தாக்குதல் நடை பெற்றவுடன் அங்கு விரைகின்ற பொலிஸ் வாகனங்களும் உயர் ரக துப்பாக்கிகளுடன் குவிகின்ற பொலிஸாரும் அவர்களின் நாய்களும் உயர் தொழில்நுட்ப கருவிகளும் ஊடகங்களில் பார்க்கும்போது ஒரு நாட்டின் அனர்த்த முகாமைத்துவத்திலுள்ள மேன்மையை காண்பிக்கிறது. எதிர்பாராத ஒருசம்பவம் இடம்பெற்றால் அங்குசென்று செய்யவேண்டிய சம்பிரதாயமான சம்பவங்கள்தான் இவை. அதாவது, வீட்டில் பொருள் ஒன்று கீழே விழுந்து உடைந்து விட்டால்அதைக்கூட்டி அள்ளுவதுபோன்றதொரு செயற்பாடு.

அனர்த்தங்களுக்கு பிறகு அரசாங்கங்கள் காண்பிக்கும் இப்படியான நடவடிக்கைகள் எதுவும், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாட்டு மக்களின் மனங்களில் ஏற்பட்ட பதற்றத்தை இலகுவில் தணிப்பதில்லை. மாறாக, தாங்கள் சுதந்திரமாக திரிகின்ற வீதிகளில் திடீரென்று சீருடைகளில் திரியும் இராணுவத்தினராலும் பொலிஸாரினாலும் பொதுமக்கள் மேலும் அச்சத்திற்குள்ளாகிறார்கள். அடுத்தது என்ன என்ற பீதியில் உறைந்துபோகிறார்கள்.

அதற்காக அந்தச் சீருடையினர் தங்களது கடமையை செய்யாமல் விடவும் முடியாது. ஆனால், இப்படிப்பட்ட அழிவு - அனர்த்தம்போன்றவற்றிலிருக்கின்ற விளைவுகளில் இருந்தும் அவை உற்பத்தி செய்கின்ற அச்சத்திலிருந்தும் நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பதும் நேர்வழியில் நடத்துவதும் தான் ஒரு நாட்டுத் தலைவனினதும் பொறுப்புமிக்க அரசாங்கத்தினதும் உயரிய திறனாகிறது.

நியூஸிலாந்து பிரதமர் ஜஸிண்டா ஆர்டன் என்ற 38 வயதான பெண் அதனைச் செய்து காண்பித்திருக்கிறார்.

2008 ஆம் ஆண்டு முதன் முதலாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட ஜஸிண்டா ஒன்பது வருடங்களிலேயே அரசியலின் உச்சத்தைத்தொட்டார். 2017 ஆம் ஆண்டு நியூஸிலாந்தின் 40 ஆவது பிரதமராகப் பதவியேற்றார். இவர் பிரதமராகபதவியேற்றபோதுவழக்கம்போல பலபுறுபுறுப்புக்கள் பெண்ணை - அதுவும் 38 வயதுக்காரியை - நம்பி நாட்டை ஒப்படைப்பதா என்ற உட்குடைச்சல்கள் எல்லாம் கட்சிக்குள் இருக்கத்தான் செய்தன. எல்லாவற்றையும் மீறி நியூஸிலாந்தின் தொழிலாளர் கட்சி அவரை பிரதமர் வேட்பாளராக நிறுத்தி சாதித்தது.

இவ்வாறான ஒரு இறுக்கமான தலைமைத்துவப் பண்புடன்தான் அண்மையில் கிறைஸ்ட் சேர்ச்சில் இடம்பெற்ற படுகொலைச்சம்பவத்துக்கு எதிரான அரச எதிர்ப்பையும் வீதியில் இறங்கி நின்று தன் கையிலெடுத்தார்.

தனது நாட்டில் குறிப்பிட்டதொரு சமூகத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருக்கும் பாரிய படுகொலை சம்பவத்தினால், நாட்டு மக்களே பீதியில் உறைந்துபோயுள்ளனர் என்பதற்கு அப்பால், குறிப்பிட்ட சமூகத்தவர்கள் அச்சத்தில் கிடக்கிறார்கள் என்பதை கூர்மையாக உணர்ந்தார்.

உடனடியாக முஸ்லிம் மக்கள் வழிபாடுநடத்துகின்றபெரும்பாலானஇடங்களுக்கு சென்று அவர்களுடன் சென்று பர்தா அணிந்துகொண்டு வழிபாட்டில் ஈடுபட்டார். நியூஸிலாந்து நாடாளுமன்றத்துக்கு இஸ்லாமிய மதகுருவை அழைத்துவந்துகிறைஸ்ட்சேர்ச்சில்இறந்த மக்களுக்கான பிரார்த்தனையை மேற்கொண்டார். துப்பாக்கித்தடைச் சட்டத்தை கொண்டுவருவதாக உடனடியாக அறிவித்தார். அண்மையில் பிறந்த தனது குழந்தையை பெற்றோரிடம் சேர்ப்பித்துவிட்டு, தனது தனிப்பட்ட குடும்ப வாழ்வை ஓரமாக வைத்துவிட்டு நாட்டின் பதற்றத்தை உணர்ந்து ஒவ்வொரு இடமாகச் சென்று மக்களை சந்திப்பதில் அதிக நேரத்தை செலவிட்டார்.

நியூஸிலாந்து எனப்படுவது பல்லின மக்கள் வாழும் நாடு. இங்கு தீவிரவாதத்திற்கு இடமில்லை. எந்த இனமும் ஒன்றைவிட மற்றையது உயர்ந்ததில்லை. இங்கு சகலஇனமக்களும்பாதுகாப்புடன்வாழ்வதென்பது நிச்சயிக்கப்பட்ட ஜனநாயக உரிமை. அதனை உத்தரவாதம் செய்து தருவது தனது கடமை என்று மக்களின் மனங்களில் தெம்பூட்டினார். துணிவைக்கொடுத்தார்.

பயங்கரவாதத்தினை தோற்கடிப்பது என்பது கத்திக்கு கத்தி - கொலைக்குக் கொலை என்ற ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற பழிவாங்கும் நடவடிக்கை அல்ல. ஒன்றிணைந்த மக்கள் சக்தியின் மனத்திடத்தினால் பயங்கரவாதம் என்ற கொடூர மிருகத்தின் நகங்களையும் பற்களையும் நறுக்கி எறியமுடியும் என்று உறுதியாக நம்பினார். அதை மக்களிடமும் கொண்டு போய் சேர்த்தார்.

உண்மையைச்சொல்லுங்கள்!

இன்று எத்தனை அரசியல்தலைவர்கள் இவ்வாறானதொரு ஆளுமைப்பண்போடு வீதியில் இறங்கியிருக்கிறார்கள்?

எந்த ஒரு நாட்டில் அனர்த்தம் நடந்தாலும் தேசிய ஊடகங்களில் வந்து நின்று சோகம் வழிந்த முகத்தோடு ஒரு ஊடகக் குறிப்பை கொடுக்கிறார்கள். அநியாயத்துக்கு வருத்தம் தெரிவிப்பார்கள். மிஞ்சி மிஞ்சிப்போனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு கொடுப்பார்கள். இது தானே வழமை.

பயங்கரவாதத்துக்கான எதிர்ப்பென்பது முழுக்க முழுக்க மனவெளிகளில் நடத்தப்படவேண்டியது. அதுதான் நிரந்தரமானது. எவ்வளவுதான் இரத்தவெறியாட்டம் செய்தாலும் ஒற்றுமைப்பட்ட மக்கள் அந்த அழிவிலிருந்து மீண்டு வருவார்கள் என்ற செய்தி மீண்டும் மீண்டும்பயங்கரவாதிகளுக்குசொல்லப்படவேண்டும். மக்களது ஒற்றுமைக்கு முன்னால் பயங்கரவாதம் என்பது வெறும் துரும்பு என்பது திரும்ப திரும்ப இப்படியான சம்பவங்களின் பின்னால் இடித்துரைக்கப்படவேண்டும்.



(15ஆம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாதத்தை பலியெடுப்பது எப்படி?



(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

நியூஸிலாந்து பிரதமர் இதனைச்செய்து காட்டினார். தனது நாட்டு மக்களை தன்னோடு திரட்டிக்கொண்டு உலகுக்கே முன்மாதிரியாக நின்றார். ஆனால், எல்லா நாடுகளும் அதன் தலைவர்களும் அவ்வாறான துணிச்சல் மிக்கவர்களா? ஆளுமைப்பண்பு கொண்டவர்களா என்பதுதான் இங்கு கேள்வி.

இதனைத்தான், அண்மையில் "தப்ரொஜெக்ட்" என்ற நிகழ்ச்சியல் ஆஸ்திரேலிய பிரதமர்ஸ்கொட் மொறிஸனை அழைத்து வந்து செவ்வி கண்ட ஊடகவியலாளர் வலீட் அலி மூஞ்சியில் அடித்ததுபோல கேட்டு மக்களின் முன்னால் உரித்து வைத்தார்.

இந்த செவ்வி இடம்பெறுவதற்கு முன்பே - கிறைஸ்ட்சேர்ச் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றவுடன் - ஊடகவியலாளர் வலீட் அலி "த புரொஜக்ட்" நிகழ்ச்சியில் வெளியிட்ட சிறப்பு ஆய்வுக் குறிப்பில், ஆஸ்திரேலியாவில் இப்படியான தாக்குதல் அச்சமுள்ளதா என்பது பற்றி ஆராய்ந்தார். அதில், ஆஸ்திரேலியாவில் முஸ்லிம் மக்கள் தொடர்பான விவகாரத்தை சரியாக கையாளத்தெரியாத பிரதமர் உட்பட ஆளும் கட்சியினர் அதில்குளிர்காயப்பார்க்கிறார்கள்என்ற சாரப்பட ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தார். தனது கருத்துக்கு ஆதாரமாக ஊடகவியலாளர் வலீட் அலி ஒரு பட்டியலைப் போட்டு பிரதமரிடம் நேரடியாகக் கேட்டார்.

- இஸ்லாத்தின்பெயரால்மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்களை ஆஸ்திரேலியாவிலுள்ள முஸ்லிம் தலைவர்கள் பெயரளவில் கண்டிக்கிறார்களே தவிர, அது தொடர்பில் அவர்களுக்கு கரிசனை எதுவும் கிடையாது என்று ஆஸ்திரேலியாவில் பிரதமர் கூறுகிறார்.

- உள்துறை அமைச்சர் பீற்றர் டட்டன் கூறும்போது 70 களில் லெபனான் மக்களை ஆஸ்திரேலியாவுக்குள் அனுமதித்ததில் அப்போதைய ஆஸ்திரேலிய அரசு மிகப்பெரிய தவறிழைத்துவிட்டது என்கிறார்.

- கிறைஸ்ட்சேர்ச்சில இடம்பெற்றது போன்ற தாக்குதல்கள் எதிர்பார்க்கக்கூடியதுதான் என்று அந்த இரத்த வெறியாட்டத்தை கிட்டத்தட்ட ஆதரித்து கருத்து வெளியிட்டு 17 வயதுச் சிறுவனால் முட்டையடி வாங்கிய பிரேஸர் அனிங்கிற்கு ஆளும் லிபரல் கூட்டணியிலுள்ள ஏழுக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே கைலாகு கொடுத்து வாழ்த்துக்கிறார்கள்.

இவை மாத்திரமல்ல, ஆஸ்திரேலிய அரசியல்தரப்பில் முஸ்லிம்கள் விவகாரம் மற்றும் பயங்கரவாதம் ஆகியவை தொடர்பில் இவ்வளவு பொறுப்பற்றதனமாக கருத்துவெளியிட்டுக்கொண்டு -

இங்கு மக்களிடையே ஒற்றுமையை கொண்டுவரவேண்டும். பயங்கரவாதத்தினை ஒன்று சேர்ந்து எதிர்க்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதில் என்ன பயனிருக்கிறது என்று கேட்டார் வலீட் அலி.

பிரதமர் ஸ்கொட் மொறிஸன் ஏதேதோ சமாளிப்புக்கள் எல்லாம் சொல்லி ஒருவாறு தனது பதிலை தாளித்துக்கொடுத்தார்.

இங்குதான் நியூஸிலாந்து பிரதமருக்கும் ஏனைய நாட்டுத்தலைவர்களுக்குமான வித்தியாசங்கள் விசித்திரமாக வெளித்தள்ளியவாறு தெரிகின்றன.

அதாவது, மக்களிடம் ஏற்படவேண்டிய மிகப்பெரிய மாற்றங்களாக எதிர்பார்க்கப்படும் விடயங்களை அரசியல் ரீதியாக அமுல்படுத்தமுடியாது. அது மிகப்பெரியதொரு சமூகச்செயற்பாடு. தலைவர்களாக தங்களை பிரகடனப்படுத்துபவர்கள் முதலில் தங்களிலிருந்து அந்த மாற்றத்தை ஆரம்பிக்கவேண்டும். இதய சுத்தியுடன் இந்த அரசியல் மாற்றம் நிகழவேண்டும்.

அந்தவகையில், சமகாலத்தில் நியூஸிலாந்து மற்றும் கனடியப் பிரதமர்கள் இளம் சமுதாயத்துக்கான உதாரணத்துக்குரிய ஆளுமைளாக தொடர்ந்தும் வெற்றியீட்டியவண்ணமுள்ளார்கள்.

நம்பிக்கையில் வாடிக்கையாளர்களின் மனதில் இடம் பிடித்த -
10 வருடகால அனுபவமுள்ள...

PERPETUA MONEY TRANSFER
WorldWide

We Guarantee the best rate for
SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE

- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVINIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

COMMERCIAL BANK | BOC | PEOPLE'S BANK | SEYLAN BANK PLC | HNB
SampathBank | NSB National Savings Bank | cash Xpress

Send Money to any Bank in Sri Lanka

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478 - Email: pmoneytransfer@ymail.com



"அப்பா (இயக்குநர் மகேந்திரன்) உடல் நலக்குறைவினால் அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்" - என்ற தகவலைத் தெரிவித்திருந்தார் மகேந்திரனுடைய மகன் ஜான். இந்தச் செய்தியை முகப்புத்தகத்தில் பார்க்கக் கிடைத்தது.

அப்போது, மகேந்திரன் வன்னிக்கு வந்து விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்ததைப்பற்றி வெளியாகியிருந்த குமுதம் நேர்காணலை யாரோ ஒரு நண்பர் தன்னுடைய முகப்பில் பகிர்ந்திருந்தார். அந்த நேர்காணலைப் பிரதியெடுத்து தெய்வீகனுக்கு அனுப்பினேன். கூடவே மகேந்திரனுடைய வன்னிப் பயணம் பற்றித் தெய்வீகனுடன் பேசினேன். அப்பொழுது தோன்றியது மகேந்திரனைப்பற்றி "எதிரொலி" க்கு எழுதலாம் என்று. அப்படி எழுதிக் கொண்டிருக்கும்போது கட்டுரையை முடிப்பதற்கு முன்பே தெய்வீகனிடமிருந்து அழைப்பு.

"மகேந்திரன் போய் விட்டார்"

இந்த மாதிரி கவலையளிக்கிற சேதி வரும்போது அதிர்ச்சியில், துயரத்தில் ஆடிப்போய் விடுகிறோம். மகேந்திரன் விருப்பத்துக்குரிய சினிமா இயக்குநர் மட்டுமல்ல, நெருக்கத்துக்குரியவரும் கூட.

மகேந்திரனும் ஜானும் 2005 இல் வன்னிக்கு - கிளிநொச்சிக்கு - வந்திருந்தனர். அதற்குச் சில மாதங்களுக்கு முன்புதான் விஜய் நடித்த "சச்சின்" படத்தை ஜான் இயக்கி முடித்திருந்தார். அந்தப் பணிகள் முடிந்த கையோடு வன்னிக்கு இருவரும் வந்தனர். உண்மையில் புலிகள் அழைத்திருந்தது மகேந்திரனையே. இதற்கு வழிகாட்டியது ஓவியர் புகழேந்தியாகும்.

அப்பொழுது ஓவியர் புகழேந்தியின் ஓவியக் காட்சிகள் வன்னி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் நடந்து கொண்டிருந்தன. ஓவியக்காட்சிகளின் முடிவில் புகழேந்தியை அழைத்துச் சந்தித்த பிரபாகரன், "ஓவியத்துறையில் ஆர்வமுள்ள போராளிகள், கலைஞர்கள், மாணவர்களுக்கெல்லாம் ஓவியப் பயிற்சியை வழங்க முடியுமா" - என்று கேட்டார்.


"ஓ.. செய்யலாமே" - என்றார் புகழேந்தி. அப்படியே பேச்சு தமிழீழச் சினிமாவைப் புதிய கட்டத்துக்கு வளர்ப்பதைப்பற்றித் திரும்பியது. "பொருத்தமான சினிமாப் பயிற்றுநர்களை அழைத்தால், அவர்கள் மூலமாக ஏற்கனவே திரைத்துறையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போராளிகளுக்கும் கலைஞர்களுக்கும் விரிவான அறிவையும் நுட்பங்களையும் கற்றுத் தரலாமல்லவா" - என்றார் பிரபாகரன்.

"நிச்சயமாக" - என்றார் புகழேந்தி.

"யாரை அழைக்கலாம்" - என்று கேட்டார் பிரபாகரன்.

அந்த நாட்களில் தமிழ்ச்சினிமாவில் அறியப்பட்டிருந்த பாரதிராஜா, சீமான், தங்கர் பச்சான் போன்றவர்களும் புலிகளுக்கு அறி

# வன்னிக்கு வந்த மகேந்திர நதி



முகமாகியிருந்தனர். ஈழப்பிரச்சினையை மையமாக வைத்து "காற்றுக்கென்ன வேலி" படத்தை இயக்கிய புகழேந்தி தங்கராஜ் வன்னிக்கு வந்து பிரபாகரனைச் சந்தித்துச் சென்றிருந்தார். இருந்தாலும் இவர்களுக்கு அப்பால் உள்ள ஒருவரே தேடப்பட்டார்.

"இப்பொழுது (2005 காலகட்டத்தில்) பிஸியாக - முன்னணியிலிருப்பவர்களை அழைத்தால் அதற்கு அதிக செலவாகும். அது மட்டுமல்ல. அவர்களுக்கான நேரமும் பிரச்சினையாக இருக்கும். சிலர் இதை ஓர் அரசியல் விவகாரமாக மாறினால் அல்லது யாராலும் அப்படி மாற்றப்பட்டால் அது தங்களுடைய எதிர்காலத்துக்கு நெருக்கடியாகும் என்று எண்ணுவார்கள். ஆகவே நாங்கள் மகேந்திரனை அழைக்கலாம். அவர் எப்பொழுதும் இயங்கக்கூடியவர். தமிழில் மக்களின் வாழ்க்கையை இயல்போடு பேசும் உதிரிப்பூக்கள், மெட்டி, பூட்டாத பூட்டுகள் போன்ற யதார்த்தச் சினிமாவை வெற்றிகரமாக உருவாக்கியவர். இன்னும் அதே உணர்வோடும் உற்சாகத்தோடும் இருக்கிறார். திரைத்துறையில் பயிற்சியை வழங்கக்கூடிய ஆற்றல் அவருக்கு நிறைய உண்டு" - என்று சொன்னார் புகழேந்தி.

மகேந்திரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஜானும் தன்னோடு வந்தால் உதவியாக இருக்கும் என்று சொன்னார் மகேந்திரன்.

"ஓ.. தாராளமாக வரலாம். அவரையும் அழைத்து வாருங்கள்" - என்று பச்சைக் கொடியைக் காட்டினர் புலிகள்.

போர் நிறுத்த காலச்சூழலில் நிலவிய நெகிழ்வான நிலைமை இதற்கு வாய்ப்பாக இருந்தது. ஏற்கனவே வீடியோ கமராக்களின் மூலமாகச் சிறிய அளவில் நீளப் படங்களையும் குறும்படங்களையும் தயாரித்திருந்த புலிகளுக்கு போர் நிறுத்தச் சூழல் முழுமையான சினிமாவை நோக்கிச் சிந்திப்பதற்கான வாய்ப்பை அளித்தது. முழுமையான சினிமாவை உருவாக்குவதற்கான சாதனங்கள் வெளியிலிருந்து தருவிக்கப்பட்டன. சாதனங்கள் மட்டுமிருந்தால் போதாது. அனுபவமும் சினிமா அறிவும் உள்ளவர்கள் தேவை என்பதே பிரபாகரனின் எண்ணம். அப்பொழுதுதான் நல்ல படங்களை உருவாக்குவதற்கான சாத்தியங்களை உண்டாக்கலாம்.

இதற்கு ஏற்கனவே குறும் படங்கள், முழுநீளப்படங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு முறைப்படியான திரைத் துறைப்பயிற்சியை வழங்குவது அவசியம் என்று எண்ணினார் பிரபாகரன். இதற்கெனத் திரைப் படப் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இதனை நிதர்சனத்துக்குப் பொறுப்பாக இருந்த சேரலாதன் ஒருங்கிணைத்தார்.

வன்னி வந்ததும் பயிற்சிகளை ஆரம்பித்தார் மகேந்திரன். முதலில் சினிமா பற்றிய அறிமுகம். இதற்காக, வரும்போது எடுத்து வந்திருந்த உலகின் சிறந்த படங்களை ஒவ்வொரு நாளும் காட்சிப்படுத்தினார். தினமும் ஒரு படமோ இரண்டு படங்களோ காட்சிப் படுத்தப்பட்டன. அந்தப்படங்கள் உருவாக்கப்பட்ட விதம்? அவை பார்வையாளர்களின் மனதில் உண்டாக்கும் அனுபவம்? படங்களைப் பார்க்கும் போது உண்டாகும் சிந்தனை? நடிப்பு, ஒளிப்பதிவு, திரைப்பிரதி, வசனங்கள், இசை, காட்சியமைப்பு, காட்சித்தளங்கள் என ஒவ்வொன்றைப் பற்றியும் உரையாடல்களின் வழியே கவனப்படுத்தினார். குறிப்பாக ஈரானியச் சினிமா, லத்தீன் அமெரிக்கச் சினிமா, ஆப்கானிஸ்தானியச் சினிமா, சிங்களச் சினிமா என்று ஒடுக்குமுறைக்கும் மாற்றுப் பண்பாட்டுக்குமுரிய சினிமாக்களைப் போல ஈழச் சினிமாவும் வர வேண்டும். அப்படி வர முடியும் என்பது மகேந்திரனுடைய நம்பிக்கையும் விருப்பமும்.




இதேவேளை, பயிற்சியில் ஈடுபடுகின்றவர்கள் ஏற்கனவே உருவாக்கியிருந்த அல்லது பங்களித்திருந்த படங்களையெல்லாம் பெற்றுப் பார்த்தார். அப்பொழுதுதான் இவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள், எதையெல்லாம் சிந்திக்கிறார்கள்? எப்படிப் படங்களை உருவாக்குகிறார்கள்? இந்த நிலையில் இவர்களுக்குத் தன்னால் எத்தகைய சினிமாவையும் நுட்பங்களையும் சொல்லித் தர முடியும் என்று தெரியும் என அவர் எண்ணியிருக்கக்கூடும்.

அடுத்த கட்டமாக திரைப்பிரதியை உருவாக்குவது எப்படி என்ற பயிற்சிகள் ஆரம்பமாகின. பயிற்சியாளர்களுடன் கதைகளைப் பற்றிய உரையாடல்கள் நடந்தன. இன்னொரு பக்கத்தில் ஈழப்படைப்பாளிகளின் கதைகளைத் தேடத் தொடங்கினார் மகேந்திரன். இதற்காக ஈழ எழுத்தாளர்களின் புத்தகங்களையெல்லாம் சேகரித்துக் கொடுத்தேன். "இவ்வளவு எழுத்தாளர்களும் கதைகளும் இருக்கும் போது எவ்வளவு மகத்தான சினிமா வரவேண்டும்" - என்று வியந்தார்.

"நாங்கள் படிக்கிற எல்லாக் கதைகளையும் இலகுவில் திரைப்படமாக மாற்றி விடமுடியாது சில கதைகள் சினிமாவில்தான் ஜொலிக்கும்" - என்று தன்னுடைய அவதானங்களையும் அனுபவங்களையும் சொன்னார் மகேந்திரன். அவருடைய உதிரிப்பூக்கள், பூட்டாத பூட்டுகள், முள்ளும் மலரும், மெட்டி போன்ற படங்கள் ஏற்கனவே புதுமைப்பித்தன், பிரபஞ்சன், சிவசங்கரி போன்றவர்களின் கதைகளை வைத்து எடுக்கப்பட்டவையே. ஆகவே அப்படியான ஒரு மரபைத் தன்னிடம் பயில்கின்றவர்களிடத்திலும் பயிற்றுவிப்பதற்கு முயற்சி எடுத்தார்.

**(17ஆம் பக்கம் பார்க்க)**

# வன்னிக்கு வந்த மகேந்திர நதி



(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் படங்களின் மூலக் கதைகளையும் அவை சினிமாவாக உருவாகியிருப்பதையும் பற்றி விளக்கினார்.

ஒரு கட்டத்தில், மாதிரிக்கு *"1996"* என்ற படத்தைத் பின்னணியில் இருந்து கொண்டு திரைத்துறைப் பயிற்சி பெற்றுக்கொண்டிருப்போரை இயக்க வைத்தார் மகேந்திரன். இதற்காக எழுத்தாளர் தாமரைச்செல்வியின் "இடைவெளி" என்ற சிறுகதை திரைப்பிரதியாக்கப்பட்டது.

இந்தப்படத்தின் மையப்பாத்திரங்களான தாத்தாவாக முல்லையேசுதாசனும் பேரக்குழந்தையாக எங்கள் மகன் மகிழும் நடித்தனர். எங்களுடைய சுற்றயலிலேயே பெருமளவு காட்சிகள் பிடிக்கப்பட்டன. எடிட்டிங் முடிந்தபோது என்னைக் கூப்பிட்டார். கூட என்னோடிருந்த இரவி அருணாசலத்தையும் அழைத்துப் போனேன்.

"எப்பிடி வந்திருக்குப் படம்ன்னு பாத்துச் சொல்லுங்க" - என்று சொன்னார். ஏற்கனவே அவர் உருவாகிய படங்களையெல்லாம் பார்த்து வியந்தவர்களிடம் இப்படியொரு கேள்வி. இப்பொழுது அவருடன் கூடப் பழகவும் அவர் கூட இந்த மாதிரி இருந்து வேலை செய்யவும் வாய்த்திருக்கிறதே என்ற மகிழ்ச்சி.

படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம். இறுதிக்காட்சியில், வீட்டில் இனியும் இருக்க முடியாது என்ற நிலையில் யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பிச் செல்லும் தாத்தாவைத் தேடிக் கொண்டு ஓடும் பேரன்... தாத்தா என்று அழைத்துக் கொண்டு நீண்டதூரம் ஓடிய களைப்பில் தடுமாறி விழப்போகும்போது...

இரவி அழுதே விட்டார். என்னுடைய தொண்டை கட்டி விட்டது. கண்களிலிருந்து நீர் கொட்ட மகேந்திரனின் கைகளை அழுத்திப்பிடித்தேன். மெல்லிய புன்னகையோடு என்னுடைய தோள்களைத் தடவினார் அவர்.

ஏறக்குறைய மூன்று மாதங்களுக்கு மேல் கிளிநொச்சியில் தங்கியிருந்தார் மகேந்திரன். எத்தனை மணிக்குத் தூங்கினாலும் அதிகாலையிலேயே எழுந்து விடுவார். காலையில் எழுந்தவுடன் அவர் மூன்று வேலைகளைச் செய்வார். முதலில் நடை. நடையால் வந்த பிறகு புத்தகம் படிப்பது. மூன்றாவது எழுதுவது. அப்பொழுது அவர் எழுதியவைதான் "நடிப்பு என்பது", "திரைக்கதை என்பது" என்ற இரண்டு புத்தகங்களும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அத்தியாயத்தை எழுதுவார். எழுதிய பிரதியை எடுத்துக் கொண்டு வந்து அன்றன்றே கையில் தந்து "படித்துச் சொல்லுங்க சார்" என்பார். அவருடைய அனுபவங்களின் முன்னே நான் என்னசொல்வது? ஆனாலும் மனதில் பட்டதைச் சொல்வேன். இரண்டு புத்தகங்களையும் நிதர்சனம் வெளியிட்டது. நிதர்சனத்துக்காக அவற்றைப் பதிப்பித்துக் கொடுத்தேன். பிறகு இந்த இரண்டு புத்தகங்களையும் மீள் பதிப்பாக லீனா மணிமேகலையின் "கனவுப்பட்டறை" வெளியிட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் மகேந்திரன் இயக்கி, நிதிப்பிரச்சினைகளால் பாதியில் நின்று போயிருந்த "சாசனம்" படத்தின் வேலைகளை மீளச் செய்வதற்கான கடிதம் வந்திருந்தது. "சாசனம்" இந்திய மத்திய அரசின் நிதியூட்டத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது. மேலதிக நிதியைக் கோரியிருந்த மகேந்திரனுக்குச் சாதகமான பதில் கிடைத்திருந்தது பெரிய உற்சாகத்தைத் தந்தது. தமிழகம் திரும்பியதும் சாசனத்தின் வேலைகளை விரைவாக முடித்து விடவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார். பிறகு "சாசனம்" வெளியாகியிருந்தது. ஆனாலும் அவர் எதிர்பார்த்தளவுக்கு அது வெகுஜனப்பரப்பில் அறிமுகமாகவில்லை.

தமிழில் மிகச் சிறந்த படங்களை உருவாக்கிப் பெயர் பெற்றிருந்த மகேந்திரனிடம் எந்தப் பெருமிதங்களுமில்லை.

அவருடைய படங்கள் நாற்பது ஆண்டுகளாக மிகச் சிறந்த படங்களின் வரிசையில் குறிப்பிடப்படுகின்றன. மிகச் சிறந்த இயக்குநராகவே எல்லோராலும் மதிக்கப்படுகிறார். தமிழில் முன்னணி நட்சத்திரங்களாக இருந்த எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், ஜெய்சங்கர், கமல்ஹாசன், ரஜினிகாந்த் எனப் பலருடன் இணைந்து வேலை செய்திருக்கிறார். ரஜினிக்கு நடிப்பில்நல்லதொருஅடையாளத்தை முள்ளும் மலரும், ஜானி ஆகிய படங்களில் வழியாகக் கொடுத்தவர். ஆனால் இன்னும் தன்னால் ஒரு சிறந்த சினிமாவை உருவாக்க முடியவில்லை. அதற்காக முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்என்றே சொல்வார். உண்மையும் அதுதான். அவர் தன்னுடைய விருப்பத்திற்கேற்ற படங்களை உருவாக்குவதற்கு முயற்சித்துக் கொண்டேயிருந்தார். அதற்கென ஏராளம் கதைகளைக் கையில் வைத்திருந்தார். எண்ணற்ற குறிப்புகளை மனதில் வரைந்து கொண்டிருந்தார். ஆனால் காலமும் தமிழ்க்கலாச்சாரக் களமும் அதற்கான இடத்தைச் சரியாக வழங்கவில்லை.

வன்னிக்கு வந்து சென்ற பிறகு வழங்கிய நேர்காணல் ஒன்றில் "யோசித்தபோது சந்தித்த மூன்றரை மணி நேரமும் ஒரு வார்த்தைகூட பிரபாகரன் அரசியல் பேசவில்லை என்பது ஞாபகத்திற்கு வந்தது. "அவருக்கு எரிக் சோல்ஹெய்மிடம் என்ன பேசவேண்டும். இந்த மகேந்திரனிடம் என்ன பேச வேண்டும் என்று தெரிந்திருக்கிறது" என்று குறிப்பிட்டிருந்தார்.

மகேந்திரனுடைய தடங்களையும் கனவுகளையும் ஈழச் சினிமா தொடருவதே அவருக்கான மதிப்பளித்தலாகும். தமிழ்ச்சினிமா மகேந்திரனைப் புகழ்ந்துரைப்பதை விடவும் அவர் விரும்பிய சினிமாவை தமிழ்ப்பண்பாட்டுச் சூழலில் உருவாக்குவதே சிறப்பு. அதுவே மகேந்தின் என்ற கலை ஆளுமைக்குச் செலுத்தும் மெய்யான அஞ்சலி.






ஜெய் சந்தோஷி மாதா
ஜோதிட நிலையம்




JAI SHANTOSHI MATHA
ASTROLOGY CENTER

PANDITH: REVI SHANKAR
(FACE READING SPECIALIST)

- MARRIAGE MATTERS
- CHILDREN PROBLEM
- EDUCATION MATTERS
- JOB ISSUES
- BUSINESS ISSUES
- COURT CASES
- LUCKY NUMBER
- LUKSHMI POOJA
- VASTHU POOJA
- LUCKY STONE
- திருமண பாக்கியம்
- குழந்தைகள் பிரச்சினை
- கல்வி விஷயங்கள்
- வேலை பிரச்சினைகள்
- வணிக சிக்கல்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- அதிர்ஷ்ட எண்கள்
- லக்ஷ்மி பூஜா
- வஸ்து பூஜா
- அதிர்ஷ்ட கல்

SPEAKS IN ENGLISH, TAMIL, HINDI, TELUGU, KANNADA & MALAYALAM

243 LONSDALE STREET, DANOENONG 3175
7 DAYS A WEEK CONSULTATION AVAILABLE
CALL: 0406 933 016

வெளிநாடுகளில் வேலை பார்க்கும் இந்திய இளைஞர்களைக் கவனியுங்கள். தமிழகத்தில் இருந்து பிற்படுத்தப்பட்ட – தாழ்த்தப்பட்ட – இளைஞர்கள்கூட வந்திருப்பார்கள். ஆனால், வட இந்தியாவில் இருந்து பார்ப்பனர்களைத் தவிர யாரும் வந்திருக்க மாட்டார்கள். ஏனெனில் வட இந்தியாவைப் பொறுத்தவரை பணமும் படிப்பும் பார்ப்பனர்களுக்குப் பத்தியப்பட்டது. அப்போ ஏழைகளுக்கு என்ன? அதான் இருக்கிறதே மதமும், சாதியும்தான்.

மோடியைத் தமிழ்நாட்டில் காலனியாதிக்கம் செய்யவந்த வேற்றுநாட்டு அதிபராகத்தான் பார்க்கிறார்களேயொழிய தங்கள் பிரதமராக இல்லை.



# மோடி மீண்டும் பிரதமர் ஆவாரா?

என் இனிய ஆஸ்திரேலியர்களே, அமெரிக்கர்களே, ஆங்கிலேயர்களே, கறுப்பினத்தவர்களே! உங்களுக்கெல்லாம் கிடைக்காத ஒரு பாக்கியம் எங்களுக்கு கிடைத்திருக்கிறது. உங்கள் பிரதமரோ, ஜனாதிபதியோ இப்போது என்ன செய்துகொண்டிருப்பார்கள்? மிஞ்சிப் போனால் ஏதாவது மீட்டிங்கில் இருப்பார்கள். உலகத் தலைவர்களைச் சந்தித்துக் கொண்டிருப்பார்கள். அல்லது பிரஸ்மீட் கொடுத்துக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் இந்தக் கட்டுரையை நான் எழுதிக் கொண்டிருக்கும்போது எங்கள் பிரதமர் என்ன செய்துகொண்டிருக்கிறார் தெரியுமா? டிஷர்ட் விற்றுக் கொண்டிருக்கிறார்!!

ஆம்! "மெய்ன் பீ சவுக்கிதார்" என்ற வாசகத்துடனான டிஷர்ட்டை டிவிட்டரில் விற்றுக்கொண்டிருக்கிறார். அதுவும் சும்மா விற்கவில்லை. "உங்கள் டிஷர்டை ஆர்டர் செய்ய முந்துங்கள்" - என்று கூவிக் கூவி விற்றுக் கொண்டிருக்கிறார்.

இப்படி வெளிப்படையாக - வெள்ளந்தியாக - கோமாளித்தனம் செய்யும் மனிதர் எப்படித் தேர்தலில் நிற்கிறார்? அதுவும் பிரதமர் பதவிக்குப் போட்டியிடுகிறாரே? இதெல்லாம் பொத்தாம் பொதுவாக இப்போது உலகநாடுகளிலும், உலக ஊடகங்களிலும் நிலவும் சந்தேகம். ஆனால் இந்தியாவில் எதுவும் சாத்தியம். எதுவும் என்றால் மோடி போன்ற ஒரு ஆள் மீண்டும் பிரதமராவதுகூட சாத்தியம்.

சமீபத்தில் எடுக்கப்பட்ட ஒரு சர்வேயில் வடநாடுகளில் இன்னமும் மோடிக்கு செல்வாக்கு இருக்கிறது. ஆனால் தென்னிந்தியாவில் அதளபாதாளத்தில் இருக்கிறது. குறிப்பாக தமிழ்நாட்டில் 2 வீத செல்வாக்கு உள்ளதாம். நாமெல்லாம் - சுலபமாக - இந்தியாவில் வசிக்கிறவர்களை எல்லாம் 'இந்தியன்' என ஒற்றை வார்த்தையில் சொல்லிவிடுகிறோம். ஆனால், மனிதன் என்ற சொல் எவ்வளவு பொதுவானச் சொல்லோ, அவ்வளவு பொதுவானச் சொல்தான் இந்தியன் என்பதும். ஏனெனில் அத்தனை விதமான இனங்களும், மொழிகளும், மதங்களும், வேறுபாடுகளும், அரசியல் பார்வையும் இங்கே இருக்கின்றன.

வடநாட்டு மக்கள் உண்மையில் பாவம். அங்கே பார்ப்பனர்கள், பனியாக்கள் போன்ற உயர்சாதிக்காரர்களைத் தவிர, படிப்பும் சரி, பணமும் சரி வேறு எந்தச் சமூகத்தையும் சென்றடையவே இல்லை. நன்றாகப் படித்து வெளிநாடுகளில் வேலை பார்க்கும் இந்திய இளைஞர்களைக் கவனியுங்கள். தமிழகத்தில் இருந்து பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட - இளைஞர்கள்கூட வந்திருப்பார்கள். ஆனால் வட இந்தியாவில் இருந்து பார்ப்பனர்களைத் தவிர யாரும் வந்திருக்க மாட்டார்கள். ஏனெனில் வட இந்தியாவைப் பொறுத்தவரை பணமும் படிப்பும் பார்ப்பனர்களுக்குப் பத்தியப்பட்டது.

அப்போ ஏழைகளுக்கு என்ன? அதான் இருக்கிறதே மதமும், சாதியும்!! இந்த இரண்டு 'மூளை மழுக்கி"களோடு கொஞ்சம் போலித் தேசியவாதத்தையும் கலந்துவிட்டால் போதும். பாஜகவுக்காக, மோடிக்காக நம் கழுத்தில் ஏறிக் கடிக்கும் ஒரு வெறிபிடித்த சங்கி கிடைத்துவிடுவார். மக்களை இப்படி சங்கிகள் ஆக்கித்தான் பாஜக வெற்றி பெற்றிருக்கிறது.

இந்திய அளவில் பார்த்தால், பாஜகவை ஆதரிப்பவர்கள் இரண்டே வகையினர்தான். மோடி நாட்டுக்குக் கேடு எனத் தெரிந்தும் தங்கள் சமூகம் மட்டும் நன்றாக இருந்தால்போதும் என சுயநலத்தினால் அவரை ஆதரிக்கும் பார்ப்பனர்கள். இன்னொரு வகையினர் நிஜமாகவே மோடியை நம்பும் ஏமாளிகள்.

ஆனால் கல்வியும், பணமும் ஒப்பீட்டளவில் பரவலாகப் படர்ந்திருக்கும் தென்னகத்தில் - குறிப்பாகத் தமிழகத்தில் - பாஜகவின் அரசியல் செயல்திட்டம் செல்லுபடியாகவில்லை. அதனால்தான் 2 சதவிகித ஆதரவில் முக்குகிறது. ஏன் இப்படி? தமிழ்நாட்டில் மட்டும் என்ன ஒவ்வாமை?

இனிப்புக் கடைக்குச் சென்று, ஜிலேபிக்கு தொட்டுக்கொள்ளச் சாம்பார் கேட்பீர்களா? மாட்டீர்கள்தானே!

அதே போலத்தான் தமிழ்நாடும் மோடியும். சாம்பாரை யாவது ஜிலேபியுடன் மட்டும்தான் தொட்டுக்கொள்ள முடியாது. ஆனால் மோடியை தமிழ்நாட்டில் எதனுடனும் தொட்டுக்கொள்ள முடியாது என்பதுதான் நிதர்சனம். ஏனெனில் இந்த ஐந்தாண்டுகளில் மோடியால் - மோடியின் ஆட்சியால் - பயனடைந்தவர்கள் யாரையாவது காட்டுங்கள் பார்ப்போம்? என்னால் இருவரைக் காட்ட முடியும். அதானியும் அம்பானியும்!

மற்றபடி டீமானடைசேஷன், ஜி.எஸ்.டி, பெட்ரோல், காஸ் விலையேற்றம் எனப் பலவற்றால் பாதிக்கப்பட்ட மக்கள் தெருவில்தான் நிற்கிறார்கள். நிலைமை இப்படி ஆகும் என்பதை முன்னரே கணித்து தானோ என்னவோ, கடந்த மக்களவைத் தேர்தலில் இந்தியா முழுவதும் மோடி அலை இருந்தபோதுகூட தமிழகத்தில் மோடி அலை இல்லை.

சரி. எல்லா மாநிலங்களிலும்தானே மக்களுக்கு இந்தப் பிரச்சினை எல்லாம் இருக்கிறது. ஆனால் ஏன் தமிழகம் மட்டும் இவ்வளவு வெறுப்பை உமிழ்கிறது என நீங்கள் நினைக்கலாம். காரணம் இருக்கிறது. "மதம் மனிதனுக்கு அபீன் போன்றது" - என்றார் கார்ல் மார்க்ஸ். ஏனெனில் மதம் மட்டும் தலைக்கேறிவிட்டால் தனக்கிருக்கும் உண்மையான பிரச்சினைகளை எல்லாம் உணராமல் மதவெறிபோதையில் ஊறிக் கிடப்பானாம் மனிதன். அப்படித்தான் இந்துத்துவா எனும் அபீனை வைத்து வட இந்தியாவில் பிழைப்பை ஓட்டுகிறது பாஜக. ஆனால் தமிழகத்திலே அந்த சித்து வேலை எடுபடவில்லை.

- நம் பொருளாதாரம் வீழ்ந்திருக்கிறது.
- நீட் என்கிற பெயரில் கிராமப்புற, பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட - ஏழைக் குழந்தைகளின் டாக்டர் கனவை கருவிலேயே கருக்கிவிட்டார்கள்.
- இந்திய ரூபாயின் மதிப்பு வரலாற்றில் இல்லாத அளவு சரிந்திருக்கிறது.
- காட்டுப்பகுதியில் குண்டுபோட்டுவிட்டு பாகிஸ்தானில் போட்டதாகவும் 200-300 பயங்கரவாதிகள் இறந்ததாகவும் கூசாமல் பொய்சொல்கிறார்கள். சாட்டிலைட் இமேஜைப் பார்த்த உலகநாடுகள் நம்மை கேலி செய்கின்றன. மோடி ஆட்சிக்கு வந்தபின் பயங்கரவாதம் 173 வீதம் அதிகரித்துள்ளது. ராணுவ வீரர்கள் சாவது 93வீதம் அதிகரித்துள்ளது.
- கல்புர்கி, பன்சாரே, தாபோல்கர், கௌரி லங்கேஷ், போன்ற பல எழுத்தாளர்கள் பாஜகவுக்கு எதிராக கருத்து சொன்னதால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் வட இந்திய மாநிலத்தவர்கள் வேண்டுமானால் மதபோதை கொண்டு மறக்கலாம். ஆனால் தமிழர்கள் மறக்கவில்லை. அருவெறுப்புடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் நிஜமான சவுக்கிதார் யார், அம்பானியின் சவுக்கிதார் யார் என்பது பார்த்த மாத்திரத்தில் மக்களுக்குத் தெரிந்துவிடும். மோடியை காமடி கலந்த வில்லனாக வேண்டுமானால் பார்ப்பார்களேயொழிய இன்னும் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் கதாநாயனாக நினைத்துக்கூடப் பார்க்காமாட்டார்கள்.

அதற்கெல்லாம் மேல், மோடியைத் தமிழ்நாட்டில் காலனியாதிக்கம் செய்யவந்த வேற்றுநாட்டு அதிபராகத்தான் பார்க்கிறார்களேயொழிய தங்கள் பிரதமராக இல்லை.

ஒன்றை உறுதியாகச் சொல்லமுடியும். நேரு காலத்தில் இருந்தே தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும் பிரச்சினைகள் இருந்திருக்கிறது. ஆனால் டெல்லி தமிழ்நாட்டுக்கு இவ்வளவு அந்நியப்பட்டுப் போனது மோடி ஆட்சியில்தான். அது ஒன்றுதான் மோடியின் சாதனை.

சரி. வர இருக்கும் தேர்தலில் மோடி ஜெயிப்பாரா? பிரதமர் ஆவாரா? எனக் கேட்டால் கண்டிப்பாக தமிழ்நாட்டு ஆதரவில் ஆக மாட்டார் என்பதை மட்டும் உறுதியாகச் சொல்ல முடியும். மற்றபடி வட இந்தியர்களுக்கு கொஞ்சமாவது மூளை இருக்கிறதா என்பது இந்தத் தேர்தலில் தெரிந்துவிடும்.

ஆனால் ஜனநாயகத்தின் மிகக் கொடுமையான கோர முகங்களில் ஒன்று பெரும்பான்மை வாக்காளர்கள் என்ன நிலைப்பாடு எடுத்தாலும் ஏனையோரும் அதற்காகப் பல்லைக் கடித்துக் கொண்டு ஐந்தாண்டுகள் செக்கிழுக்க வேண்டும் என்பதுதான். இந்தத் தேர்தலிலாவது தமிழகம் வட இந்தியப் பெரும்பான்மை வாக்காளர்களின் மூடத்தனத்தில் இருந்து தப்புகிறதா எனப் பார்ப்போம்.





**- மைலாப்பூரிலிருந்து,**
**முனியாண்டி ஐயங்கார்.**


உங்கள் அதிநவீன பாதுகாப்புத் தேவைகளுக்காக இன்றே தொடர்புகொள்ளுங்கள்!
NS Systems SECURITY
0447 533 555
www.nssystems.com.au
Data & Tele-communication From $99*
IP / HD CCTV Systems From $880*
Digital TV Antenna
Video Intercom From $440*
Security Alarm From $550*
Alarm Monitoring From 0.75c+
Smart Home
We are registered and licensed by Victoria Police.
* Standard Installation, 3 Year parts (Manufacturer Defects) & 3 Year Labor Warranty !!
+ 0.75c Per day, 6 Months Up Front Payment
Access Control From $1600*
Security Fog System
UTECH SOLUTIONS Corporate Group
Solar CCTV From $150*
Ducted Vacuum From $1250*
info@nssystems.com.au
PO BOX 633, Noble Park, VIC 3174
Private security Business License: 910-932-10S
Protect your Home & Family, Secure your Premises & Business.

# மதிலேறி நிற்போரின் அதிகார இழுபறி

# மயிலேறும் பெருமானின் அடியார்கள் அதோகதி




ஈழத் தமிழர்கள் தங்களது புலம்பெயர்வுக் காலத்தினை சரியாக கணக்கிட்டுப்பார்த்தால் அடுத்தடுத்த வருடங்களுடன் கிட்டத்தட்ட அரைநூற்றாண்டினை எட்டிவிடப்போகிறார்கள். எழுபதுகளில் வேறுவேறு காரணங்களுக்காக நாட்டைவிட்டு வெளியேறிய ஈழத்தமிழர்களுக்கு எண்பதுகளில் வெளியேறுவதற்கான காரணம் பிறிதொன்றாகவும், தொண்ணூறுகளில் அதற்கான காரணம் முற்றிலும் வேறுபட்டதாகவும் இரண்டாயிரத்துக்குப் பிறகான புலம்பெயர்வுக்கான காரணம் மிகக்கொடூரமானதாக ஆரம்பித்து அது கிட்டத்தட்ட இருபது வருடங்களாக இன்னும் தொடர்கிறது.

இந்த ஐம்பதாண்டு காலத்தில், புலம்பெயர்ந்த நாடுகளில் எம்மவர்கள் அடைந்திருக்கும் புலம்பெயர்சூழல் சார்ந்த முதிர்ச்சி எப்படியானது? பல்கலாசார - பண்பாட்டு காரணிகள் மிகுந்த வெளிநாடுகளில் அடைந்திருக்கும் ஆளுமைச்செறிவு எவ்வளவு பெறுமதியானது என்பதை சற்று விரிவான பார்வைக்கு உட்படுத்தினால், பல துயரம் நிறைந்த பெறுபேறுகளை நாம் வாழுகின்ற தெருவின் ஒவ்வொரு மூலையில் காணலாம்.

இதுபோன்றதொரு துயர்நிறைந்த-சிக்கலுள்ள - சமூகம் சார்ந்த - சமயத்துக்குள் வேரோடிப்போயிருக்கின்ற - விடயத்தினைத்தான் "எதிரொலி" இங்கு மக்களின் முன் எடுத்துவர இருக்கிறது.

எதிரொலியினால் இந்த விடயம் எடுத்துவரப்படுவதன் நோக்கம், யாரையும் கிள்ளிவிட்டு கூத்துப்பார்ப்பதோ அல்லது பிளவுகளின் காயங்களில் சுகம் காணுவதோ அல்ல. மாறாக, இது ஒரு பொதுப்பிரச்சினையின் மீது மக்கள் கொண்டிருக்கின்ற நியாயமான கேள்விகளின் தொகுப்பு மாத்திரமே ஆகும். இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால், மக்கள் உணர்வுபூர்வமாக மாத்திரம் கேள்விக்குட்படுத்தும் இந்தப் பிரச்சினையை "எதிரொலி" சற்று ஆழமாகச் சென்று ஊடகப்பொறுப்புடன் ஆராய்ந்திருக்கிறது. இது எதிரொலியின் ஊடாக ஏன் பேசப்படவேண்டும் என்ற தர்க்கங்களையும் ஆதாரத்துடன் இங்கு முன்வைக்கிறது.


ஆஸ்திரேலியாவை நோக்கிய ஈழத்தமிழர்களின் புலம்பெயர்வு ஆரம்பித்த எழுபதுகளில் இங்கு சமயத்தலங்களுக்கான தேவை என்பது குறைவாக காணப்பட்டிருந்தாலும் பிற்காலத்தில் அது ஆரோகணித்துச்சென்றிருந்தது என்பது அனைவரும் அறிந்த உண்மை. கிறிஸ்தவ நாடான ஆஸ்திரேலியாவில் தேவாலயங்களுக்கான தேவை கிட்டத்தட்ட இல்லையென்றாலும் சைவத்திருத்தலங்களுக்கான தேவை என்பது எண்பதுகளின் கடைக்கூறுகளில் தலைதூக்கத்தொடங்கியிருந்தது. புலம்பெயர்வு என்பது மனிதர்களின் இடமாற்றம் மாத்திரமல்ல. அதுவொரு பண்பாட்டு இடமாற்றம். கலாசார இடமாற்றம். சமூகக்காரணிகளின் ஒட்டுமொத்த இடமாற்றம் என்பதை எல்லா நாடுகளைப்போல ஆஸ்திரேலியாவும் வலியுறுத்தத்தொடங்கியிருந்தது.

**முருகப்பெருமானின் புலம்பெயர்வு**

அந்த வகையில், சிட்னியில் 1995 இல் இருநூறு பேரைக்கொள்ளக்கூடிய சிறிய கலாசார மண்டம் ஒன்று ஈழத்தமிழர்களினால் உருவாக்கப்பட்டது. இந்தக்கலாசார மண்டபத்தின் ஆரம்பம் எனப்படுவது 1986 இலேயே ஆரம்பமாகி வீட்டில் நடத்தப்பட்டு, பின்னர் ஸ்ரத்பீல்ட் பெண்கள் உயர்தர பாடசாலையில் இயங்கி, அதற்குப் பின்னர்தான் தனி மண்டபமாக வளர்ச்சி பெற்றது. இது ஆங்காங்கே சிதறிக்கிடந்த மக்களுக்கான ஒன்றுகூடல் அரங்காக காணப்பட்டது. மாத்திரமல்லாமல், அங்குதான் சிட்னியில் முதன் முதலாக சிறுதெய்வ வழிபாடு ஒன்றும் ஆரம்பமானது. சிறிய முருகன் ஆலயத்துக்குரிய ஏற்பாடுகளுடன் அங்கு பூசைகள் நடைபெற்றன. முக்கிய நாட்களில் அங்கு கூடுகின்ற மக்கள் தங்களுக்குள் நெருக்கத்தை உணர்வதற்கான பொதுத்தளமாக இதனை பயன்படுத்திக்கொண்டார்கள். டொலர் விலங்குகளாக தங்களை மேய்த்துக்கொண்டிருந்த நெருக்கடியான வாழ்விலிருந்து வெளியேறி கொஞ்சமாவது தங்களின் இயல்பையும் - இருப்பையும் அடையாளத்தையும் - தூசிதட்டிப்பார்த்து சுதந்திரத்தை சுவாசித்துச்செல்வதற்கு இந்த சிட்னி கலாசார மண்டபம் அவர்களுக்கு பெருந்துணையாக அமைந்தது.

இதன்தேவை மேலும் மேலும் அதிகரித்துச்செல்லும்போது அங்கு கூடுகின்ற மக்கள் தொகையும் கூடியது. விளைவாக, மூன்றுவருடங்களின் பின்னர், அந்தக் கலாசார மண்டபத்திலிருந்து வியாபித்தெழுந்து 11000 சதுர மீற்றர் பரப்பளவில் சிட்னி முருகன் கோவில் உருவானது.

சிட்னி நகரிலிருந்து 25 கிலோமீற்றர் தொலைவில் - தமிழர்கள் செறிந்து வாழுகின்ற பல நகரங்களுக்கு இடையில் - "மேய்ஸ் ஹில்ஸ்" என்ற இடத்தில் - சிட்னி முருகன் கோவில் சடைத்து எழுந்தது.



முதல் திட்ட வரைபு

இது சைவத்தை பின்பற்றுகின்ற பல பக்தர்களுக்கான மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்தது மாத்திரமல்லாமல், சிட்னியின் வேற்றின மக்களுக்கு காண்பிக்கக்கூடிய தமிழர்களின் அடையாளமாகவும் விளங்கியது. வேறு மாநிலங்களிலிருந்து சிட்னிக்குப் போகின்றவர்களும் கூட, சிட்னியில் சுற்றுலா சென்று பார்க்கின்ற ஒப்ரா ஹவுஸ், டார்லிங் ஹாபர், நீலகிரி மலைத்தொடர் ஆகியவற்றுடன் சிட்னி முருகன் கோவிலுக்கும் மறக்காமல் விஜயம் செய்யத்தொடங்கினர்.

சிட்னி முருகன் கோவிலானது தனியே சைவத்தின் அடையாளமாக Greater Western Sydney பகுதியில் வீற்றிருக்காமல், பண்பாட்டு- கலாசார அடையாளமாக மிளிரத்தொடங்கியது.

பிற்பட்ட காலங்களில், சிட்னியின் ரீஜன் பார்க் பகுதியில் துர்க்கை அம்மன் கோவில், ஹோம்புஷ் பகுதியில் பிள்ளையார் கோவில், துங்காபியில் சக்தி கோவில், ஐம்பது கிலோமீற்றர் தொலைவில் ஹெலென்ஸ்பேர்க் பகுதியில் சிவா விஷ்ணு கோவில் என்று எத்தனையோ கோவில்கள் தோன்றினாலும் சிட்னி முருகன் கோவில் பல்வேறு காரணங்களினால் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக திகழ்ந்தது. பக்திக்கு அப்பால் மக்களின் பேரபிமானம் பெற்ற திருத்தலமாக வளர்ச்சி பெற்றது.

கோவிலுக்கு வருகின்ற பக்தர்களின் இஷ்ட தெய்வமாக சிட்னி முருகன் மாறத்தொடங்கிய மாத்திரத்தில், அதற்காக அள்ளிக்கொடுக்கத்தொடங்கிய பணமும் அதிகரித்தது. அர்ச்சனைகளினால் பெருமளவு பணம் கொட்டத்தொடங்கியது என்றால் மறுபுறத்தில், அங்கு வரும் பக்தர்களுக்கான உணவைத்தயாரித்து கொடுக்கும் சிற்றுண்டிச்சாலை இன்னொரு பக்கத்தினால் பணத்தை பெருந்தொகையில் இறைக்கத்தொடங்கியது.

முருகப்பெருமான் பக்தர்களுக்கு அருளைக்கொடுத்து, பக்தர்களோ முருகனுக்கு பொருளைக்கொடுத்துவிட்டுப்போனார்கள். கிள்ளிக்கொடுத்த தொகையெல்லாம் சேர்ந்து பெருளவில் குவியத்தொடங்க, அதனை நேர்த்தியாக செலவு செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் கோயில் நிர்வாகம் கவனமாக செயற்படத்தொடங்கியது.

1998 ஆம் ஆண்டு 11000 சதுர மீற்றர் பரப்பளவில் கட்டப்பட்ட கோவில் கொஞ்சம் கொஞ்சமாக கிளைபரப்பத்தொடங்கியது. அருகிலுள்ள வீடுகளையும் வாங்கிக்கொண்டது. கோவில் விரிந்து பரந்து சென்று இன்று -

சிட்னி முருகன் கோவில் அண்ணளவாக 1.6 ஹெக்ரேயர் பரப்பளவில் வருடமொன்று கிட்டத்தட்ட மூன்று மில்லியன் டொலர்கள் வரையான பணம் குவிகின்ற சமயத்தலமாக வளர்ந்திருக்கிறது.

கோவிலுக்கு சொந்தமாக கிட்டத்தட்ட பத்து வீடுகள் வாங்கிவிடப்பட்டிருக்கின்றன. ஆறு ஐயர்கள், கடவுளுக்கே காவல் காப்பதற்கு வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் காவலாளிகள். இவை தவிர, கோயிலுக்கான தண்ணீர் - மின்சாரம் போன்ற இதர தேவைகளுக்கான செலவுகள் போக தேறிய வருமானமாக இன்று கிடைத்துக்கொண்டிருப்பது வருடமொன்று ஒரு மில்லியன் டொலர்களுக்கு மேலாகும். இதைவிட, இன்றைய பெறுமதியில் கோவிலின் சொத்துக்கள் எனப்படுகின்றவற்றை விற்றாலே கிட்டத்தட்ட ஐம்பது மில்லியன் தேறும்.

இன்றைய திகதியில் சிட்னியின் மிகப்பெரிய பணக்காரர்களின் வரிசையில் வீற்றிருப்பவராக முருகப்பெருமானை உருவாக்கியது மாத்திரமல்லாமல் அருள் கொடுக்கும் பழனிமலையானை பணம் கொலிக்கும் பங்குதாரராக மாற்றிய பெருமையும் எங்கள் சைவப்பெருமக்களை சேரும்.

கோவிலில் எல்லாவகையான திருவிழாக்களும் பெருவிழாக்களாக நடைபெறுகின்றன. முக்கியமான திருவிழாக்காலங்களில் படையெடுக்கும் பக்தர்களின் எண்ணிக்கை ஐயாயிரத்தை தாண்டுகிறது.

கோவில் அமைந்திருக்கும் பிரதேசம் முழுவதும் கரைவேட்டிகளாலும் வண்ண வண்ண சேலைகளினாலும் அலைமோதுகிறது. பிரதான வீதியில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெருக்கடியை சமாளிக்க பொலீஸாருக்கு நாக்கு தள்ளிவிடுகிறது.

ஆனாலும் இப்படிப்பட்ட பெரிய பொரி போட்ட கதையாகி -

மேலதிகமாக வந்து குவிகின்ற வாகனங்களை பக்தர்கள் நெடுந்தூரம் வரை கொண்டுபோய் நிறுத்தவேண்டியிருக்கிறது. அங்கிருந்து குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என்று அனைவரும் கோவிலுக்கு நடந்துவரவேண்டியிருக்கிறது.

பக்தர்களுக்கு இது மிகப்பெரிய அசௌகரியம் என்பதற்கு அப்பால், நடந்து வருகின்ற இந்த பக்தர்களினால் பெரு வீதியில் பொதுப்போக்குவரத்தும் நெருக்கடிகள் ஏற்படுகின்றன. வீதியை கடந்துசெல்லும் இந்த பக்தர்களிடமிருந்து வாகனங்களை நெருக்கடியில்லாமல் அந்த பகுதியால் படவேண்டும் என்ற விடயம் கோவில் நிர்வாகத்தினால் உணரப்படுகின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற ஆகம விதிகளுடன் பார்க்கிங் என்ற விடயத்தையும் ஆகமத்தில் சேர்த்துவிடலாமோ என்று யோசிக்கத்தொடங்குகிறார்கள்.

சிட்னி முருகன் கோவில் நிர்வாகம் என்பது பாரம்பரியம் வாய்ந்தது. சமூகத்தின் மிக முக்கியமான தலைவர்கள், ஆளுமை மிக்கவர்கள், புத்திஜீவிகள் என்று பலர் அங்கம் வகிப்பது. இந்த நிர்வாகத்தின் மத்தியகுழுவில் 11 பேர் அங்கம் விகிக்கிறாகள். இவர்களது பதிவிக்காலம் இரண்டு வருடங்கள் என்றும் நிர்வாகத்தின் தலைவரின் பதவிக்காலம் ஒரு வருடம் என்கின்ற ரீதியிலும் இயங்கிவருகிறது.

ஆக, கோவிலுக்கான வாகனத்தரிப்பிடமொன்று அமைக்கப்படவேண்டும் என்று 2011 ஆம் ஆண்டு கோவிலின் நிர்வாகம் உணர்ந்துகொண்டு அதனை கோவிலின் மூலம் கிடைக்கும் வருமானத்திலேயே முற்றுமுழுதாக அமைப்பது என்று முடிவெடுத்தபோது -



பதில் திட்ட வரைபு

தொரு ஆலயத்திற்கு இன்றுவரை 113 வாகனங்களைக்கொண்ட ஒரு வாகனத்தரிப்பிடம் மாத்திரமே உத்தியோகபூர்வமாக காணப்படுகிறது என்பதுதான் மிகப்பெரிய சோகம். ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வந்துபோகின்ற சிட்னி முருகன் கோவிலுக்கு வெறும் 113 வாகனங்களை விடக்கூடிய வாகனத்தரிப்பிடமே உள்ளது என்பதால், திருவிழாக்காலங்களிலும் சிறப்பு வழிபாடு நடைபெறும் காலப்பகுதியிலும் படையெடுக்கும் பக்தர்கள், கோவில் வாகனத்தரிப்பிடம் நிரம்பிவழியத்தொடங்கியதும் அருகிலுள்ள வீதிகளில் கொண்டுபோய் வாகனங்களை நிறுத்துவதுகிறார்கள். இது எல்லா பொதுஇடங்களிலும் நடைபெறுகின்ற வழக்கமான விடயம்தான்.

இருந்தாலும், சிட்னி முருகன் கோவிலுக்கு வருகின்ற பக்தர்களின் எண்ணிக்கை வரவர அதிகரித்துக்கொண்டே செல்வதால் இப்போதெல்லாம் கோவில் வாகனத்தரிப்பிடம் என்பது யானைப்பசிக்கு சோளப் அனுப்புவதென்பதும் அந்தச் செயற்பாட்டினை பாதுகாப்பான முறையில் நடைமுறைப்படுத்துவதும் தொடர் சிக்கலாகியிருக்கிறது.

இந்தப்பிரச்சினைகள் ஒருபடி மேலே சென்று, தனியார் தெருக்களில் பக்தர்கள் கொண்டுபோய் வாகனங்களை நிறுத்திவிட்டு வருவது அப்பகுதி மக்களுக்கு கடும் சினத்தை ஏற்படுத்தவும் தொடங்கிவிட்டது. தங்களது பிரதேசத்தில் கோவிலின் பெயரால் ஏற்படுத்தப்படுகின்ற நெருக்கடியால் அவர்கள் எரிச்சலடையத்தொடங்கியிருக்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில், இவ்வாறு தங்களது வீதிகளில் கொண்டு வந்து நிறுத்திச்சென்ற பக்தர்களின் வாகனங்களின் டயர்களில் காற்றைத்திறந்து விட்டிருக்கிறார்கள் என்ற முறைப்பாடுகள்கூட தாராளமாக காணப்படுகின்றன.

**பக்திக்கு முருகன்! பார்க்கிங்கிற்கு?**

இங்குதான் கோவிலுக்கான வாகனத்தரிப்பிடமொன்று பெரிதாக அமைக்கப் வாகனத்தரிப்பிடம் என்று தனியே அமைக்காமல் ஒரு கலாசார மண்டபம் மற்றும் நிகழ்ச்சி மண்டபத்தையும் ஒரேயடியாக அமைத்துக்கொண்டால், அதிலிருந்து வருமானத்தை ஈட்டிக்கொள்ளலாம் என்று ஆலோசனையும் முன்வைக்கப்பட்டது. அதற்கு பலத்த ஆதரவு சகல மட்டங்களிலும் கொடுக்கப்பட்டது.

2014-2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இந்தத் திட்டத்துக்காக கோவில் நிர்வாகம் எட்டுப்பேர் கொண்ட உப குழு ஒன்றை அமைத்தது. துறைசார் வல்லுனர்களைக்கொண்ட இந்தக் குழு மொத்த திட்டத்துக்கான வரைவையும் முன்வைத்தது.

அதாவது, பெலிண்டா பிளேஸிலுள்ள கோவிலுக்கு சொந்தமான மூன்று வீடுகளை இடித்து அங்கு தரைக்கு கீழ் மூன்று மாடிகளில் 197 வாகனங்களுக்கரிய வாகனத்தரிப்பிடத்தை அமைப்பது என்றும் நான்காவது தளத்தில் - தரை மட்டத்தில் - சாப்பாட்டு மண்டபம் மற்றும்

(22ஆம் பக்கம் பார்க்க)

# மதிலேறி நிற்போரின் அதிகார இழுபறி மயிலேறும் பெருமானின் அடியார்கள் அதோகதி




(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டு அறைகளை கட்டுவது என்றும் ஐந்தாவது தளத்தில் - தரைக்கு மேல் இரண்டாவது தளத்தில் - 800 பேரைக் கொள்ளக்கூடிய கலாசார மண்டபத்தை கட்டுவது என்று திட்ட முன்வரைவு தயாரிக்கப்பட்டது.

2014 - 2015 காலப்பகுதியில் கோவில் நிர்வாகத்தின் மொத்த உறுப்பினர்கள் எழுநூறுக்கும் மேற்பட்டவர்களாக அங்கத்தவர்களாக இருந்தார்கள். ஆக, மேற்படி திட்டத்தினை கவுன்ஸிலிடம் சமர்ப்பித்து - கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்கான அங்கீகாரத்தை பெறுவதற்கு - 250 ஆயிரம் டொலர்களை கோவில் நிதியிலிருந்து பயன்படுத்துவதற்கு கோயில் நிர்வாகத்திடம் அனுமதியைப்பெறுவதற்கான வாக்கெடுப்பு இந்த உறுப்பினர்கள் மத்தியில் இடம்பெற்றது. 382 பேர் வாக்கெடுப்பில் கலந்துகொண்டார்கள். அவர்களில் 325 பேர் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தார்கள். 55 பேர் மாத்திரம் எதிராக வாக்களித்தார்கள். இருவரது வாக்குள் செல்லுபடியாகவில்லை.

பெரும்பான்மையினரின் ஆதரவுப்படி, திட்டத்தினை மேற்கொண்டு முன்நகர்த்துவது என்றும், திட்டமிட்டபடி எல்லாமே சரியாக நடைபெறுமானால், கட்டட நிர்மாணத்துக்கான நிதியை மேலும் இரு தொகுதிகளாக கோவிலிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு மீண்டும் இருதடவைகள் அங்கத்தவர்கள் மத்தியில் வாக்கெடுப்பிற்கு முன்வைப்பது என்றும் அப்போது தீர்மானிக்கப்பட்டது. இந்தச் செயற்பாடானது நிதிப்பரிவர்த்தனங்களில் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்காக மாத்திரமன்றி, எல்லா வகையிலும் பாதுகாப்பானதொரு பொறிமுறைக்கு உகந்த ஜனநாயக செயற்பாடு என்றும் எல்லோராலும் வரவேற்கப்பட்டது.

இந்தச் செயற்பாடுகளின் வழியாக, கவுன்ஸிலிடம் முன்வைக்கப்பட்ட திட்டவரைவுக்கு 2017 ஆம் ஆண்டு கவுன்ஸில் அங்கீகாரம் வழங்கியது. அதாவது, 16.7 மில்லியன் டொலர்கள் செலவில் இந்த ஐந்து மாடிக்கட்டடத்தை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இங்குதான் பிரச்சினை தொடங்கியது.

வழக்கம்போல பிரச்சினை ஆரம்பம்

கோவில் நிர்வாகத்திலிருந்து ஒரு பகுதியினருக்கு இந்தத் திட்டம் குறித்து மூக்கு நீண்டுபோனது. இவ்வளவு பெரியதொரு நிதியை கோவிலிடமிருந்து எடுத்து செலவு செய்யவேண்டுமா என்ற புறுபுறுப்புக்கள் அவர்களிடமிருந்து மிகப்பலமாகவே கேட்கத்தொடங்கியது. உடனேயே, இந்த திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர் பிரச்சாரமொன்று கோவில் வளாகத்தில் ஆரம்பித்து சிட்னி முழுவதும் பரவத்தொடங்கியது.

அதாவது, கோவில் நிர்வாகம் 30 மில்லியன் செலவில் பெரியதொரு திட்டத்தில் கொண்டுபோய் கோவில் நிதியை வீணடிக்கப்போகிறது என்றும் ஆறு மில்லியன் டொலரில் இந்த திட்டத்தை மிகக்கச்சிதமாக செய்து முடிக்கலாம் என்றும் கதைகள் பரவத்தொடங்கியது. "போயும் போயும் இவ்வளவு பணத்தை வாகனத்தரிப்பிடத்துக்கும் ஒரு கலாசார மண்டபத்துக்கு கொட்டுவதா" - என்ற அந்தப் பிரச்சாரம் மிகப்பெரியளவில் மக்களிடமும் எடுபட்டது. (இங்கு குறிப்பிடப்பட்ட இரண்டு தொகைகளும் பிரசாரத்துக்காக அவிழ்த்துவிடப்பட்ட பெரிய பொய்கள் என்று தெரியாமலேயே கேட்டவர்கள் அனைவரும் வாயைப்பிளந்தவாறு கண்களைப் பிதுக்கிக்கொண்டார்கள்)

அதுமாத்திரமல்லாமல், கவுன்ஸிலினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட திட்டத்துக்கு எதிராக - அதனிலும் பார்க்க குறைந்த செலவில் - தங்களால் ஒரு வரைவினை முன்வைக்கமுடியும் என்றும் நிர்வாகக் கூட்டத்தில் போர்க்கொடி தூக்கிய அதிருப்தியாளர்கள் கூட்டம், கவுன்ஸில் ஏற்கனவே அங்கீகாரம் வழங்கிய வரைவினை பெரும்பான்மை ஆதரவுடன் தோற்கடித்தது. இது 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மங்களகரமாக நடைபெற்று முடிந்தது.

அதன்பிறகு, தாங்கள் புதிய வரைவினை முன்வைக்கப்போவதாக அறிவித்த அதிருப்தியாளர்கள் குழு தமது வரைவின் பிரகாரம், நிலத்துக்கு மேல், ஐந்து தளங்களில் தனியே வாகனத்தரிப்பிடத்தை மாத்திரம் கட்டுவது தொடர்பான திட்டவரைவு யோசனையை முன்வைத்தது. அதற்குரிய செலவு கிட்டத்தட்ட 9 மில்லியன் டொலர்கள் என்றும் வாகனத்தரிப்பிடத்தின் வெளியக பூச்சுவேலைகளுக்கு 2 முதல் 3 மில்லியன் டொலர் செலவு மற்றும் சில செலவுகளுடன் சேர்ந்து மொத்தமாக 13 மில்லியன் டொலர்களுக்குள் வேலையை முடிக்கலாம் என்றும் கூறியுள்ளது. இந்த வாகனத்தரிப்பிடத்தில் 277 வாகனங்களை நிறுத்தலாம் என்று அந்தக்குழு குறிப்பிட்டுள்ளது.

ஆனால், தரைமட்டத்துக்கு மேல் முழுவதுமாக வாகனத்தரிப்பிடத்துக்காக ஐந்து மாடிகளைக்கொண்ட கட்டடத்தை அமைப்பதற்கு கவுன்ஸில் அங்கீகாரம் பெறுவது மிகமிகக்கடினம் என்ற கருத்து பொதுவாக தெரிவிக்கப்படுகிறது. ஏனெனில், சுற்றுச்சூழலுக்கு அந்த கட்டடம் அழகாக இருக்காது என்பது மட்டுமல்லாமல் வாகனச்சத்தம் போன்றவை பொதுமக்கள் வாழ்விடங்களின் மத்தியில் பிரச்சினைக்குரியவை என்பது கவுன்ஸிலின் சட்ட நிலைப்பாடு. இது இவ்வாறிருக்க, கோவிலின் கோபுர உயரத்துக்கு மேல் கோவிலின் இன்னொரு கட்டடம் எழுச்சி கொள்வது ஆகம விதிகளுக்கே பிழை என்று சமயத்தரப்பினர் சிலரும் புறுபுறுக்கிறார்கள்.

ஆக, இதுவிடயம் தொடர்பான புதிய வரைவில் இயங்கிவருகின்ற அதிருப்தியாளர்களை தொடர்புகொண்டு கேட்டபோது -

நிலமட்டத்துக்கு மேல் நான்கு மாடிகள் கொண்ட வாகனத்தரிப்பிடத்தை அமைப்பது தொடர்பான பூர்வாங்க திட்ட வரைவினை கோவில் நிர்வாக சபையில் சமர்ப்பித்து அதற்கு அங்கத்தவர்களின் அங்கீகாரத்தை பெறுவது தொடர்பான காரியங்கள் மிக மும்முரமாக நடைபெற்றுவருவதாகவும் -

எதிர்வரும் ஜூன் அல்லது ஜூலை மாதமளவில் இந்த பூர்வாங்க வரைவு கோவில் நிர்வாக சபையின் முன்பாக வைக்கப்படும் என்றும் எல்லாம் சரியாக நடைபெற்றால் அடுத்தவருட மத்தியில் வாகனத்தரிப்பிடமே தயாராகிவிடும் என்றும் அடித்துக்கூறின.

இதற்கு முதல் முன்வைக்கப்பட்ட வரைவு நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்தை அவர்களிடம் கேட்டபோது -

அந்த வரைவின் பிரகாரம் வாகனத்தரிப்பிடம் ஒன்றுக்கு ஐம்பதினாயிரம் டொலர்களுக்கு மேல் செலவாகுவதாக கூறப்பட்டது. ஆனால், அது நினைத்துப் பார்க்கமுடியாதளவு செலவீனம்.

அத்துடன், வாகனத்தரிப்பிடத்தை நிலத்துக்கு கீழ் அமைக்கும்போது கோவிலுக்கு வந்துவிட்டுப்போகின்ற பெண்கள் மற்றும் முதியோரின் பாதுகாப்பு என்பதையும் யோசிக்கவேண்டியிருக்கிறது. கூடுதல் பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றவேண்டியிருக்கிறது.

எல்லாவற்றும் மேலாக நிலக்கீழ் வாகனத்தரிப்பிடம் என்று வருகின்றபோது காற்றோட்டத்தை உறுதி செய்வது உட்பட பல சூழலியல் பொறிமுறைகளையும் உறுதி செய்யவேண்டும். இவை எல்லாம் கூடுதல் செலவுகளை ஏற்படுத்துவது.

இப்படிப்பட்ட குழப்பங்களை தவிர்ப்பதற்காகவே, நிலத்திற்கு மேல் வாகனத்தரிப்பிடத்தை கட்டுவதற்கு நிர்வாக சபை உறுப்பினர்கள் விரும்புகிறார்கள். நாங்கள் முன்மொழிவது போன்ற வாகனத்தரிப்பிடம் ஏற்கனவே சிட்னியில் பல இடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன - என்று அந்த வட்டாரங்கள் கூறின.

அவர்களது விருப்பம் அதுவாக இருந்தாலும் அதற்கான நடைமுறை சாத்தியங்கள், கவுன்ஸில் சட்டங்கள் போன்றவை எல்லாம் எவ்வளவு சாதகமானவை என்பது குறித்து அவர்கள் எதுவும் கூறவில்லை. "எம்பெருமான் பார்த்துக்கொள்வார்" - என்று கவுன்ஸிலையும் பக்தியோடு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் போலுள்ளது.

இந்த இழுபறிக்கு முடிவுதான் என்ன?

**எதிரொலியின் பார்வை**

பண்பாட்டு விழுமியங்களாகவும் கலாசார அடையாளங்களாகவும் புலம்பெயர்ந்த சமூகத்தில் தோற்றுவிக்கப்படுகின்ற சமய விதானங்கள் மிகுந்த உணர்வுபூர்வமானவை. அவற்றை கவனமாக கையாளவேண்டும் என்பது சிறுகுழந்தைக்கும் தெரிந்த விடயம்.

எமது சமய நிகழ்வுகள் ஏனைய சமூகங்களின் நிகழ்வுகள் போன்றவை அல்ல. சைவ சமயத்தில் நடைபெறுகின்ற பெரும்பாலான கோவில் நிகழ்வுகள் ஏனைய சமூகங்களின் பார்வையில் மிகுந்த ஆர்ப்பாட்டங்களும் ஆக்ரோஷங்களும் நிறைந்தவையாகும். சூரன்போர் என்றும் தேர்த்திருவிழா என்றும் மேற்கொள்ளப்படுகின்ற இந்த நிகழ்வுகள் எமக்காக ஒதுக்கப்பட்ட வெளிகளையும் தாண்டி சிலவேளைகளில் அனுமதி பெற்று பொதுஇடங்களிலும் அகலக்கால் பதித்து வருபவை. இதில் தவறொன்றில்லை. இந்த நாடு சகலருக்குமானது. இங்கு சட்டபூர்வமான மத வைபவங்கள் எனப்படுபவை அனுமதிக்கப்படவேண்டியவை. அதற்கு இந்நாட்டு சட்டதிட்டங்கள் பரிபூரண அங்கீகாரத்தை வழங்கி வருகின்றன.

ஆனால், இவ்வாறு மனமுவந்தளிக்கப்படும் சுதந்திரமான வெளிகள் ஏனைய சமூகத்தவர்களை இணைத்துக்கொண்டதாக அமையவேண்டும். அவர்களுக்கு எமது கலாசாரங்களில் மதிப்பும் விருப்பும் ஏற்படுத்துபவையாக அமையவேண்டும். முழுமையாக இல்லாவிட்டாலும் பகுதியாகவேனும் அதற்கான வாய்ப்புக்கள் அமையவேண்டும். மாறாக ஏனைய சமூகங்களின் சகிப்புத்தன்மையை சோதனை செய்வதாகவும் சீண்டுவதாகவும் அமைந்துவிடக்கூடாது.

தற்போது சிட்னி முருகன் கோவில் சுற்றாடல் என்பது பெரிய திருவிழாக்கள் நடைபெறுகின்ற காலப் பகுதியில் ஏனைய சமூகத்தவர்களுக்கு பல்வேறு வகையிலும் வித்தியாசமான அனுபவத்தை கொடுப்பதாகவே அமைந்து வருகிறது என்பதை யாரும் மறுத்துவிடமுடியாது. அது எப்படியான அனுபவம் என்பதை, அயலில் நிறுத்தப்படுகின்ற வாகனங்களின் டயர்களில் காற்றை திறந்துவிடும் சம்பவங்களின் ஊடாகவும் வேறு சம்பவங்களின் மூலமும் நன்றாகவே உணரக்கூடியதாக உள்ளது. இப்படியான சேட்டைகள் தவறானவைதான். தண்டிக்கப்படவேண்டியவை.

ஆனால், சமூகங்களுக்கு இடையிலான முரண்பாடு - முறுகல் எனப்படுபவை ஒருபோதும் சட்டத்துக்கு உட்பட்டு வருவதில்லை. எப்போதுமே அதை மீறி வெடிப்பவை. இனங்களின் மீதான கசப்பும் காழ்ப்பும் எவ்வளவு குரூரமானது. எவ்வளவு பாரதூரமானது என்பதையெல்லாம் அண்மையில் எமக்கு அருகிலேயே நன்றாகவே கண்டுணர்ந்திருக்கிறோம். இவையெல்லாம், சிறிய சிறிய விடயங்களின் ஒட்டுமொத்த திரட்சிதான்.

எமக்கான சுதந்திரத்தை எமக்கான வளங்களின் துணைகொண்டு பயன்படுத்துகின்றபோது எமது கலாச்சாரத்தின் பக்கவிளைவுகளாக ஏற்படுகின்ற அசௌகரியங்களை குறைத்துக்கொள்ளலாம்.

ஆக, சிட்னி முருகன் கோவிலின் வாகனத்தரிப்பிட அமைப்பு, அதனுடன் சேர்ந்து கலாசார மண்டபம் அமைப்பது போன்ற விவகாரம் 2011 ஆம் ஆண்டு சிறு சிந்தனையாக உருவாகி, 2014 இல் அதற்கு வரைவு சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் அது தோற்கடிக்கப்பட்டு, 2018 இல் புதிய யோசனை முன்வைக்கப்பட்டு இப்போது இன்னும் இழுபறிப்பட்ட நிலையிலேயே காணப்படுகிறது.

இந்த விவகாரம் தொடர்பாக "எதிரொலி" பல்வேறு தொடர்புகளையும் மேற்கொண்டு அறிந்துகொண்டதன் அடிப்படையில் பார்க்கும்போது, இது குறித்த இழுபறிநிலை தொடருவதற்கான வாய்ப்புக்களே அதிகம் காணப்படுகிறது. அதிகாரம் மிக்க தரப்பினராக தங்களை காண்பிக்கும்வகையில் கோயிலை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற போட்டியே இந்த ஒட்டுமொத்த இழுபறிக்கும் காரணமாக உணரப்படுகிறது.

வருடத்துக்கு கிட்டத்தட்ட மூன்று மில்லியன் டொலர்கள் புரள்கின்ற ஒரு பொது நிறுவனமாகிய சிட்னி முருகன் கோவில் பக்தியோடு பார்க்கப்படுவதற்கு அப்பால், சட்டபூர்வமாக இயங்குகின்ற மிகப்பெரிய லாபகரமான கம்பனி என்பதுதான் உண்மை.

ஆக, இதனை நிர்வகிப்பது என்பது ஒரு குட்டி அரசாங்கத்தினை நிர்வகிப்பது போன்றது. அதற்குரிய நிர்வாக கட்டமைப்புக்கள் முதல் அனைத்தும் நேர்த்தியாகவே காணப்படுகின்றன. ஆனால், அதன் செயற்பாட்டை செம்மைப்படுத்துவது மற்றும் அதன் ஊடாக சமூகப் பொறுப்பு மிக்க காரியங்களை முன்னெடுப்பது என்று வருகின்றபோதுதான் அதில் ஏகப்பட்ட சிக்கல்கள் பல்வேறு முனைகளில் கூர்தள்ளியவண்ணம் இடறுகின்றன.

கிட்டத்தட்ட பத்துவருடங்களாக தரித்துவிட இடமில்லாமல் கோயிலைச்சுற்றிக் கொண்டிருக்கும் வாகனங்களுக்கு எப்போதுதான் விடிவு?

கோயிலுக்கு படையெடுக்கின்ற பக்தர்களின் எண்ணிக்கையை பார்க்கும்போது நாளை முருகனே தனது மயிலை நிறுத்துவதற்கு இடமிருக்காது போலிருக்கிறது. இதற்கு என்னதான் முடிவு?





# Blinds Screens Security Doors
*Factory Direct*





Free Measure & Quotes - Delivery and Install - Servicing all Suburbans

**OUR SERVICES :**
- PLANTATION SHUTTERS • TIMBER BLINDS • SCREEN BLINDS • VERTICAL BLINDS
- ROLLER BLINDS • ROMAN BLINDS • SECURITY DOORS ( All Types) • FLY SCREENS
- WARDROBE DOORS • CANVAS AWNINGS • SPLASH BACKS • MIRRORS

**Contact - Raja (Roger) Mob: 0411 734 484 Tel: 93 330 770**

Email: galalxyoz@bigpond.com

**GalaxyOZ (PVT) Ltd.** Factory 31/283 Rex Road Campbellfield Victoria 3061

# அனந்தியின் டயறி


## வாழ்வியல் இடைவெளி தொடர்பில் கருணாகரமூர்த்தியின் தரிசனம்



ஆழியாள்

புலம்பெயர்ந்து வந்த முதல் தலைமுறையினராகிய ஈழத்தமிழர்கள் இப்போது எங்கள் இரண்டாம் தலைமுறையினரை உற்றுக்கூர்மையாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எங்கள் இரண்டாம் தலைமுறையினர் என்ன தேடல்களைக் கொண்டிருக்கிறார்கள், என்ன அடையாளங்களைத் தம்மோடு காவிச் செல்கிறார்கள், அவர்களின் வாழ்க்கைத் தெரிவுகள் எவ்வாறாயிருக்கின்றன என்பது பற்றியெல்லாம் கவனித்துக்கொண்டும் பேசிக்கொண்டும் இருக்கிறோம்.

இன்னும் சொல்லப்போனால் பல பல்கலைக் கழகங்களில் சமூக - விஞ்ஞானத்துறைசார் நெறிகள் புலம்பெயர் தலைமுறைகளாகிய நம்மையும், நம் வாழ்க்கைகளையும், நம் பரம்பரைகளையும் நுணுக்குக்காட்டிகள் இல்லாமலே ஆராய்ந்து கட்டுரைகளாக்கி விடுகின்றன. படைப்பிலக்கியத்துறையும் இதற்குச் சளைத்தது அல்ல. எப்போதுமே புதிய வளங்களையும், அனுபவங்களையும் அள்ளிச் சேர்த்துக் கொண்டோடும் மொழியின் வற்றாத பேராறுதான் படைப்பிலக்கியம்.




அவ்வாறு புதிய வளங்களை அனுபவங்களைப் பதிவு செய்திருக்கும் ஆக்கமே பொ.கருணாகரமூர்த்தியின் "அனந்தியின் டயறி"

பொ.கருணாகரமூர்த்தி முப்பது வருடங்களுக்கு முன் ஜெர்மனிக்குப் புலம்பெயர்ந்தவர். பெர்லினில் இருந்து பல படைப்புகளைத் தமிழில் எழுதியிருக்கிறார். புனைவு, அபுனைவு என இரண்டு எழுத்து முறைமைகளிலும் தொடர்ந்து இயங்குபவர். குறிப்பிட்டுச் சொல்வதானால் "ஒரு அகதி உருவாகும் நேரம்", "பெர்லின் நினைவுகள்", "பெர்லின் இரவுகள்", "பதுங்கு குழி" போன்ற படைப்புகளைச் சொல்லலாம்.

'அனந்தியின் டயறி', புலம்பெயர் இரண்டாம் தலைமுறைப் பெண்ணான 18 வயது அனந்தி எழுதும் நாட்குறிப்புகளாக அமைகிறது. அந்த ஜெர்மனிய தமிழ்ப் பெண்ணின் 2012 ஆம் ஆண்டுக்கான நாட்குறிப்பேட்டையே பொ.கருணாகரமூர்த்தி வாசகர்களுக்கு ஒரு புதினமாகத் தருகிறார்.

அனந்தி, காளிதாஸ் துளசி தம்பதியின் மகள். அவளுக்கு கடம்பன், நயனிகா என இரு சகோதரங்கள் இருக்கிறார்கள். எல்லோரையும் போல அனந்தியைச் சுற்றியும் அவளின் குடும்பத்தினர், உறவுகள், அம்மாவின் நண்பிகள், அப்பாவின் நண்பர்கள், அவளின் கல்லூரி நட்புகள் எனப் பலர் இருக்கிறார்கள். கல்லூரிக்குப் போகிறதை விட அனந்திக்குப் பரதம் பழகுதல், ஆங்கிலம் கற்றல், சமூக சேவையில் ஈடுபடுதல், நண்பர்களோடு பயணங்கள் போதல் என்பன விருப்பமான விடயங்கள். இவை பற்றிப் பற்பல குறிப்புகளை அனந்தி சுருக்கமாக எழுதியிருக்கிறாள்.

இவற்றை விட, அனந்திக்கு யாகு குழுமத்தில் 'உலகத்திலேயே சுவைமிகுந்த பழம் எது?' போன்ற கேள்விகள் கேட்பது, சர்ச்சைக்குரிய மோரி ஷோ பார்ப்பது, முகநூல் சட்டிங், நண்பர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பிக் கொண்டே இருப்பது போன்ற முக்கிய வேலைகளும் உண்டு. இப்படி வீட்டிலும், வெளியிலும் உள்ள இன்னோரன்ன சின்ன விடயங்களையும் அனந்தி பதிவு செய்திருக்கிறாள்.

அனந்தியின் டயறியை வாசிக்கும்போது அவள் சிக்கலான பல விடயங்களை முதிர்ச்சியுடன் அணுகும் திறனுடையவளாக இருக்கிறாள். இதற்குச் சில உதாரணங்களாக - பிங்கலையின் தாய் பிரிந்து வேறொருவருடன் போனபிறகு மகள் பிங்கலையுடன் அனந்தி பேசுவதையும், அபூர்வா கர்ப்பமாகி இருப்பதை அபூர்வாவின் தாயிடம் அனந்தி பக்குவமாகத் தெரியப்படுத்துவதையும், வயதான ஜெர்மன் பாட்டிக்கு அவள் பொறுமையுடன் பணிவிடைகள் செய்வதையும் சொல்லலாம்.

அனந்தியின் டயறியை வாசிக்கும்போது அவள் சிக்கலான பல விடயங்களை முதிர்ச்சியுடன் அணுகும் திறனுடையவளாக இருக்கிறாள். இதற்குச் சில உதாரணங்களாக - பிங்கலையின் தாய் பிரிந்து வேறொருவருடன் போனபிறகு மகள் பிங்கலையுடன் அனந்தி பேசுவதையும், அபூர்வா கர்ப்பமாகி இருப்பதை அபூர்வாவின் தாயிடம் அனந்தி பக்குவமாகத் தெரியப்படுத்துவதையும், வயதான ஜெர்மன்பாட்டிக்கு அவள் பொறுமையுடன் பணிவிடைகள் செய்வதையும் சொல்லலாம்.

இவற்றோடு அனந்தியை விரும்பும் மாறியோவுடனான அனந்தியின் உரையாடல்களும், கடிதங்களும் அவளை புத்திசாலியான பெண்ணாக காட்டுகிறது. ஜெர்மனிய - மேற்குக் கலாசாரத்திலும், ஈழத்துக் கலாசாரத்திலும் மிகுந்த லாவேகத்துடன் மாறி, மாறி இயல்பாக வாழ்கின்ற எம் இரண்டாம் தலைமுறையினரின் பிரதிநிதியாக அனந்தியை பொ.கருணாகரமூர்த்தி படைத்திருக்கிறார். அனந்தியின் சகோதரன் கடம்பனும், சகோதரி நயனிகாவும் அவ்வாறே வளர்கிறார்கள், அனந்தியைத் தொடர்ந்து வருகிறார்கள்.

இப்புதினத்தில் பத்து வயதுக் கடம்பனுக்கும் அப்பா காளிதாஸுக்கும் இடையே நடக்கும் தமிழ் உரையாடல்கள் மிக சுவாரசியமாக இருக்கின்றன. அப்பா தனக்குத் தெரியாத சில ஜெர்மன் வார்த்தைகளுக்கு கடம்பனிடம் தமிழ் அர்த்தம் கேட்பதுண்டு. கடம்பன் தமிழில் சொல்ல முனையும் விதமும், கடம்பனுக்கு தான் சொல்வது 'சரி' என்பதில் இருக்கும் தன்னம்பிக்கையும் ரசிக்கக் கூடியதாக இருக்கின்றன. எதையும் தன்னம்பிக்கையுடன் வெளிப்படுத்தக்கூடிய பாங்கை அந்த வாழ்க்கைச் சூழலில் அவன் கற்றிருக்கிறான். அப்பாவுக்கும் கடம்பனுக்கும் இடையே வருகின்ற மொழி தொடர்பான பிரச்சினைகளை அனந்தி அடிக்கடி தீர்க்கவேண்டி வருகிறது. ஒரு சிறு உதாரணம் கீழே:

Friday February 25th

அப்பா இன்று கடம்பனைக் கேட்டார்: "Schatten என்றால் என்னடா?"

"ப்பூ இதுகூட தெரியாதே. நடக்க நடக்க பின்னாலே வரும். அதுதான்."

"...."

"சிலவேளை முந்திக்கொண்டு முன்னாலும் போகும் கறுப்பாய்"

"என்ன நாயோ?"

சிரித்தான் அவன்.

"நூணல்"

"நிழலைச் சொல்றானப்பா"

"மெத்தச் சரி"

இவ்வாறாக இருவருக்கும் இடையேயான பல உரையாடல்களை அனந்தி டயறியில் குறித்து வைத்திருக்கிறாள்.




இப்புதினத்தினூடாக ஜெர்மன் ஆண் - பெண்களுக்கு உதைபந்தாட்டத்தில் இருக்கும் பைத்தியத்தில் - அவர்கள் ரீ - சேர்ட்களை உருவி வீசுவதும், வாயைத் திறந்தால் கோல், கோணர்கிக் என்று புசத்தும் விபரிப்புகளும், வீதியில் நடக்கும் நியோ காட்சிகளின் ஆர்ப்பாட்டமும் என தன்னைச் சுற்றின ஜெர்மனி தொடர்பான பல சமூக விடயங்களையும் அவதானித்து அவற்றைப் பதிவாக்கியிருக்கிறாள் அனந்தி. அவளின் பதிவுகளினூடாக குறிப்பாக சமபாலினர், மாற்றுத்திறனாளிகள், ஏதிலிகள், சூழல் மாசடைதல், சாதியக் கண்ணோட்டம், தன்னுடைய வாழ்க்கைத் துணையை தெரிதல் போன்ற பல விடயங்களில் தனது நிலைப்பாட்டினை மிகத் தெளிவாக முன்வைக்கிறாள்.

இப்புனைவு வழக்கமாக வரும் சம்பிரதாயமான - முழுமையான - கதா பாத்திரப்படைப்புகளாக இல்லாது, சம்பவங்கள், உரையாடல்கள், வரைவிலக்கணங்கள், இரசனைக் குறிப்புகள் மூலம் ஒட்டப்பட்ட படங்களின் தொகுப்பாக - கொலாஜ் போல இருக்கிறது.

எங்கள் இரண்டாம் தலைமுறையினர் சமூக, உலக விடயதானங்களில் இத்தனை தீர்க்கமான சிந்தனைத் தெளிவுடன் இருக்கிறார்கள். இவர்கள் ஈழத்து, ஜெர்மனிய - மேற்குலக கலாச்சாரங்களின் நெளிவு சுழிவுகளை கையாண்டு இரு கலாச்சாரங்களிலும் லாவேகமாகப் பயணிக்கக் கூடியவர்கள் - பயணிக்கிறார்கள் என்பதை அனந்தியின் டயறி வழியாக பொ.கருணாகரமூர்த்தி சொல்லாமல் சொல்கிறார். ■

அவுஸ்திரேலியாவில் இருந்து உலகெங்கும் தமிழ்மணம் பரப்பும்
உங்கள் தமிழ் வானொலி
தாயகம்
தமிழ் ஒலிபரப்பு சேவை
வையகம் தழுவிய வான்வழித் தோழன்
எமது நிகழ்ச்சிகளை
• www.thayagam.net இணையத்தளத்தினூடாகவும்
• Mobile தொலைபேசியினூடாகவும்
• எமது பிரத்தியேக வானொலிகளினூடாகவும் கேட்கலாம்.
Wifi
மேலதிக விபரங்கள், விளம்பரங்கள் மற்றும் தொடர்புகளுக்கு:
0432 710 238 | 02 8458 2393
www.thayagam.net /thayagam.tamil
Thayagam Tamil Broadcasting Service (TTBS)


Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
$159
புதுப்பித்தல்
$129
13 மாதங்கள்
SET TOP BOX
INCLUDED
70க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
NOW AVAILABLE ON LYCATV
TENTKOTTA + EROSNOW
SALES
0470 030 300 | 0470 216 619
CUSTOMER SERVICE
03 8652 1960 | 02 8072 7002
www.lycatv.tv

# விரல் நுனிகளை விலங்கிடக்கூடிய ஒளியிழை வடங்களுக்கு ஆபத்து?

● யோகன்

இணையத்தின் முதுகெலும்பான இந்த வடங்களின் வலையமைப்பை அத்திலாந்திக் கடலில் சுழியோடிவரும் ரஷ்ய நீர் மூழ்கிகள் உளவு பார்க்கின்றன.

விரல் நுனியில் தகவல்களை பெற்றுக் கொள்வது என்பது நெடுங்காலமாகவே பயன்பட்டுவரும் ஒரு சொற்தொடர். இது பொதுவாகப் புத்தகங்களிலிருந்து பெறும் அறிவைத்தான் முன்பு குறித்தது. புத்தகங்களின் பக்கங்களை புரட்டுவதற்கு விரல்கள் வேண்டாமா?

வாய் மொழியாக சொல்லப்பட்டும், கேட்கப்பட்டும் பரிமாற்றம் பெற்று வந்த தகவல்கள், பிறகு ஏடுகளில் எழுத்தாணியால் எழுதப்பட்டு, பின்னர் அச்சு இயந்திரத்தின் வருகைக்குப்பின் நூல்களில் மூலம் இலகுவாக மக்களை சென்றடைந்த தென்பதை நாங்கள் வாசித்தறிந்ததும் இந்த நூல்கள் வழியாகவே.

ஆனால் இன்றுள்ள நவீன யுகத்தில் ஒரு விரலால் அதாவது சுட்டு விரலால் தகவல்களைப் பெற்று விட முடியும் என்பதற்கு இன்றுள்ள நவீன ஸ்மார்ட் போன் கைத்தொலைபேசிகள் அல்லது அலைபேசிகளே நல்ல உதாரணம்.

அடிக்கடி அலை பேசியை சுட்டு விரலால் நோண்டிக் கொண்டிருப்பதாலேயே அல்லது கணினியின் மவுசை கிளிக் செய்து கொண்டிருப்பதாலேயே சுட்டு விரலில் நோவு வந்து விட்டது என்று சிலர் குறைப்படுமளவுக்கும் இந்த சுட்டு விரலின் பயன்பாடு பெருகியிருக்கிறது.

நின்றும், இருந்தும், நடந்தும், திரிந்தும், படுத்தும் இருந்தபடியே ஒரு விரலசைவில் எதையும் சாதித்து விடக்கூடிய வல்லமை கொண்டவர்களாகினோம் இன்று.

வீட்டுக்கொரு தொலைபேசி என்ற காலம் கடந்து போக ஆளுக்கொரு அலைபேசி என்ற காலத்தில் வந்து நிற்கிறோம்.

சினிமாவில் பெரிய திரைகள் போய் சின்னத்திரைகள் வந்தது போல கணினிக்கும் அதன் பரிணாம வளர்ச்சியில் இந்த குறுணித்திரைகள் அதாவது அலைபேசித் திரைகள் வந்து எம்மை கட்டிப்போட்டுள்ளன என்பது உண்மைதான்.

சிலருக்கு ஒருநாளில் மணித்துளிகள் பல இந்தக் குறுணித்திரையில் பூராயம் பார்ப்பதற்கும், வேறு சிலருக்கு தொட்டனைத்தூறும் அறிவூற்றாயும், சமையல் முதல் சங்கீதம் வரை, முகநூல் முதல் முகப்பூச்சு வரை என்று தகவல்களின் எல்லையோ பரந்து கிடக்கிறது. இதை விட அலைபேசிகளில் கமராவும், மின்னஞ்சலும், தேடு பொறியும், வழிகாட்டியும், நாட்காட்டியும், துயிலெழுப்பியும், டோர்ச் லையிற்றும்கூட அடக்கம்.

இனி புகை பிடிப்பவர்களுக்கான சிகரெட் லையிற்றராக இந்த அலைபேசிகள் பயன்பாட்டலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அணுவைத்துளைத்து ஏழ் கடலைப் புகுத்தி வைத்ததைப்போல இன்று எம் உள்ளங்கையில் கிடக்கும் இத் தகவல்கள் ஏழ் கடல் கடந்துதான் வருகின்றன என்பது எம்மில் பலர் அறிவதில்லை.

இன்று நாம் பயன்படுத்தும் தொலைத்தொடர்பாடல் சமிக்ஞைகளில் 99 சத வீதமானவை கடலுக்கடியில் செல்லும் ஒளியிழை வடங்களினூடாகவே (Fibre Optic Cables) செல்கின்றன. இவற்றை நீர் மூழ்கித் தொடர்பாடல் வடங்கள் (Submarine Communication Cables) என்றும் அழைப்பதுண்டு.

உதாரணமாக, ஒரு அலைபேசியினூடு அயல்நாட்டிலுள்ள ஒருவருடன் தொடர்பு கொள்ளும்போது அந்த சமிக்ஞை அலை பேசி கோபுரங்கள் (Mobile Phone Tower) வரை மட்டுமே கம்பியில்லாத் தந்தி (wireless) ஆக செல்கின்றன. பின்னர் இந்த ஒளியிழை வடங்களினூடாக கடலுக்கடியாகவே கடைசியில் செல்ல வேண்டும். வேறு வழியில்லை.

இந்த வடங்கள் கண்டங்களையும், நாடுகளையும் இணைக்கின்றன. இணையப் பாவனைக்கு முதுகெலும்பாக விளங்குகின்றவை இந்த வடங்கள். எனவே நாம் அலை பேசியிலோ அல்லது கணினியிலோ பார்க்கும், பேசும் அல்லது கேட்கும் அனைத்தும் இந்த வடங்கள் மூலமாகவே எம்மிடங்களை வந்தடைய வேண்டும். இவற்றின் வழியே ஒளியின் வேகத்தில் சமிக்ஞைகள் கடந்து செல்கின்றன.

இன்று செய்மதி அல்லது வயர்லெஸ் மூலம் தொலைதொடர்பாடல் என்பதுடன் ஒப்பிடுகையில் மிக மிக செலவு குறைந்த - அதேநேரம் அதி வேகங் கொண்ட - இணைய தொர்பாடலுக்கு இந்த கடலடி வடங்களை (Under water cables) தவிர வேறொன்றும் பாவனையில் இல்லை.

இதில் சுவாரஷ்யமான விடயம் என்னவென்றால் கடலடியில் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் இந்த வடங்களைப் பாதுகாப்பதில் பெரிய அக்கறை இன்னும் செலுத்தப்படவில்லை என்பதை பலரும் ஒத்துகொள்கின்றனர்.

கடற்படுக்கையில் புதைக்கப்படாமல் வெளித்தெரியுமாறு போடப்பட்டுள்ள ஒளியிழை வடங்களினூடான இந்தத் தொடர்பாடலுக்கு இடையூறுகள் பல வழிகளால் ஏற்படக்கூடும். கப்பல்கள் இடும் நங்கூரங்கள், சுறா மீன்கள் , நில அதிர்வுகள் மற்றும் சதி வேலைகளாலும் இந்த ஒளியிழை வடங்கள் சேதமாக்கப் பட்டு நாடுகள் இணையத் தொடர்பாடலினின்று முற்றாகத்துண்டிக்கப்படுவதும் நிகழ்ந்தேயுள்ளது.



"கரை வலை இழுக்கும் மீனவர் அல்லர், இணைய வலையை கரை சேர்க்கும் தொலைத்தொடர்பு ஊழியர்"

இணையத்தின் முதுகெலும்பான இந்த வடங்களின் வலையமைப்பை அத்திலாந்திக் கடலில் சுழியோடிவரும் ரஷ்ய நீர் மூழ்கிகள் உளவு பார்த்து வருவதாக அண்மையில் பிரித்தானிய உளவுத்துறை அதிகாரி ஒருவர் விசனம் தெரிவித்திருந்த கருத்து குறிப்பிடத்தக்கது. திட்டமிட்ட தாக்குதல் ஒன்றினால் இந்த வடங்கள் துண்டிக்கப்பட்டால் ஒரு நாட்டின் பொருளாதாரத்தையே முடக்கி விடுமளவுக்கு அதன் தீவிரத்தை அவரது கருத்து பிரதிபலித்தது.

குறிப்பிட்ட சில தனியார் கம்பெனிகளே பல ஆயிரம் கிலோ மீற்றர் நீளமாகச் செல்லும் இந்த வடங்களை கடலுக்கடியில் பதிக்கும் வேலையை விஷேடமாக வடிவமைக்கப்பட்ட கப்பல்களின் உதவியுடன் செய்து வருகின்றன. சமீபத்தில் கூகிள், மற்றும் மைக்கிறோ சொப்ட் நிறுவனங்களும் தனியாக இந்தச் பணியில் ஈடுபடுகின்றன என்பதை அறிய முடிகிறது.

அசுர வேகத்தில் தகவல்களைப் பெற்று கொள்வதில் ஏட்டிக்குப் போட்டியாக தொழிநுட்பம் வளர்ந்து வரும் இந்நாட்களில் அலைபேசிகளின் 5ஜி தொழிநுட்பம் பற்றிய செய்திகளும் மிக அதிகமாக சமீபத்தில் வந்த வண்ணமுள்ளன. அதே வேளை சேவை வழங்கும் நிறுவனங்கள், உதாரணமாக சீன தேசத்து நிறுவனமான Huawei இந்த 5ஜி தொழில்நுட்பத்தை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் வரக்கூடிய வகையில் - தவறான வழிகளில் - பயன்படுத்தும் சாத்தியங்கள் பற்றியும் தற்போது ஆராயப் படுகிறது.

இந்த ஸ்மார்ட் போன் அலைபேசிகளின் யுகம் கடந்து போனால், அடுத்து என்ன வர போகிறது என்று பலரும் கேட்க ஆரம்பித்துள்ளார்கள். தொடர்பாடல் வேகத்திலும், மென்பொருட்களிலும் அலைபேசிகளின் வடிவத்திலும் பல மாற்றங்கள் வரக்கூடும். அதை விட மிதக்கும் திரைகள் பற்றியும் பேசப் படுகிறது. ஆயினும் இந்த யுகம் சிறிது காலம் நீடிக்கும் என்றே நம்பப்படுகிறது.


20 ஆண்டுகளைக் கடந்து புதிய ஒலித்தரத்தில் உலகெங்கும் பரந்து ஒலிக்கிறது

உலகத்தமிழரின் உரிமைத் தோழன்

இன்பத்தமிழ் ஒலி

24 மணிநேர தமிழ் ஒலிபரப்புச் சேவை




02-9798 2993
02-8542 2016

0451 051 767
0425 324 953

inbathamil@gmail.com

inbathamiloli


Nivithra
Beauty Parlour & Training Academy
"A Women's Greatest Asset's
is Her Beauty"
"You get Married
once in a Lifetime
We Prepare you to be at your
best for that special day"
Bridal Makeup
Reception Makeup
Convocation Makeup
Key Birthday Makeup
Puberatery Ceremony Makeup
Bridal Makeup Our Free Service
Gold Facial, Waxing Hand,
Eyebrow Threading, Full Face Threading
Great Offer
50% Off
on Bridal Makeup
Booking
2019-2020
Call us now!
Hotline 077 771 2604
No.:207,Navalar Road, Jaffna.
Vithya Niranjan -Dism (uk) (Higher Diploma in Beauty
& Hair Dressing)
Formar President Jaffna District Beautician Assoctation


யாழ்.மண்ணிலிருந்து துரித
கடிதங்கள், பொதிகள் சேவை
அருள்
குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்
021 222 6113
அருள்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்
இல.10, புதிய மாநகர சபை கட்டடத் தொகுதி
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 3536
72 மணி நேரத்தில் உலகின்
எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்.
வட மாகாணத்தின் பொதிகள் சேவைத்துறையில்
முன்னோடிகள்
இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு ஆகாய, கடல்
மார்க்கமாக அதிவிரைவு,பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன் வெளிநாடுகளுக்கான
பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டு இருக்கும் முன்னணி நிறுவனம் 3 -4
நாட்களில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும்.
விசேட சேவைகள்
காய்கறி பழவகைகள், கடலுணவு வகைகள் என அனைத்தும் அனுப்பி
வைக்கப்படும். தங்க, வைர நகைகள், 48 மணி நேரத்தில் உலகின்
எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும்.

# பாதி



தமிழில்
எம்.ரிஷான் ஷெரீப்

இலங்கை பொல்கஹவல பிரதேச சபையில் அரச அலுவலராகப் பணி புரியும் ஷக்திக சத்குமார நவீன தலைமுறையைச் சேர்ந்த சிங்கள இலக்கியவாதிகளில் ஒருவர். நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் எழுதியிருக்கிறார். சாகித்திய இலக்கிய விருதுகளை வென்றிருக்கிறார்.

அண்மையில் அவர் தனது முகநூலில் பகிர்ந்து கொண்ட சிறுகதையே 'பாதி' எனும் இச் சிறுகதை. இச் சிறுகதை வெளியானதன் பிறகு பௌத்த சங்கங்களால் பல தொந்தரவுகளுக்கு இவர் ஆளாகி வருவதோடு, இவரது எழுத்துக்கள் பௌத்த மதத்துக்கு நிந்தனையாக அமைவதாக 'பௌத்த தர்மத்தைப் பாதுகாக்கும் இளைஞர் முன்னணி' எனும் அமைப்பைச் சேர்ந்தவர்களால் காவல்துறையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனால் கைது செய்யப்பட்ட அவர் பிணையில் வெளியே வர முடியாதவாறு தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இச்சிறுகதையைத் தமிழில் மொழிபெயர்ப்பதன் மூலமாக, இலங்கையில் படைப்புச் சுதந்திரத்தையும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் நிலைநாட்ட எழுத்தாளருடன் கை கோர்க்கிறேன் - மொழிபெயர்ப்பாளர்.



ஷக்திக சத்குமார




பிக்கு ஹல்வெல்ல கஸ்ஸப ஹிமி, கலான் பலிஹவடனவாக மாறியது சமூக வாழ்க்கையின் மீதிருந்த பற்றினால் அல்ல. தவிரவும் அவருக்கு துறவு வாழ்க்கையிலும் பற்றேதுமிருக்கவில்லை. துறவு ஜீவிதத்தைக் கைவிட்ட பிறகு தொடர்ந்தும் அப்பல்கலைக்கழகத்தின் பிக்குகளுக்கான விடுதியில் தங்கியிருக்க அவர் விரும்பவில்லை. பல்கலைக்கழகத்துக்குள் பிக்குவாகப் பிரவேசித்து துறவு ஜீவிதத்தைக் கைவிட்ட பலரும் அப்போதும்கூட பிக்குகளுக்கான விடுதியில் தங்கியிருந்தார்கள்.

பிக்கு தம்மஸ்ஸர ஹிமி, கலான் அருகில் வரும்போது அவர் பழைய குறிப்பொன்றைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"தப்பிச்சுட்டான்... தப்பிச்சுட்டான்... கலான் என்றால் தப்பிச்சுட்டான். நீ விடுதியில் தொடர்ந்தும் இருப்பாய்தானே... இனி சமரிக்காக கடைக்குப் போக வர இரவாகும்வரைக்கும் காத்திருக்கத் தேவையில்லை. இல்லையா?" - என்றவாறு பிக்கு தம்மஸ்ஸர ஹிமி கலானின் அறைக்குள் நுழைந்து அருகிலிருந்த கதிரையொன்றில் அமர்ந்து கொண்டார். கட்டிலில் சாய்ந்திருந்து 'புதுன்கே ரஸ்தியாதுவ (புத்தரின் அலைச்சல்)" நாவலை வாசித்துக் கொண்டிருந்த பிக்கு மேதானந்த ஹிமி, பிக்கு தம்மஸ்ஸர ஹிமியின் குரலைக் கேட்டு நூலை வலது கையில் ஏந்தியவாறு எழுந்து நின்றார்.

"எங்க பௌத்த சேனா படையால் இந்தப் புத்தகத்துக்கு எதிராக ஒரு வழக்குத் தொடரவிருக்கிறோம். இது முற்றுமுழுதாக அடிப்படைவாதிகளோட வேலை" - புதுன்கே ரஸ்தியாதுவ நூலைக் காட்டியவாறு பிக்கு மேதானந்த ஹிமி கூறினார்.

"கலான் வேறொரு அறைக்குப் போறதாச் சொல்றான்... அவனுக்கு காவியுடை மட்டுமில்லஎங்களையும்பிடிக்கலையோ என்னமோ?"-என்றவாறு அப்போதுதான் அறைக்குள் வந்த பிக்கு சுமேத ஹிமியின் குரல் கலான் செய்துகொண்டிருந்த வேலையை சற்று இடைநிறுத்தியது.

"அப்படில்லாம் ஒண்ணுமில்ல... நான் இந்த விடுதியை விட்டுப்போனாலும்கூட அடிக்கடி உங்களையெல்லாம் பார்த்துப் போக வருவேன்" - என்று கூறிய கலானின் குரலில் கவலை நிரம்பியிருந்தது.

"சரி சரி... இதையெல்லாம் நீ பெருசா எடுத்துக்காதே... எங்க போனாலும் பரவாயில்லை பட்டப்படிப்பை கை விட்டுடாம ஒழுங்காப் படிச்சுக்கோ..."

★ ★ ★

திடீரென நான் துறவு வாழ்க்கையைக் கைவிட்டவனென்று வெளிப்படுத்த முடியாததால்தான் நான் அக்கதையை அவ்வாறாக ஆரம்பித்திருந்தேன். எனினும் நான் துறவு வாழ்க்கையைக் கைவிட்டவன் என்பதை எல்லோரும் அறிந்திருந்தார்கள். நான் எதற்காக துறவு வாழ்க்கைக்குள் திணிக்கப்பட்டேன் என்பதை நான் அறியேன். ஏன் அதைக் கைவிட்டேன் என்பதுவும் எனக்குத் தெரியாது. மூத்த பிக்கு காலமானதற்குப் பிறகு, காவியுடையைத் தொடர்ந்தும் நான் அணிந்திருக்க வேண்டியதற்கான எந்தக் காரணமும் எனக்கிருக்கவில்லை.

லொயிட் அண்ணனின் அறைக்குச் செல்ல நான் தீர்மானித்தது, ஆழமாக யோசித்துச் செய்ததல்ல. எனினும் நான் இருந்த சூழலை விட்டும் தப்பித்துச் செல்லும் தேவை எனக்கிருந்தது. லொயிட் அண்ணனை முதன்முதலாக நான் சந்தித்தது எமது எதிரியாகத்தான். இப்போது அவர் எனது சினேகிதன் என்றபோதும், பௌத்த சேனா படைக்கு இப்போதும்கூட அவர் எதிரிதான்.

லொயிட் அண்ணன் ஒரு அரச சார்பற்ற வெளிநாட்டு நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். ஒரு தடவை பௌத்த சேனா படையோடு நாங்கள் லொயிட் அண்ணனின் அலுவலகத்துக்குள் பலவந்தமாக நுழைந்தோம்.

"நீங்க எல்லோரும் வெளிநாட்டுக் காசுல வாழ்ந்த விடுதலைப்புலித் தலைவர்களோட குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறதாச் சொல்றாங்க... நிஜமா?"

பிக்கு ஞானசாரவின் குரலுக்கு அலுவலகத்திலிருந்த அனைவரும் ஸ்தம்பித்துப் போயிருந்தார்கள். கேமராக்கள் சூழ்ந்திருந்த ஊடகவியலாளர்கள் எம்முடனிருந்தார்கள்.

"மன்னிக்கணும் சாமி... நாங்க யுத்தத்துல வீடுகளை இழந்த ஏழைக் குடும்பங்களுக்குத்தான்வீடுகளைக் கட்டிக்கொடுக்கிறோம்" - என்றவாறு அந்த அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒரு இளைஞன் முன்னால் வந்தார்.

"நீ யாரு?"

"நான் லொயிட். இங்க வேலை செய்றேன்."

★ ★ ★

"கலான் பலமான யோசனையில் இருக்கீங்க போல... நான் வரத் தாமதிச்சுட்டேனா?" - என்றவாறு லொயிட் அண்ணன் என் முன்னால் மோட்டார் சைக்கிளை நிறுத்தினார். நான் பையை எடுத்துக் கொண்டு சைக்கிளின் பின்னால் ஏறிக் கொண்டேன்.

"கலானுக்கு காவியுடுப்பை விடவும் ஜீன்ஸ் அழகாயிருக்கு" - லொயிட் அண்ணன் சைக்கிளைத் திருப்பும்போது கூறினார். நான் மெலிதாகப் புன்னகைத்தேன். அக்கணத்தில் நான் ஈருலகத்திலிருந்தேன்.

"கலான் ராத்திரிக்கு என்ன சாப்பிடுவீங்க? நான் வழமையா இடியப்பக் கொத்து ஒரு முழுப் பார்சல் சாப்பிடுவேன்" - என க்ரீன் கார்டன் ஹோட்டலுக்கருகில் சைக்கிளை நிறுத்தும் போது லொயிட் அண்ணன் கேட்டார்.

"எனக்கு அரைப் பார்சல் போதும்" என்று மெதுவாகக் கூறினேன்.

★ ★ ★

காவியுடையில் வாழ்ந்த காலத்தில் இந்தச் சமூகம் மிகவும் சீரழிந்து போய் விட்டதாக எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் அது அவ்வாறில்லை என இப்போது எனக்குத் தோன்றுகிறது. இச்சமூகத்தில் அனைவரும் காவியைக் கை விட்டவன் என்று என்னைப் புறந்தள்ளுவார்கள் என்ற பயம் எனக்கிருந்தது. எனினும் அவ்வாறெல்லாம் எதுவும் ஆகவில்லை. சமூகத்தில் அனைவரும் என்னை ஏற்றுக்கொண்டார்கள். பல்கலைக்கழகத்தைப் போலவே அவ்விடுதியும் ஏனைய நாட்களை விடவும் எனது விருப்பத்துக்குரியவையாக எப்போதும் இருந்தன.

"கலான் நான் சிறுகதையொண்ணு எழுதத் தொடங்கினேன். நல்லாருக்கான்னு பாரு..." என்ற லொயிட் அண்ணன் கையால் எழுதப்பட்ட காகிதங்கள் சிலவற்றை எனது மேசை மீது வைத்தார். தலைப்பற்ற அக்கதையை நான் மெதுவாக வாசிக்கத் தொடங்கினேன்.

யஷோதரா விம்மிக் கொண்டிருந்தாள். சன்னவின் செயலைத் தடுக்க முடியுமாக இருந்தபோதிலும், தான் பொறுமையாக இருந்தது ஆழ் மனதில் அதற்கொரு இச்சையுமிருந்ததால்தான் என யஷோதராவுக்குத் தோன்றியது.

சித்தார்த்தன் குடும்ப வாழ்க்கையைத் துறந்து சென்றது ராகுலன் அவரது குழந்தையல்ல என்பதை அறிந்ததாலா? சித்தார்த்தனால் நான் திருப்தியடையவில்லை என்பதை அவர் அறிந்திருந்தாரா? பெண்ணொருத்தியைத் திருப்தியடையச் செய்யும் திறமை அவருக்கு இருக்கவில்லை என்பது நிஜம்தானே? யஷோதராவின் உள்ளம் தொடுத்துக் கொண்டிருந்த கேள்விகளுக்கு பதில்களைத் தேடுவதற்குப் பதிலாக அவள் நீண்ட பெருமூச்சு விட்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள முயற்சித்தாள்.

"ஐயோ! இந்தக் காகிதங்களை எரிச்சிடுங்கண்ணா..." - ஒரு பந்தியை வாசித்த நான் லொயிட் அண்ணனுக்கு விடயத்தைத் தெளிவுபடுத்த எழுந்து நின்றேன்.

"ஏன் ஒரு படைப்பாக இதை இச்சமூகம் ஏற்றுக் கொள்ளாதா? இல்லேன்னா நரகத்துக்குப் போயிடுவேனோ? இது மஹாயான பௌத்தத்துல இருக்குற ஒரு எண்ணக் கரு" - என்றவாறு சிகரெட்டொன்றைப் பற்ற வைத்துக்கொண்ட லொயிட் அண்ணனின் உதடுகளில் கேலிப் புன்னகையிருந்தது. புகை வளையங்கள் சுதந்திரமாக அந்த அறைக்குள் மிதக்கத்தொடங்கின.

"ஆனா இது ஒரு தேர வாத பௌத்த நாடு" - என்று என்னுள் மிதந்துகொண்டிருந்த உண்மையை கூறிவிட்டேன்.

"ஆமா... பெயரளவில் மாத்திரம்."

★ ★ ★

இருவரால் இழுத்துச் செல்லப்பட்ட நான் இருண்ட அறையொன்றுக்குள் தள்ளப்பட்டேன். வீசப்பட்டுப் போய் தரையில் விழுந்தேன். அத்தோடு கதவு தாழிடப்பட்டது. அரையிருளில் நான் அறை முழுவதும் நோட்டமிட்டேன். அறையின் ஒரு மூலையில் மூத்த பிக்கு படுத்திருப்பதை நான் அக்கணம் கண்டேன். அவர் மிகுந்த அசௌகரியமாக இருப்பது தென்பட்டது. நான் மெதுவாக அவரருகே சென்றேன். படுத்திருந்தபோதும், அவர் உறங்கியிருக்கவில்லை. கண்களில் கண்ணீர் நிரம்பியிருந்தது. என்னைக் கண்டதும் மூத்த பிக்கு சடுதியாக எழுந்து நின்றார். அவரது கால்களிரண்டின் இடையிலிருந்து இரத்தம் ஆறாகப் பெருக்கெடுத்துப் பாய்வது கண்டு நான் மிகுந்த அச்சமுற்றேன்.

(29ஆம் பக்கம் பார்க்க)

# பாதி




(28ஆம் பக்கத் தொடர்ச்சி)

'ஐயோ என்ன சாமி இது?" - என நான் பலமாக ஒலமிட்டேன். எனினும் ஓசை வெளிவரவில்லை. நின்றிருந்த மூத்த பிக்கு எனது புறமாகத் திரும்பி காவியுடையை உயர்த்திக் காட்டினார். அவரது ஆணுறுப்பு அறுத்துப் போடப்பட்டிருந்தது. அதிலிருந்து இரத்தம் பாய்ந்து கொண்டிருந்தது.

"யார் இந்தக் குற்றத்தைச் செய்தது..?"

"ஹேய் ஹேய் கஸான் ஏன் இந்த நடுச் சாமத்துலகத்துறே?"-என்றலொயிட் அண்ணனின் குரலுக்கு நான் விழித்துக் கொண்டேன். அறையில்மின்குமிழ்எரிந்துகொண்டிருந்தது.

"நான் சின்னதா ஒரு கனவு கண்டேன்" - என்று கூறியவாறு நுளம்பு வலையைத் தூரமாக்கி விட்டு கட்டிலில் அமர்ந்து கொண்டேன்.

"உனக்கு ரொம்ப வியர்த்திருக்கு" - என்றலொயிட் அண்ணன் மேசைமீதிருந்த தண்ணீர் போத்தலை எடுத்து என்னிடம் எறிந்தார். போத்தலை இரு கைகளாலும் பிடித்துக் கொண்ட நான் ஒரே மூச்சில் குடித்து முடித்தேன். அறையின் கதவைத் திறந்த லொயிட் அண்ணன் என்னைச் சிரித்துக் கொண்டே பார்த்துக் கேட்டார்.

"நீ இப்பவும் நரகத்துலதான் இருக்கியா?"

பதில் எதையும் கூறாமல் நான் இருளிலேயே நீர்க் குழாயருகே சென்றேன். முகம், வாயைக் கழுவிக் கொண்ட பிறகு சற்று ஆசுவாசமாக உணர்ந்தேன். நான் வந்து திரும்பவும் நுளம்பு வலைக்குள் புகுந்து கொண்டேன். மெல்லிய குரலில் பாடலொன்றை முணுமுணுத்தவாறு லொயிட் அண்ணன் அறையின் கதவைத் தாழிட்டு விட்டு மின்குமிழை அணைத்துவிட்டு வந்து படுத்துக்கொண்டார். சற்று நேரத்துக்குப் பிறகு அவரது முனகல் ஒலி எனது காதருகே கேட்கத் தொடங்கியது. மூத்த பிக்குவின் உடலில் எழுந்த வியர்வை கலந்த வாசனையை லொயிட் அண்ணனின் உடலிலிருந்தும் நான் உணரத் தொடங்கினேன். மெதுவாக கண்களை மூடிக் கொண்டேன்.




SAHA SIDDHA

HERBAL TREAMENT AND YOGA THERAPY

TREATMENTS FOR ALL AILMENTS ARE DONE THROUGH TRIO THERAPHY
(Herbal Treatment, Yoga & Diet plan)

A healthcare professional with a long track record of successfully diagnosing and treating patients using accurate Siddha (HERBAL) medicines along with therapeutic yoga techniques. A Gold Medallist in Doctor of Siddha Medicine



- Abnormal Menstruation
- Arthritis
- Back and neck pain
- Diabetes Mellitus
- Eczema
- Epilepsy
- IBS
- Hemiplegia
- High Cholesterol
- Hypertension
- Impotence & Infertility

DR SELVI MANI B.S.M.S, MD, Y.T.O.T
SIDDHA (HERBAL), YOGA PHYSICIAN
0412618953
74 CARLTON ROAD
DANDENONG NORTH, VICTORIA - 3175
www.siddhaherbsaustralia.com.au

- Urinary Tract Infection
- Jaundice
- Mental disease & disorder
- Loss of Memory
- Obesity
- Peptic ulcer
- Prostate Problem
- Sleep Disorder
- Thyroid Problems
- Tonsillitis
- Wart etc...

# இவர்கள் செய்த காரியம் தெரியுமா?

## "ஆஸ்திரேலிய தமிழர்கள்" வட்ஸ்அப் குழுமத்தின் பிறின்ஸ்





**கேள்வி: "ஆஸ்திரேலிய தமிழர்கள்" என்ற வட்சப் குழுமம் உருவாக காரணம் என்ன ?**

பதில்: முதன் முதலாக *2015* ஆண்டளவில் சென்னை கடலூர் பகுதியில் இடம் பெற்ற வெள்ள அனர்த்தத்துக்கு உதவி செய்தோம்.

அந்தக்காலப்பகுதியில்தான் ஜல்லிக்கட்டுப் போரட்டம் தமிழ்நாட்டில் வெடித்தது. அந்த போராட்டத்தின்போது தமிழர்கள் பலர் ஒன்றிணைந்து விக்டோரிய நாடாளுமன்றத்திற்கு முன்னால் போராட்டத்தை நடத்தினோம். இங்குள்ள தமிழர்களை எவ்வாறு இணைக்கலாம் என்று எண்ணினோம். அதற்கான தீர்வாகவே 'ஆஸ்திரேலிய தமிழர்கள்" என்ற வட்சப் குழுமம் உருவாகியது.

**கேள்வி: இது தமிழ்நாட்டு தமிழர்கள் மட்டும் ஒருங்கிணைந்த குழுமமா?**

பதில்: இல்லை. இந்த நாடு அந்த நாடு என்று பிரித்துப் பார்ப்பதில்லை. தமிழால் தமிழர்களாக ஒன்றிணைந்துள்ளோம்.

**கேள்வி: 2015 ஆம் ஆண்டு ஆரம்பித்த இந்த குழுமம் ஆற்றிய சேவைகள் - போராட்டங்கள் குறித்து விளக்கமாக சொல்லுங்களேன்?**

பதில்: குறிப்பாக எங்களுடைய போராட்டங்கள் அனைத்தும் தமிழகத்தை மையமாக வைத்தே நடத்தப்படுகின்றன. அது ஏன் என்றால், தமிழர்களுக்கு தாயகம் என்றால் அது தமிழ்நாடு என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்தும் கிடையாது. அதாவது தமிழர்களின் வேர் தமிழ்நாடுதான். இங்கிருக்கும் நாம் எல்லோரும் கிளைகள். எங்களுடைய வேர் நல்லதாக அமைந்தால் தான் கிளைகள் உயிர்வாழ முடியும். அதனால் எங்களுடைய மக்களுக்கும் மண்ணுக்கும் எப்போதெல்லாம் தேவை ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் நாம் குரல் கொடுத்து வருகின்றோம். எமது மக்கள் பாதிக்கப்படும் போதெல்லாம் உதவிகளையும் வழங்கிவந்தோம்.

*2015* ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்ட மக்களுக்கு இரண்டு கட்டங்களாக உதவிப்பொருட்களை வழங்கினோம்.

*2016* ஆம் ஆண்டு விவாசாயிகள் பலர் தற்கொலை செய்துகொண்டனர். அவ்வாறான குடும்பங்களை இணங்கண்டு அவர்களின் அடிப்படை வாழ்வாதாரத்துக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தோம். அத்தோடு அக்குடும்பங்களின் கல்வி செயற்பாடுகளுக்கும் உதவி செய்தோம்.

*2017* ஆம் ஆண்டு நாகப்பட்டிணம் மாவட்டத்தில் வாய்க்கால் மற்றும் குளத்தை தூர்வாரி கொடுத்தோம். இதன் ஊடாக நான்கு கிராமங்களைச் சேர்ந்த எழுநூறு குடும்பங்கள் பயன்பெற்றன.

*2018* ஆம் ஆண்டு திருவாரூர் மாவட்டத்தில் குளம் மற்றும் வாய்கால்களை துர்வாரும் வேலைத்திட்டதை முன்னெடுத்தோம். இதன் ஊடாக சுமார் பன்னிரண்டு கிலோமீற்றர் சுற்றளவிலுள்ள எட்டாயிரம் குடும்பங்கள் பயன்பெற்றுவருகின்றனர்.

அதேகாலப்பகுதியில், காஜா புயலில் பாதிக்கப்பட்ட ஒன்பது கிராமங்களுக்கு அடிப்படை உதவிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, கேரளா வெள்ளத்தின் போதும், எமது குழுமத்தின் ஊடாக பெறப்பட்ட நிதி அம்மாநில முதலமைச்சர் நிவாரண நிதிக்கு கொடுக்கப்பட்டது.

அதேவேளைஹவார்ட் இருக்கை அமைக்கல், விவசாயிகளின் தேவைகளை நிறைவேற்றல் போன்றவற்றுக்காக "மொய் விருந்து" நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

ஜல்லிக்கட்டு போராட்டத்துக்கு ஆதரவித்து விக்டோரிய நாடாளுமன்றத்திற்கு முன் ஒன்றுகூடி எதிர்ப்பை வெளியிட்டிருந்தோம். காவேரிபிரச்சினைக்காகவும்விக்டோரிய மாநில பாராளுமன்றம் முன் ஒன்றுகூடி ஆதரவை வெளியிட்டிருந்தோம். தூத்துக்குடி போராட்டத்துக்கு ஆதரவாகவும் நின்றோம்.

இந்த மாதிரி முடிந்தளவு மக்களுக்காகவும் மண்ணுக்காகவும் குரல் கொடுத்து வருகின்றோம்.

**கேள்வி: நீங்கள் திரட்டும் நிதியை எவ்வாறு தமிழ்நாட்டில் கையாள்கிறீர்கள்?**

பதில்: எங்கள் குழுமத்திற்கென தமிழ் நாட்டில் தன்னார்வத்தொண்டு நிறுவனம் ஒன்று உள்ளது. அவர்களின் ஊடாக மக்களிடம் கொண்டுசெல்கிறோம்.

**கேள்வி: உங்களுடைய சேவைகள் தமிழ்நாட்டுக்குள்மட்டும்மட்டுப்படுத்தப்பட்டதா? ஏனெனில் இலங்கையின் வடபகுதியில் இரணைமடுகுளம்உடைப்பெடுத்தனால் ஏராளமான மக்கள் இடம்பெயர்ந்தனர். வாழ்வாதாரங்கள் அழிக்கப்பட்டன. அவர்களுக்கு ஏதாவது உதவினீர்களா?**

பதில்: எங்களுக்கு இலங்கையில், களத்தில் நின்று வேலை செய்ய கூடிய ஆட்கள் இல்லை. அதனால் வேறு எந்த அமைப்பாவது இந்த உதவித்திட்டத்தில் பங்குவகிக்கிறதோ அந்த அமைப்பின் ஊடாக நாம் அந்த மக்களுக்கு உதவி வருகின்றோம்.

உதாரணத்திற்கு, ரேடியோ தொன் நிகழ்ச்சி நடந்தது. அந்த நிதி திரட்டும் நிகழ்வில் நமது குழுவில் உள்ளவர்களும் இணைந்து செயலாற்றியிருக்கிறோம்.

**கேள்வி: ஆஸ்திரேலிய தமிழர் குழுமத்தை அமைப்பு ரீதியாக பதிவு செய்யும் எண்ணம் உள்ளதா? அப்படியாயின் அதைப் பற்றி சொல்லுங்கோவன்?**

பதில்: இதுவரை பதிவு செய்யவில்லை. பதிவுசெய்வதற்கானநடவடிக்கையை மேற்கொண்டுவருகின்றோம்.

**கேள்வி: இங்குதானே பல தமிழ்அமைப்புகள் இருக்கின்றனவே?**

பதில்: ஆமாம். நாம் இந்த அமைப்பை உருவாக்க காரணம் இருக்கின்றது. இங்கு தன்னார்வ அமைப்புகள் மிகவும் குறைவு அல்லது இல்லை என்றே சொல்லாலம். எங்களுடைய அமைப்பு பலவிதமான தன்னார்வவேலைத்திட்டங்களைசெய்துகொண்டு வருகின்றோம். அதனால் இந்த அமைப்பை பதிவுசெய்யவேண்டியது காலத்தின் கட்டாயம் என்று நான் நினைக்கின்றேன்.

இங்கே இருக்கின்ற அமைப்புகள் ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட குறிக்கோள்கள் இருக்கின்றன. ஒரு சில அமைப்புகள் தமிழ் பள்ளிகளை நடத்த வேண்டும். இன்னொரு சில அமைப்புக்கள் வானொலிகளை நடத்த வேண்டும். ஒரு சில அமைப்புகள் முக்கிய தமிழ் பண்டிகைகள் அல்லது தமிழ் கலசார நிகழ்வுகளை நடத்துவதில் குறியாக உள்ளன.

ஆனால் முக்கியமாக இங்கிருந்து நிதி திரட்டி தமிழர்கள் பாதிக்கப்படும் பிரதேசங்களுக்கு உதவி செய்ய ஓர் அமைப்பு இல்லை. அப்படி ஓர் அமைப்பு இல்லாத இடத்தை வந்து நாம் நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணுகிறோம்.

**கேள்வி: இந்த அமைப்பு பதியப்படும் பட்சத்தில் அனைத்து தமிழர்களும் அதில் உள்வாங்கப்படுவார்களா?**

பதில்: ஆம்.

**கேள்வி: நிதி திரட்டும் செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மை இல்லை என்ற குற்றச்சாட்டுகள் உள்ளன. நீங்களும் நிதி திரட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுகிறீர்கள். உங்களுடைய அமைப்பின் வெளிப்படை தன்மை எவ்வாறு அமையும்?**

பதில்: நாம் திரட்டும் நிதியின் தொகை மற்றும் செலவீனங்கள் குறித்த தகவல்களை எமது முகப்புத்தகப் பக்கத்தில் பதிவிடுகின்றோம். வட்சப் குழுமத்திலும் பதிவிடுகின்றோம். எமது இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதிலும் பதிவேற்றுவோம்.

**கேள்வி : "ஆஸ்திரேலியத் தமிழர்கள்" என்ற குழுமம் சார்பாக மக்களுக்கு ஏதாவது கூற விரும்புகிறீர்களா?**

பதில்: தொடர்ந்து தமிழ் மக்களுடைய ஆதரவு வேண்டும். அனர்த்தங்களின்போது நிதிசேகரிக்கும்போதும் மக்களின்போராட்டங்களுக்கு ஆதரவாக நாம் ஒன்று சேரும் போதும் உங்களுடைய ஆதரவு வேண்டும். நாங்கள் நிதி திரட்டும் போது பலவிதமான நிகழ்ச்சிகளை நடத்துகின்றோம். குறிப்பாக மொய்விருந்து, பன்னிங்ஸ் இல் விற்பனை நிலையம் மற்றும் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் போன்றவற்றை நடத்தி வருகின்றோம். இவ்வாறான நிகழ்ச்சிகளில் மக்கள் பங்கெடுக்க வேண்டும். எங்களை நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டும் என்றால் *0415259594* என்ற இலக்கத்தில் என்னை அணுகுங்கள்.


Art by keerthi
Keerthi Meganthi
Irupalai East, Kopay. Tel : 075 293 5753


YOGIS
Institute of Beauty Therapy
Hair Dressing &
Home Science (Pvt.) Ltd.
Our Beauty Services
Bridal : Dressing up brides & Maids. Dance Make - up. Air brush Make - up, Hair Style and Dressing for any Occasion
Ladies Hair : Dressing Styling, Cutting, Straightening , Rebonding, Perming, Tint & Highlights and Hair Treatments
Ladies Beauty : Facial, Pimple Treatment, Threading & Waxing, Maincure & Pedicure, Nail Art, Gel Nail Fixing and Mehendi
DR. (MRS). YOGINI SHANMUGANATHAN
Diploma in Asethetics & Cosmetology (India)
Diploma in Advanced Bridal Make- up & Character Make - Up (India)
Diploma Advanced Modern Make - up Course with Air Brush Make - up (India)
Diploma in Home Enconomics (Sri Lanka)
No.75, Amman Road, Nallur, Jaffna.
Tel: 021 222 2796 / 077 716 4923
www .yogisbeauty.com/ Email: yogisbeauty@gmail.com
Conducting Advanced Diploma Classes In, Beauty Culture, Hair Dressing, Bridal Make-up and Cake Decoration




# மறதிக்கு மருந்து உண்டா?

**கேள்வி:** மறதிநோய் என்றால் என்ன? இந்த நோய்க்கு சித்த மருத்துவத்தில் தீர்வு உண்டா? விளக்கவும்.

**பிரவீன் சுந்தர் - சிட்னி**

பதில்: மறதிநோய்க்கு ஆங்கிலத்தில் Dementia என்று பெயர். இந்தப் பிரச்சினை மெல்ல மெல்ல உருவாகும். ஒரு முகத்தன்மை என்ற Concentration Power குறைய ஆரம்பிக்கும். பின்பு மெதுவாக மறதி உண்டாகும். வயதான காலங்களில் முக்கியமாக 65 வயதுக்கு மேல் அதிகளவு உண்டாகும். சிந்திக்கும் திறன், தீர்மானிக்கும் தன்மை, புரிந்துகொள்ளுதல் குறைபாடு போன்ற அத்தனை பிரச்சினைகளும் தோன்றும்.

Algheimr's disease, Vasular dementia and Argerosclerotic dementia இவற்றை சித்த மருத்துவத்தில் வாத, பித்த, கப வகைகளில் பிரிக்கலாம். ஒவ்வொரு மறதி வகைகளுக்கும் தேவையான சுவையுடைய மூலிகை மருந்துப் பொருட்களைத் தொடர்ந்து உடல் வன்மைக்குத்தகுந்தவாறு எடுத்துக்கொள்ளும் போது, இந்தப் பிரச்சினையிலிருந்து சிறிது சிறிதாக முன்னேற்றம் காணப்படும்.

இந்த நோயை வருமுன் தடுப்பதற்கான உணவு முறை பழக்க வழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். முளைவிட்ட தானியங்கள், மாதுளம்பழம், பாதாம், வால்நட் போன்ற பருப்பு வகைகள் மிகச்சிறந்தவை.

**கேள்வி:** என் வயது 42. இரத்தத்தில் யூரிக் அமிலத்தின் அளவு அதிகளவு இருக்கிறது. தற்போது நவீன மருத்துவம் எடுத்துக்கொள்கிறேன். சித்த மருத்துவத்தில் ஆர்வமுண்டு. இதில் பக்க விளைவுகள் கிடையாது எனத் தெரியும். என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்குங்கள்.

**அமல்ராஜ்- மெல்பேர்ண்**

பதில்: Purine அதிகளவு உள்ள பொருளை உண்ணும்போது இது இரத்தத்தில் யூரிக் அமிலத்தின் அளவை அதிகரித்து இரவிலும் காலையிலும் எலும்புப் பொருத்துகளில் வலியை உண்டாக்கும். முக்கியமாக கால்களில் உள்ள மூட்டுகள் அதாவது கால் கட்டைவிரல், கணுக்கால், கால் மூட்டு, மணிக்கட்டு, கைதுமூட்டு ஆகியவை பாதிக்கப்படும். இந்த இடங்களில் Utate படிமங்கள் படிவதற்கான காரணம் இந்த இடங்கள் உடலின் மத்திய பகுதியை விட குளிர்ச்சியாக இருக்கும்.

அதிகமான மதுபானம் எடுத்துக்கொள்வதாலும் இந்த Goat நோய் உண்டாகும். கால் விரலை அசைக்க முடியாத அளவுக்கு வலி மிக அதிகமாக இருக்கும். சித்த மருத்துவத்தில் இந்த நோயை முற்றிலுமாகக் குணப்படுத்தலாம்.

கசப்பு சுவையுள்ள மூலிகை மருந்துகளைக் கொடுத்து வீக்கம் மற்றும வலியைக் குறைத்து பின்னர் தைல மருந்துகளை வலியுள்ள இடத்தில் தடவி வர வேண்டும்.

அப்பிள் பழத்தில் malic அமிலம் உள்ளதால் இது இரத்தத்தில் யூரிக் அமிலத்தின் அளவை சமப்படுத்தும். அதனால் தினம் ஒரு அப்பிள் பழம் சாப்பிடலாம். இஞ்சி மிகச்சிறந்த வலி நிவாரணி மற்றும் வீக்கத்தைக் குறைக்கும் தன்மை கொண்டது.

# Show Me An Answer


Dr. Naleemudeen

Instead of telling you a poem,
Let me tell you a story,
A story of tears,
A story of bullets,
A story of shattered dreams,
A story of forgotten history.

Born on my mother's land,
Born as a Muslim,
I didn't know I was born into the inevitable bullet,
My own persecution.

Studied for the paper,
It filled my head, but not my stomach,
The void was made through a piece of that inevitable bullet,
My language and ethnicity.

"You've snatched our jobs", they say,
"You've abducted our land", they say.

My land did not let me live,
Because of ethnicity and language.

Being a refugee in another mother's land,
Is better than living a slave in my mother's land.

From East to West,
With thousands of dreams and desires,
My heart was rumbling towards them.

The Australian immigration officer asked me,
"Why do you want to live in Australia?"

A surety that I won't be antagonised by that inevitable bullet,
A worth to these carboard papers,
The fulfilment of my stomach,
My heart rumbled louder, my lips projected,
The deepest wish of my heart.

I came, I'm working, I'm living.

Who's evil eye?
Why is history being rewritten?
Why is my heart rumbling again?
Why is the gnawing pain from that inevitable bullet, forming?

There, I was shot down for my language and ethnicity,
She did not let me live,
Here, my colour and religion have viewed me as a terrorist,
The holder of the bullet,
But it wasn't me calling the shots.

"You've snatched our jobs", they say,
"You've abducted our land", they say,
Same words, different mother.

My mother land did not let me live,
Now this mother's land will no longer let me live.

My children's stomachs are now empty.
To go to their mother's land, they do not know the language and culture,
To live here, they will not stand this mother's bullets on their religion and colour.

Tried to erase my history of tears,
Only to create a new story of tears.

Where am I to go?
Before the gun culture destroys my generation,
For our culture, religion, ethnicity and language,
Where should we go?
Show me an answer.

# ஆஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் சர்வதேச மகளிர் தினம் - 2019












Hotline : 0777 983 933
brightinnjaffna@yahoo.com
Bright Inn
Holiday Resort
Deluxe Rooms
A/C Rooms
Banquet Hall
Family Restaurant
ALL KINDS OF
INDOOR & OUTDOOR
CATERING SERVICES
#51, Sivan Road, Thirunelveli, Jaffna. Tel: 021 222 1889 Fax: 021 205 1889 www.brightenhotels.lk


winnys lucky
INDIAN
BEAUTY PARLOUR
NO.164A, Ramanathan Road, Thirunelvely, Jaffna
(Opposite Jaffna University - Science Faculty)
Branch: Jaffna Road, Manipay
(Opposite St.Antony's Church)
021 221 6499, 077 054 0935
077 744 6962



# ஆஸ்திரேலியா – சிறிலங்கா...

## 2500 டொலர்கள் செலவுடன் வாகனங்களை அனுப்பும் ட்ரான்ஸ்கோ!

ஆஸ்திரேலியாவிலிருந்து பொருட்களை அனுப்புகின்ற சேவையை வழங்கிவரும் ட்ரான்ஸ்கோ நிறுவனம் இன்று பரந்து விரிந்து தனது கிளைகளின் ஊடாக பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்றிருக்கிறது.

தரைவழியாகவும் - கடல்வழியாகவும் - வான் வழியாகவும் பொருட்களை கொண்டுசென்று குறிப்பிட்ட தரப்பிடம் சேர்ப்பிக்கும் நம்பிக்கை மிகுந்த சேவையை கடந்த 1991 ஆம் ஆண்டு முதல் ஆஸ்திரேலியாவில் மேற்கொண்டுவரும் "ட்ரான்ஸ்கோ" 2009 ஆம் ஆண்டிலிருந்து புதிய நிர்வாகத்தின் கீழ் மேலும் பல கவர்ச்சிகரமான சேவைகளினால் ஆஸ்திரேலியாவில் பொருட்களை அனுப்புகின்ற நிறுவனங்களின் மத்தியில் சாதனைகளை குவிக்கின்ற வெற்றியாளனாக தன்னை முன்னிறுத்தியுள்ளது. எதிரொலியுடன் இணைந்து பயணிக்கும் நெடுநாள் விளம்பரப் பங்காளியான "ட்ரான்ஸ்கோ" முகாமையாளர் சரித்தவுடன் அண்மையில் அவரது அலுவலகத்திலேயே சென்று சந்தித்து உரையாடினோம்.

**வெற்றிநடைபோட்டுக்கொண்டிருக்கும் "ட்ரான்ஸ்கோ" நிறுவனத்தின் பல்வேறு விடயங்களை குறித்து பேசுவதோடு நின்று கொள்ளாமல், அண்மைக்காலமாகவே இலங்கையர்களிடம் பெரியளவில் பேசப்படுகின்ற" வாகனங்களை அனுப்புதல்" என்ற விடயம் தொடர்பாக அவரிடம் கேட்டறிவதும்தான் சந்திப்பின் முக்கிய நோக்கமாக இருந்தது.**

வாடிக்கையாளர் - விளம்பரதாரர் என்று வித்தியாசம் பாராது அனைவருடனும் அளவளாவி பேசவல்ல சரித்த, "எதிரொலி" ஆசிரியர் பீடத்தினர் என்றவுடன் உவகையுடன் வரவேற்றார். மெல்பேர்னின் 'டன்டிநோங்க்' பகுதியிலுள்ள ட்ரான்ஸ்கோவின் மிக விசாலமான பொருட்கள் சேகரம் செய்யும் மண்டபத்துடன் கூடிய அலுவலகம் அன்று கொஞ்சம் அமைதியாகவே இருந்தது. கைலாகு கொடுத்து அலுவலகத்தின் மேல்தளத்துக்கு அழைத்துச்சென்ற சரித்த, தாங்கள் வழங்கும் சேவை விவரங்கள் அடங்கிய வண்ணமயமான நாட்காட்டி ஒன்றினை கைகளில் தந்தார். கூடவே, குளிர்காற்றை பொழிகின்ற இயந்திரத்தினை அழுத்திவிட்டு, உற்சாகத்துடன் "பேசலாமே" – என்றார்.

**? சொல்லுங்கள் சரித்த! புலம்பெயர்ந்துவந்த இலங்கையர்கள் பலவிதமான தொழில்களில் பல்வேறு வெற்றிகளை குவித்து வருகின்ற இந்தக் காலகட்டத்தில் பொருட்களை அனுப்புகின்ற இந்த சேவைத்துறை இவ்வளவு வெற்றிகரமாக முன்னேற்றமடையும் என்று எந்த நம்பிக்கையில் கால் வைத்தீர்கள்? தற்போது அந்த நம்பிக்கை எவ்வளவுதூரம் உங்களைவில் வெற்றியை தந்திருக்கிறது?**

உண்மையில் எல்லா தொழில்களையும்போல இதுவும் ரிஸ்க் உள்ள தொழில்தான். ட்ரான்ஸ்கோ 1991 ஆம் ஆண்டிலிருந்து ஆஸ்திரேலியாவில் இயங்கிவந்த ஒரு நிறுவனம்தான். 2009 ஆம் ஆண்டுதான் புதிய முகாமைத்துவத்துடன்கூடிய நிறுவனமாக வளர்ச்சியடைந்து அதன் சேவைகளை புது விதமாக விஸ்தரித்திருக்கிறது. இலங்கைக்கு மாத்திரமல்லாமல் இந்தியா – பீஜி போன்ற நாடுகளுக்கும் பொருட்களை அனுப்புகின்ற சேவையை தற்போது வழங்கி வருகிறோம். பொருட்களை அனுப்புவது என்று கூறும் போது அது பல்வேறு வகைகளில் சென்றடைவதை உறுதி செய்வதற்காக எமது சேவைகளை வித்தியாசப்படுத்தியிருக்கிறோம்.

இந்த வித்தியாசமான சேவைகளின் மூலம் வாடிக்கையாளர்கள் பயனடைவது மாத்திர மல்லாமல் இந்த துறையில் தொழில்செய்கின்ற ஏனைய நிறுவனங்களிலிருந்தும் எங்களை வித்தியாசப்படுத்துகின்றோம். அதனால்தான், ட்ரான்ஸ்கோ இன்றுவரை தனது சேவையை தரமாகவும் வித்தியாசமாகவும் வாடிக்கையாளர்கள் விரும்பும் வகையிலும் செய்துவரக்கூடியதாக உள்ளது.

**? இலங்கைக்கு பொருட்களை அனுப்புவது தொடர்பான விடயங்களை உங்களிடம் கேட்பதுதான் எமது வாசகர்களுக்கும் பொருத்தமாகவும் உதவியாகவும் இருக்கும். சொல்லுங்கள் சரித்த, வேறு நிறுவனங்கள் வழங்காத என்ன சேவையை ட்ரான்ஸ்கோ வழங்கிவருவதாக நீங்கள் பெருமை கொள்கிறீர்கள்? வாடிக்கையாளர்கள் உங்களது நிறுவனத்தை ஏன் நம்பவேண்டும் என்று கேட்டால் நீங்கள் என்ன சொல்வீர்கள்?**

ஆஸ்திரேலியாவின் எல்லா மாநிலங்களிலும் எமது கிளைகள் தற்போது இயங்கிவருவது இந்த நாட்டின் எந்த மூலையிலிருப்பவர்களுக்கும் ட்ரான்ஸ்கோ தனது உன்னதமான சேவையை வழங்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை, சிறிலங்காவுக்கு பொருட்களை அனுப்புவதில் தங்கு தடையில்லாத – உறுதியான சேவையை ஒவ்வொரு வாரமும் எமது நிறுவனம் வழங்கிவருகிறது. ஒவ்வொரு வாரமும் என்று கூறுகின்றபோது, எங்களிடம் பொருட்களை பெட்டிகளில் அடைத்து தருகின்ற மிகப்பெரிய 'கொண்டெய்னர்' ஒவ்வொரு வாரமும் சிறிலங்காவுக்கு கடல்வழியாக போய் சேர்கிறது. இதன் பிரகாரம் பார்க்கின்ற போது வருடமொன்றுக்கு முப்பதினாயிரம் பெட்டிகளை ட்ரான்ஸ்கோ கொண்டெய்னர்கள் சிறிலங்காவுக்கு கொண்டுபோய் சேர்க்கின்றன.

இதைவிட, இந்தியாவுக்கு இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவையும் பீஜிக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு கொண்டெய்னர் பொருட்களை கொண்டுபோய் சேர்க்கின்ற சேவையை வழங்கிவருகிறது.

இதற்காக நாடெங்கிலுமுள்ள எமது அலுவலகங்கள் எறும்புகள்போல பணி புரிந்தவண்ணமுள்ளன. அலுவலகங்கள் ஒவ்வொரு மாநிலத்திலும் குறிப்பிட்ட இடங்களில்தான் இருக்கின்றனவே தவிர, வாடிக்கையாளர்கள் தங்களது பொருட்கள் அடங்கிய பெட்டிகளை சேர்க்குமிடங்கள் என்று பல நூற்றுக்கணக்கான முகவரிகள் உள்ளன. அந்த முகவரிகளுக்கு போகின்ற எமது முகவர்களை அந்த பெட்டிகளை எடுத்து எங்களுக்கு அனுப்புகிறார்கள். பின்னர், அவை கொண்டய்னர்கள் மூலம் குறிப்பிட்ட நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

அந்த வகையில் ஆஸ்திரேலியாவில் இவ்வாறு பொருட்களை சிறிலங்காவுக்கு அனுப்புகின்ற என்பது சதவீதமான சேவை சந்தையில் ட்ரான்ஸ்கோதான் கோலோச்சி வருகிறது.

**? சரி, இப்போதுதான் விடயத்துக்கு வரலாம் என்று எண்ணுகிறேன். ஆஸ்திரேலியாவிலிருந்து சிறிலங்காவுக்கு வாகனங்களை அனுப்புவது தொடர்பாக பல்வேறு கதைகள் பல்வேறு மட்டங்களில் உலவுகின்றன. இங்கு பாவித்து முடித்த வாகனங்களையெல்லாம் ஊருக்கு அனுப்பி தங்களின் உறவினர்களுக்கோ குடும்பத்தினருக்கோ சேர்த்துவிடலாம் என்பது போன்ற எதிர்பார்ப்புகளும் சிலரிடம் காணப்படுகிறது. இது தொடர்பில் கொஞ்சம் விளக்கமாக கூறுங்களேன்?**

நிச்சயமாக! நிச்சயமாக!!

வாகனங்களை இன்னொரு நாட்டுக்கு அனுப்புவது லேசான காரியமல்ல. ஏகப்பட்ட வரைமுறைகள், சட்டக்கெடுபிடிகள், படிவ ஒழுங்குகள் என்று சிக்கல்கள் நிறைந்ததுதான். ஆனால், ட்ரான்ஸ்கோ அவை எல்லாவற்றையும் இலகுபடுத்தி அந்தந்த வேலைகளுக்கு அந்தந்த துறைசார் வல்லுனர்களை வேலைக்கு அமர்த்தி வாடிக்கையார்களின் மீதான பழுவை குறைத்துவிடுகிறது.

வாகனங்களை அனுப்புவதில் அடிப்படைத் தெளிவொன்றை வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ளவேண்டும்.

அதாவது, மூன்று வருடங்களுக்கு உட்பட புதிய வாகனங்களை மாத்திரமே சிறிலங்காவுக்கு அனுப்பமுடியும். அதிலும்கூட இயந்திர வலுதொடர்பிலும் மிக முக்கியமான கட்டுப்பாடுகள் உள்ளன. அதாவது, 1000 ஸிஸியிலிருந்து 1500 ஸிஸியிற்கு இடைப்பட்ட இயந்திரவலுவுடைய வாகனங்கள் மாத்திரமே சிறிலங்காவுக்கு அனுப்பக்கூடிய வாகனங்கள் என்ற தகுதியைப்பெறுகின்றன.

இதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. ஒன்று, அதரப்பழசான வாகனங்களை ஏற்றி அனுப்பினாலும் எவற்றை தங்களது நாட்டுக்குள் அனுமதிப்பது என்பது தொடர்பில் அந்தந்த நாடுகளுக்கும் சில கட்டுப்பாடுகள் உள்ளன. அத்துடன், குறிப்பிட்ட வாகனங் களின் இயந்திர வலுவுக்கு ஏற்ப வரிகள் எண்படுபவையும் வாகனத்தின் இறுதிப் பெறுமதியை தீர்மானிப்பவை. ஆக, சிறிலங்காவுக்கு அனுப்பப்படும் வாகனங்களில் 1000 ஸிஸி வாகனங்களுக்கு இறக்குமதி வரி 20 லட்சம் ரூபா அறவிடப்படுகின்றது. 15000 ஸிஸி வாகனங்களுக்கு 55 லட்சம் ரூபா இறக்குமதி வரியாக அறவிடப்படுகின்றது.




இப்படியானதொரு நிலையில், வெளிநாட்டில் வாங்கி அதிக காலம் இங்கு பாவித்துவிட்டு அனுப்பக்கூடிய தொரு வாகனத்தின் பெறுமதியோடு இறக்குமதி வரியையும் வாடிக்கையாளர்கள் கூட்டிப்பார்க்கவேண்டிய தேவை இருக்கிறது.

**? அப்படியானால், இதில் உங்களது பங்களிப்பும் சேவையும் என்ன?**

நல்ல கேள்வி. வாகனங்களை அனுப்புவதில் உள்ள பல்வேறு ஒழுங்கு முறைகளின்படி, ஆஸ்திரேலியாவிலிந்து சிறிலங்காவுக்கு ஒருவர் வாகனத்தை அனுப்புப் போகிறார் என்றால், அவரிடம் கட்டாயம் சிறிலங்கா கடவுச்சீட்டு இருக்க வேண்டும். அல்லது அவர் இரட்டைப் பிரஜா உரிமை உடையவராக அல்லது ஆஸ்திரேலியாவில் நிரந்தரவதிவிட உரிமை உடையவராக இருந்தபடி சிறிலங்காவின் குடிமகனாகத் தொடர்ந்தும் இருக்க வேணும்.

இந்த வாகனத்தை அனுப்புவதற்கு முன்னர் சிறிலங்காவில் அதற்குரிய அனுமதி பத்திரத்தை அவர் 50 ஆயிரம் ரூபா செலுத்திப்பெற்றுக் கொள்ளவேண்டும். அதன்பிரகாரம், சிறிலங்கா வங்கியில் வாகனத்துக்குரிய பணத்தை வைப்பிலிட்டுக்காண்பிக்கவேண்டும். அதன் பின்னர், அந்த ஆவணங்கள் ஆஸ்திரேலியாவிலுள்ள வங்கியுடன் தொடர்புபடுத்தப்பட்டு, ட்ரான்ஸ்கோவிற்கு இறுதி விவரங்கள் தெரியப்படுத்தப்படவேண்டும். வாகனத்தை அனுப்புவதற்கு தேவையான எல்லா ஆவணங்களும் எங்களுக்கு கிடைத்தபின்னர் நாங்கள் வாகனத்தை எந்த சேதாரமும் இல்லாமல் கொண்டு சேர்க்கவேண்டிய பொறுப்பினை ஏற்றுக்கொள்வோம்.


இந்த முழுமையான விண்ணப்பப்படிவ முறைகள் மிகவும் சிக்கலானவை. சாதாரண வாடிக்கையாளர்களுக்கு தலையிடி பிடித்தவை. அதற்காக அந்தப்படிமுறைகளை தவிர்த்துவிட முடியாது. சட்டபூர்வமாகவே எங்களது ஒழுங்குமுறைகள் ஒவ்வொன்றும் அமையும். ஆகவே, இந்த விண்ணப் படிவங்கள் நிறைந்த செயன்முறைகளை ட்ரான்ஸ்கோ சார்பில் நாங்கள் 200 டொலர்களுக்கு செய்துகொடுக்கிறோம். அதுபோல, வாகனத்தை பத்திரமாக சிறிலங்காவுக்கு கொண்டுபோய் சேர்ப்பதற்கு 2500 டொலர்கள் அறவிடுகிறோம். இவ்வளவும்தான் செலவு!

**? இந்த சேவையை நீங்கள் மாத்திரம் வழங்கவில்லையே, பல காலமாக இங்குள்ள பல நிறுவனங்கள் செய்து கொண்டுதானிருக்கின்றனவே?**

நிச்சயமாக, ஆனால் ட்ரான்ஸ்கோ சிறிலங்காவை தளமாகக்கொண்ட நிறுவனம் என்ற வகையில் அங்குள்ள வர்த்தக – அரசியல் நிலைவரங்களை கருத்திற்கொண்டு சரியான ஆலோசனைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. சிலவேளைகளில், எங்களது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட வகையிலும் வாடிக்கையாளர்களுக்கு வேறுபல சேவைகளையும்கூட செய்துகொடுக்கிறோம். அதாவது, இப்போது ஆஸ்திரேலியாவிலிருந்து சிறிலங்காவுக்கு அனுப்பப்படுகின்ற மிகப் பிரபலமான வாகனம் "எம்.ஜீ - இஸற்.எஸ்" என்ற கார். அந்தக்கார்களை நியாயமான விலையில் பெற்றுக்கொடுப்பதிலும் நாங்கள் வாடிக்கையாளர்களுக்கு உதவி செய்கிறோம்.

சரித்தவின் பதில்களில் துல்லியம் தெரிந்தது. தொடர்ச்சியாக – தெளிவான பாதையில் இயங்கிவரும் அவர்களது தொழிலின் நேர்த்தி தெரிந்தது. இன்னும் இன்னும் பல விடயங்களை சொல்லிக்கொண்டே போனார். ஆனால், எல்லா விவரங்களும் வாசகர்களுக்கு தேவை வராது என்பதால் அவற்றை இங்கு தவிர்த்துவிடுரோம்.

நீண்ட உரையாடல். நிறைவான பதில்கள்.
புன்னகை மாறாத உபசரிப்பினை கைலாகு கொடுத்து
நிறைவு செய்துகொண்டு விடைபெற்றுக்கொண்டோம்.




# இராசம்மா திருமண மண்டபம்
# Rasamma Reception Hall

Temple Road, Nallur, Jaffna. 121B கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

021 2219420 077 9799708 rasammareceptionhall.com

# வலைஞர் பதிகம்




"அடுத்தவன் மூக்கு நுனிவரைதான் நம் சுதந்திரம்.." என்பதை, யாராவது "அடுத்தவன் தொப்பை நுனிவரைதான் நம் சுதந்திரம்" என்று மாற்றவும். அவசரம்.




When she says Goodnight to you at 10pm & her last seen shows 2am.





A bus full of housewives going on a picnic fell into a river
all died .
Each husband cried for a week
one husband continued for more than two weeks !!!
When asked that did he miss his wife so much ?
he replied miserably :
No
My wife
missed
the bus !!!

காலையில் மீன்கடை பரப்பிய கிழவி, மதியம் கருவாட்டு வியாபாரியானாள். யாழ்ப்பாண வெயில்

when you got clothes as gifts but without receipts to exchange




A Junior in office dialled his boss's extension by mistake & said:
Hey, send a coffee in my cabin in 2 min
Boss Shouted: Do u know whom u r talking 2?
Jr : No!
Boss: I'm the BOSS
Jr (in same tone): do u know whom u r talking to?
Boss: No!
Jr : THANK GOD (& disconnected)







கோவில் ஒலிபெருக்கிகளை ஒழியுங்கள்... அதன்பிறகு சிங்களவனிடம் மனிதாபிமானம் பற்றிப் பேசலாம்.







கிட்டுமணி ஓட்டு போட்டுவிட்டு வெளியே வந்தார்.
பூத் ஏஜெண்டிடம் என் மனைவி ஓட்டு போட்டுட்டு போயிட்டாளா என்று கேட்டார்.
ஏஜெண்ட் லிஸ்டை புரட்டி பார்த்துவிட்டு ஆமாம் ஓட்டு போட்டுட்டு போயிட்டாங்க என்றார்.
கிட்டுமணி வருத்தத்துடன் சொன்னார் – கொஞ்சம் முன்னாடியே வந்திருந்தா அவள பார்த்திருக்கலாம்.
பூத் ஏஜெண்ட் கேட்டார் – ஏண்ணே அக்கா உங்க கூட இல்லியா?
கிட்டுமணி சொன்னார் – இல்லல தம்பி அவ செத்து 15 வருஷம் ஆச்சி – ஆனா ஓட்டு போட மட்டும் வந்துட்டு போறா.?!?!?!
இதுதான் இன்றைய அரசியல்


நல்லூரில்
ஆடைகளின்
சாம்ராஜ்யம்
LINGAA Fashion
லிங்கா பெஷன்

# மாத ராசிபலன்



## மேடம்

பணியில் தொந்தரவுகள் இருந்தாலும் செவ்வனே செய்து முடிப்பீர்கள். உடல் சோர்வு நீங்க தியானம், யோகா போன்ற பயிற்சிகளை மேற்கொள்வீர்கள். பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள். எதிரிகளின் பலம் குறையும். உத்தியோகத்தர்கள் எதிர்வரும் இடையூறுகளை சாதுரியத்துடன் சமாளிப்பீர்கள். மேலதிகாரிகள் அனுசரணையாக நடந்து கொள்வர். பெண்மணிகள் குடும்பத்தில் அமைதியையும் ஒற்றுமையையும் காண்பார்கள். உறவினர்களின் ஆதரவுடன் சுப நிகழ்ச்சிகள் நடத்துவீர்கள். மாணவமணிகள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். கடின உழைப்பால் இலக்கை எட்டிப் பிடிப்பீர்கள். வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். அதிரடி இலாபம் உண்டு. வட்டிக்கு வாங்கிய கடனில் ஒரு பகுதியைச் செலுத்தி முடிப்பீர்கள். பெண்கள் பெற்றோருடன் கலந்தாலோசித்து வருங்காலம் குறித்த சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். கலைத்துறையினருக்கு வெளிநாட்டுத் தொடர்புடைய நிறுவனங்களில் இருந்து வாய்ப்புகள் வரும்.

## இடபம்

மன அமைதி கிட்டும். பணவரவு சீராக இருக்கும். வேலைகளைக் குறிப்பிட்ட நேரத்துக்குள் முடிப்பீர்கள். உறவினர்களின் மனக்கசப்புக்கு ஆளாவீர்கள். உங்களைப் புரிந்துக்கொள்ளாதவர்கள் செய்யும் அவமரியாதைகளைப் புறந்தள்ளவும். உத்தியோகத்தர்கள் அலைபாயும் மனதைக் கட்டுப்படுத்தவும். வேலைகளில் மனதைச் செலுத்தவும். பெண்மணிகள் கணவரிடம் ஒற்றுமையோடு பழகுவார்கள். இருப்பினும் காரணமில்லாமல் மனதில் சற்று அமைதி குறையும். மாணவமணிகள் அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள். அவர்களின் கோரிக்கைகள் நிறைவேறும். நெருங்கிப் பழகிய ஒரு சிலர் திடீரென்று பார்த்தும் பார்க்காமலும் செல்வார்கள். பணவரவு உண்டு. பிள்ளைகளின் பிடிவாதப்போக்கு மாறும். அவர்கள் வெளிநாடு சென்று உயர்கல்வி பெற விசா கிடைக்கும். புதுப் பொறுப்புக ளும், பதவிகளும் தேடி வரும். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் உங்களை இணைத்துக் கொள்வீர்கள். ஆன்மிக நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள்.

## மிதுனம்

தர்ம சிந்தனைகள் மேலோங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலைகள் நிலவும். திட்டமிட்ட வேலைகளை வெற்றிகரமாக முடிப்பீர்கள். பேச்சிலும் பயணத்திலும் கவனமாக இருக்கவும். சிறு முயற்சிகளும் இரட்டிப்பு வெற்றியை கொடுக்கும். உத்தியோகத்தர்கள் கடமை தவறாமல் உழைக்க முயற்சிக்கவும். வேலைகளைத் தள்ளிப்போடாமல் உடனுக்குடன் செய்யவும். வியாபாரிகள் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டிய காலமிது. பெண்மணிகளுக்கு கணவரிடம் நிலவி வந்த கருத்து வேறுபாடுகள் குறையும். பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்க நேரிடும். மாணவமணிகள் படிப்பில் கவனம் செலுத்தவும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழந்து விடாதீர்கள். காரசாரமாகப் பேசிப் பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். கன்னிப் பெண்களின் காதல் கசந்து இனிக்கும். உயர்கல்வியைப் போராடி முடிப்பீர்கள். மாணவர்கள் விளையாட்டின் போது கவனம் தேவை. விரும்பிய பாடப்பிரிவில் சேர கொஞ்சம் போராட வேண்டியிருக்கும்.

## கடகம்

எடுத்த காரியங்களில் வெற்றியடைவீர்கள். தொழிலில் நிலவிய தடைகள் நீங்கும். நன்மைகள் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். பெற்றோர் வழியில் இருந்து வந்த குழப்பங்கள் நீங்கும். நம்பிக்கையுடன் ஆன்மிகத்தில் ஈடுபடுவீர்கள்.உத்தியோகத்தர்களுக்கு அலுவலக வேலைகள் சுமுகமாக முடியும். சிலருக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்க வாய்ப்புள்ளது. வியாபாரிகளுக்கு கொடுக்கல் வாங்கல்கள் நல்லபடியாக முடியும். பெண்மணிகள் குடும்பத்தில் ஒற்றுமையை காண்பார்கள். வீட்டில் இருந்தப் பிரச்சினைகள் தீரும். திருமணப் பேச்சு வார்த்தைகள் நல்ல விதத்தில் முடியும். வாகனம் வாங்குவீர்கள். வேலைச்சுமை அதிகரிக்கும். சில வேலைகளை இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டி வரும். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி செலவுகள் துரத்திக் கொண்டேயிருக்கும். சில செலவுகளை நீங்கள் கட்டுப்படுத்தி சிக்கனமாக இருந்தாலும் பணப் பற்றாக்குறை நீடிக்கும். பங்குதாரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள்.

## சிம்மம்

தடைகள் விலகும். யோகபாக்கியங்கள் அதிகரிக்கும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். கனவுகளை நனவாக்க முயலுங்கள். பழைய கடன்களைச் செலுத்துங்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனமாக இருக்கவும். மனக்கவலைகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரித்தாலும் உழைப்புக்கேற்ற பலன் கிட்டும். விரும்பிய இடமாற்றங்கள் கிடைக்க வாய்ப்பு இல்லை. வியாபாரிகள் சலிப்பில்லாமல் உழைத்தால் பலன்களைப் பெறலாம். பெண்மணிகளுக்கு நல்லது கெட்டது கலந்து வரும். உடல் ஆரோக்கியம் சற்று பாதிக்கப்படலாம். மாணவமணிகள் கல்வியில் சற்று கூடுதல் கவனம் செலுத்தவும். வழக்கில் வெற்றியுண்டு. பிரபலங்களின் நட்பு கிடைக்கும். பழைய கடனைத் தீர்க்க புது வழி பிறக்கும். உடன்பிறந்தவர்களிடையே இருந்து வந்த மனக்கசப்புகள் விலகும். சொத்துப் பிரச்சினைகள் சுமுகமாக முடியும். திடீர் யோகம், நீண்ட நாள் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். அரசியலில் ஆர்வம் பிறக்கும். அக்கம் பக்கம் வீட்டாரின் ஆதரவு கிட்டும்.

## கன்னி

செயல்களை திட்டமிட்டு செய்து முடிப்பீர்கள். தெய்வீகப் பணிகளில் ஈடுபடுவீர்கள். எதையும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்துப் பேசவும். தேக ஆரோக்கியம் நன்றாகவே இருக்கும். குடும்பத்தினருடன் சுற்றுலா சென்று வருவீர்கள்.உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைப்பதில் தடைகள் ஏற்படும். ஆனால் சக ஊழியர்கள் உங்களுக்கு உதவியாக இருப்பார்கள். வியாபாரிகள் நன்கு ஆலோசித்து கூடுதல் முதலீடுகளைச் செய்யவும். பெண்மணிகளுக்கு கணவரிடம் ஒற்றுமை அதிகரிக்கும். பணவரவுடன் கௌரவமும் கூடும். புதிய ஆடை ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். மாணவமணிகள் படிப்பில் அக்கறை காட்டவும். தன்னம்பிக்கை துளிர்விடும். அழகு, இளமை கூடும். தன இலாபம் அதிகரிக்கும். உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். செல்வாக்கு உயரும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். கணவன், மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் செலவுகள் இருக்கும். ஆனால், அதே நேரத்தில் அவர்களால் பெருமைத்தரக்கூடிய சம்பவங்களும் நிகழும்.

## துலாம்

திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பதில் சில சிரமங்கள் ஏற்படும். இருப்பினும் மனஉறுதியுடன் அவற்றைத் தகர்த்தெறிவீர்கள். சிலருக்கு புதிய சொத்துகள் வாங்கும் யோகம் உண்டாகும். எதிர்கால முன்னேற்றத்திற்கு எடுக்கும் முயற்சிகள் பலனளிக்கும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிப்பதால் அதற்கேற்றவாறு உழைக்க நேரிடும். சக ஊழியர்களின் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். பெண்மணிகளுக்கு குழந்தைகள் மூலம் மகிழ்ச்சி கிட்டும். குடும்பத்தாரிடமும் நன்மதிப்பு பெறுவீர்கள். பழைய நண்பர்கள் உதவுவார்கள். கௌரவப் பதவிகள் தேடி வரும். ஆரோக்கியம் பாதிக்கும். தலை வலி, அடிவயிற்றில் வலி, தூக்கமின்மை, செரிமானக் கோளாறு வந்து நீங்கும். பெரிய நோய்கள் இருப்பதைப் போல அவ்வப்போது நினைத்துக் குழம்புவீர்கள். எதிலும் வெற்றி உண்டு. விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். வீடு, மனை வாங்குவது, விற்பது இலாபகரமாக முடியும். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி உண்டாகும்.

## விருச்சிகம்

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் குதூகலமும் நிறையும். மனதிற்கினிய செய்திகள் வந்து சேரும். எதிரிகளாலும் நன்மை அடைவீர்கள். பேசும்போது கடினமான வார்த்தைகளை பேச வேண்டாம்.உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் நிறைவேறும். மனதை அரித்து வந்த பிரச்னைகள் விலகும். பணியில் நிலவி வந்த கெடுபிடிகள் குறையும். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்த லாபம் வந்து சேரும். பெண்மணிகளுக்கு குடும்பத்தில் மதிப்பு உயரும். கணவரிடம் ஒற்றுமை அதிகரிக்கும். மாணவமணிகள் வீண்வாக்குவாதங்களில் ஈடுபடவேண்டாம். நண்பர்களிடம் சுமுகமாகப் பழகவும். உறவினர், நண்பர்கள் வீட்டு விசேடங்களை முன்னின்று நடத்த வேண்டிய சூழ்நிலை வரும். பழைய நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். நட்பு வட்டம் விரிவடையும். கணவன், மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். மனைவி வழி உறவினர்கள் உறுதுணையாக இருப்பார்கள். தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வெளிநாடு சென்று வருவீர்கள்.

## தனுசு

உங்கள் செல்வாக்கு உயரும். தொழிலில் தடைகள் விலகி நன்மைகள் அதிகரிக்கும். குடும்பத்தினரிடம் அன்பும் பாசமும் வளரும். உறவினர்களாலும் நண்பர்களாலும் காரிய அனுகூலம் ஏற்படும். பயணங்களின்போது எச்சரிக்கை தேவை. உத்தியோகத்தர்கள் சிறப்பாகப் பணியாற்றுவார்கள். எதிர்பாராத பதவி உயர்வு தேடி வரும். வியாபாரிகள் எதிர்பார்த்த வருமானத்தைப் பெறுவார்கள். பெண்மணிகள் கணவரின் ஆதவைப் பெற்று மகிழ்வீர்கள். உடல் ஆரோக்கியத்திலும் கவனம் தேவை. மாணவமணிகள் கல்வியில் விசேடபயிற்சிகள் செய்து மதிப்பெண்களை அள்ளுவார்கள். காலச்சூழ்நிலைக்கு தகுந்தாற் போல் உங்களை மாற்றிக் கொள்வீர்கள். தன்னம்பிக்கை பிறக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். கல்வியாளர்கள், அறிஞர்களின் அறிமுகம் கிடைக்கும். இழுபறியாக இருந்த வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வீட்டை மாற்றுவது, விரிவுபடுத்திக் கட்டுவது போன்ற முயற்சிகள் வெற்றியடையும். செலவுககள் அதிகரிக்கும். அநாவசியச் செலவுகளைத் தவிர்க்கப் பாருங்கள்.

## மகரம்

குடும்பத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடும். நீண்ட கால எண்ணங்கள் ஈடேறும். கடின உழைப்புக்குப்பிறகே வெற்றி தேடி வரும். சிறு தொல்லைகள் கொடுத்து வந்தவர்கள் அடங்கி விடுவார்கள். உடன்பிறந்தோர் உதவியாக இருப்பார்கள்.உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகள் அனுசரணையாக இருக்க மாட்டார்கள். சக ஊழியர்களின் உதவியுடன் திட்டமிட்ட வேலைகளை வெற்றிகரமாக முடிப்பீர்கள். அலுவலக ரீதியான பயணங்கள் நன்மையாக இராது. பெண்மணிகளுக்கு கணவரிடம் ஒற்றுமை அதிகரிக்கும். உறவினர்களை அனுசரித்து நடந்து அவர்களின் ஆதரவைப் பெறுவார்கள். மாணவ மணிகளுக்கு படிப்பில் கவனம் அதிகரிக்கும். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். வெளுத்ததெல்லாம் பால் அல்ல என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தனித்திறமையை வெளிப்படுத்துவீர்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். மேலதிகாரி அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள். புது வாய்ப்புகளும் தேடி வரும். சம்பளப் பணம் கைக்கு வரும்.

## கும்பம்

மனதில் சிறு சலிப்புகள் ஏற்பட்டாலும் விரைவாக அதிலிருந்து விடுபடுவீர்கள். பொருளாதாரத்தில் முன்னேற்றம் தென்படும். ஆன்மீகத்தில் ஈடுபட்டு மன பலம் பெறுவீர்கள். பழைய கடன்களை திருப்பிச் செலுத்துவீர்கள்.உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். சிலருக்கு விரும்பிய இடமாற்றமும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு வியாபாரத்தில் வளர்ச்சி உண்டாகும். பெண்மணிகள் ஆடம்பர பொருள்கள் வாங்குவர். குடும்பத்தில் சந்தோஷம் நிறையும். ஆன்மிகத்தில் கவனம் செலுத்துவீர்கள். மாணவமணிகள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். ஆசிரியர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். கொள்கைக் கோட்பாடுகளை விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். கன்னிப் பெண்கள் மனதை அலைபாயவிடாமல் ஒருநிலைப் படுத்துங்கள். பழைய தோழிகள் உதவுவார்கள். மாணவர்களுக்கு அவ்வப்போது மறதி, மந்தம் வந்து விலகும். ஆசிரியர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். வேலையாட்களை அனுசரித்துப் போங்கள்.

## மீனம்

பொருளாதார சூழல் நன்றாகவே இருக்கும். எடுத்த காரியங்கள் வெற்றியடையும். மதிப்பு மரியாதை அதிகரிக்கும். உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவச் செலவுகள் செய்ய நேரிடலாம். திட்டமிட்ட வேலைகளை மிகவும் கவனத்துடன் செய்யவும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிப்பதால் கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும். மேலதிகாரிகள் உங்களிடம் சற்று கடுமையாகவே நடந்து கொள்வர்.வியாபாரிகள் முயற்சிக்குத் தகுந்த லாபத்தைப் பெறுவார்கள். பெண்மணிகளுக்கு இது மகிழ்ச்சிகரமான காலம். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். குழந்தைகளால் சந்தோஷம் கிட்டும். மாணவமணிகள் படிப்பில் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். பெற்றோரின் ஆதரவு உண்டு. பழைய கடனை நினைத்தும் அவ்வப்போது அச்சப்படுவீர்கள். சகோதரங்கள் உங்களைப் புரிந்துக் கொள்ளாமல் பேசுவார்கள். கன்னிப் பெண்களுக்கு கசந்த காதல் இனிக்கும். பெற்றோர் உங்களைப் புரிந்து கொள்வார்கள். மாணவர்கள் வகுப்பாசிரியர் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள்.

first national REAL ESTATE | Hall & Partners

## Interested in knowing what your property is worth?



**Property value and house prices change with the market. Call me direct to get a view of your current property value.**

**I will happily appraise your property, giving you you an up to date market analysis free of charge with no obligation to sell.**

## SP Shagi - 0413 076 585

**WE TAKE THE WORRY OUT OF PROPERTY INVESTMENT**

*We go the extra mile for our Landlords*



## How would you like 3 months Free Management fees?

- Do you have investment properties not managed by our agency?
- Do you know anyone with rental properties that are looking for better service?

Refer a friend or transfer your property to our office and we will give you

**3 MONTHS FREE MANAGEMENT FEES.**

Contact us today to discuss just how easy it is to make the change!

**9792 0265**

**sheena.p@hallfn.com.au**




| Month | Final cut-off date | Est arrival in SL |
|---|---|---|
| February | 2019-02-02 | 2019-03-12 |
| February | 2019-02-09* | 2019-03-19 |
| February | 2019-02-16 | 2019-03-26 |
| February | 2019-02-23 | 2019-04-02 |
| March | 2019-03-02 | 2019-04-09 |
| March | 2019-03-09* | 2019-04-16 |
| March | 2019-03-16 | 2019-04-23 |
| March | 2019-03-23* | 2019-04-30 |
| March | 2019-03-30* | 2019-05-07 |
| April | 2019-04-06 | 2019-05-14 |
| April | 2019-04-13* | 2019-05-21 |
| April | 2019-04-27 | 2019-06-04 |